தலைப்பு 126 – கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 126 – கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வீ அமைச்சின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது கல்வி உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சின் பொது திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம்முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1. கணக்குகளை சமர்ப்பித்தல்

கல்வி உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பின்வரும் வருடாந்த நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) வருடாந்த நிதிக் கூற்றுக்கள்		
(i) யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள்		
1999 இன் 44 ஆம் இலக்க யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதிய அதிகாரச் சட்டத்தின் 9.2, 9.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் மற்றும் 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 4.4 (அ) பந்தி மற்றும் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து இரண்டு மாதங்களுக்குள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களை செயலாற்றல் அறிக்கையுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும் என காட்டப்பட்டிருந்தும் 2015 – 2024 காலப் பகுதிக்குரிய 10	இலங்கை யுனெஸ்கோ ஆணைக்குழுவின் கணக்கீட்டு உத்தியோத்தராக செயலாளர் நாயகம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அப்பதவி 2025 சனவரியிலிருந்து வெற்றிடமாக காணப்பட்டது. செயலாளர் நாயகம் நியமிக்கப்பட்டதன் பின்னர் கணக்குகளில் கையொப்பமிட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக்கோவை மற்றும் யுனெஸ்கோ புலமைப்பரிசில் நிதிய அதிகார சட்டத்தின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்களை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.		

(ii) **தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய (TEDP) நிதிக்கூற்றுக்கள்**

புரிந்துணர்வு உடண்படிக்கையின் 10 ஆம் பந்திக்கு இணங்க வெளிநாட்டு கடன் செயற்திட்டமான தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய (TEDP) நிதிக் கூற்றுக்கள் வருடாந்தம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டிலிருந்து அந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளை உள்ளடக்கி 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய இறுதிக் கணக்கறிக்கைகள் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மிகுதி ஆண்டுகளுக்குரிய இறுதி கணக்கறிக்கைகளை தயாரிப்பதும் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவை மற்றும் புரிந்துணர்வு உடண்படிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேணடும்.

1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வெளிப்படுத்தப்படாமை

ஏதாவதொரு அறிக்கையிடுகின்ற நிறுவனத்திற்கு விசேடத்துவமாக கொடுக்கல் வாங்கல்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது அந்த விசேடத்துவமான கொடுக்கல் வாங்கலுக்கு தேவையான வெளிப்படுத்தலானது ‘‘அறிக்கையிடும் அடிப்படை’’ இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் என 2025 பெப்ரவரி 18 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் SA/MAA/02/01/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள 06/2024 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கல்வி அமைச்சினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றில் அவ்வாறு வெளிப்படுத்தியிருக்காத சந்தர்ப்பம் பின்வருமாறு இருந்தது.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	கல்வி அமைச்சிற்குரிய நிர்மாண நடவடிக்கைகளுக்கு மத்தியில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிர்மாணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட ஒப்பந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் பூர்த்தி செய்த வேலைகளின் ரூபா 13,970.39	உரிய அனைத்து அலுவலகங்களிடமிருந்தும் அறிக்கைகளை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அரசாங்க கணக்குள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் வழங்கப்பட்ட 2025	இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையின் கீழ் குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க கல்வி அமைச்சின் பொதுத் திறைசேரியின் மற்றும்

	ஒவ்வொரு செயற்திட்டத்திற்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பெப்ரவரி 18 ஆந் திகதியளவில் அதனை 2024 ஆம் ஆண்டின் போது நடைமுறைப்படுத்துவது சிக்கலானதாகும்.	பாராளுமன்றத்தின் அந்த தீர்மாணங்களை எடுக்கும் போது அந்த தீர்மாணங்களுக்கு தாக்கம் ஏற்படுத்தக் கூடிய அனைத்து முக்கியமான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	சுரக்ஸா மாணவர் காப்புறுதியின் கீழ் 2021/2022 காலப்பகுதிக்குரிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 67.8 மில்லியன் செலுத்தப்படாத உரிமை கோரல் காணப்பட்டமை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த உரிமை கோரல் பணம் உறுதியாக மீளளிப்பு செய்யப்பட வேண்டுமா இல்லையா என்பது தொடர்பாக தீர்மாணம் எடுக்கப்படவில்லை. நிச்சய மற்ற தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாததனால் இப்பணம் 2024 திசெம்பர் 31 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படவில்லை.	- மேற்படி -
(iii)	NEMIS தரவு முறைமையினை அமுல்படுத்துவதற்கான SESIP நிகழ்ச்சதித்திட்டத்தின் 53 துனை வெளிப்படுத்தல் இணைப்பு குறிகாட்டிகளை அடைந்து கொள்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 78.4 மில்லியன் பெறுமதியான 328 லெப்டொப் கணனிகளானது வழக்கு நடவடிக்கைகளின் காரணமாக 2023 இல் பொறுப்பேற்கப்பட்ட திகதியிலிருந்து ஒன்றரை ஆண்டுகள் காலமாக மத்திய களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	NEMIS தொடர்பான கோவைகளும் அறிக்கைகளும் கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் நிதி நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்காக உரிய தரப்பினர்களால் வேண்டிக் கொள்ளப்பட்ட அனைத்து சந்தர்ப்பத்திலும் வழங்கப்பட்டுள்ளது. முறைமையின் நிகழ்கால நிலைமை தொடர்பாக எந்த சந்தர்ப்பத்திலும் அறிக்கையிடும் இயலுமை காணப்படுகின்றது.	- மேற்படி -

(ஆ) மூலதன செலவுகள்

நிதிக் கூற்றுக்களுக்குரிய மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி பயிற்சி (TVET) துறையில் தொழில் வாய்ப்பினை வழங்கும் பின்னனியை தயார்படுத்தும் செயற்திட்டத்திற்காக ஆண்டின் போது இரண்டு செலவு விடயங்களின் கீழ் ரூபா 600 மில்லியன் மற்றும் கொழும்பு தொழில்சார் பயிற்சி நிலையம் மற்றும் கம்பஹா தொழில்நுட்ப கல்லூரியினை ஸ்தாபிக்கும் செயற்றிட்டத்திற்காக ரூபா 400 மில்லியன் என்பனவாக ரூபா 1000 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்தும் செலவு அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்ததன் காரணமாக அச்செலவுகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	TVET Career Platform செயற்றிட்டம் தொடர்பான செயல் முன்னேற்றத்தினை அனுப்பிவைக்குமாறு பல சந்தர்ப்பங்களில் KOICA நிறுவனத்திற்கு எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக KOICA நிறுவனத்தினால் பதில் தரப்படாததனால் பிரிவினால் தயாரிக்கப்பட்ட அனைத்து அறிக்கைகளையும் இச்செயற்திட்டம் தொடர்பான நிதிசார் செயல் முன்னேற்றத்தினை அறிக்கையிடுவதற்கு முடியாதுள்ளது.	கணக்கு காலப்பகுதிக்குரியதான அணைத்து செலவுகளையும் அறிக்கையிடுவதற்கு முடியுமான ஒரு நடைமுறைளினை உருவாக்கி நிதி ஏற்பாடு ஒதுக்கீட்டு செய்யப்பட்ட செயற்திட்டங்களுக்குரிய செலவுகள் நிர்ணயிக்கப்பட்டவாறு நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும்.
(ii)	இசுருபாய கல்வி அமைச்சில் கட்டடங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கட்டம் II இற்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பித்த உப கொடுப்பனவு சான்றிதழின் (IPC) II பிரகாரம் இறுதியாக கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதியில் மொத்தமாக ரூபா 218.5 மில்லியன் நடைமுறை வேலையின் (WIP) கீழ் பதியப்பட்டு மேம்படுத்தல் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும் அதனை திருத்தம் செய்தல் செலவாக 126-1-2-0-2001 செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருத்தது.	இக்கட்டிடத்தின் 6 மற்றும் 7 ஆம் மாடிகளை திருத்தம் செய்தல் என்பதனால் அதன் கொடுப்பனவு நடவடிக்கை 123-01-02-00-2001(11) ஆம் இலக்க செலவு விடயத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டது.	6 மற்றும் 7 ஆம் மாடிகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் செய்தல் செயற்பாடுகள் சரியாக உரிய பிரிவின் மூலம் பெற்று மூலதனமாக்கப்பட்ட வேண்டிய செலவு விடயங்களை சரியாக அடையாளங்கண்டு சரியான செலவு விடயத்திற்கு மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்வதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(iii)	KOICA உதவி செயற்திட்டத்தின் கீழ் நாரங்கொல்லே இல் நிர்மாணிக்கப்படும் தொழில்நுட்ப தேசிய கல்விக் கல்லூரிக்கு 2024 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 384.5 மில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக ஒரு புதிய செலவு விடயத்தின் கீழ் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது கிடைத்த உபகரணங்களுக்கு மேலதிகமாக அடுத்து வரும் ஆண்டின் போது கிடைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ரூபா 184.35 மில்லியன் பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டின் போது சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நிதி ஏற்பாடு வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் ஆண்டின் இறுதிவரை நிதி ஏற்பாடு கிடைக்காததனால் இப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் ஆகிய சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. எவ்வாறாயினும், 2025 ஆம் ஆண்டில் மேற்கூறிய பொருட்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு தேவையான செலவு விடயங்கள் மற்றும் பெறுமதி வேண்டிக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அச்செலவு விடயமும் நிதி ஏற்பாடும் ஒதுக்கீடு செய்யப்பட்ட உடன் சொத்துக்கள் கணக்கீடு செய்யப்படும்.	கணக்கு காலப்பதுதிக்கு உரியதான அணைத்து செலவுகளையும் அறிக்கையிடுவதற்கு முடியுமான ஒரு நடைமுறையினை உருவாக்கி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்குரிய செலவுகளை நிர்ணயிக்கபட்டவாறு நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் வேண்டும். உடன்படிக்கை செய்யப்பட்டவாறு நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் நிதி ஏற்பாட்டினை திறைசேரியிடமிருந்து வேண்டிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து உரிய கணக்கு காலப்பகுதிக்குள் கணக்கீடு செய்யும் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளவாறு பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பொருள் உதவிகளின் பெறுமதியையும் நிதிக்கூற்றுக்ளில் கணக்கீடு செய்யபடும் வகையில் மற்றும் வெளிப்படுத்தும் வகையில் நடைமுறைகள் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.
(iv)	பல்லின மற்றும் மும்மொழிக் கல்வியுடன் புதிய தேசிய பாடசாலையினை நிர்மாணிக்கும் செயற்றிட்டத்தின் 01 ஆம் கட்டத்திற்காக இந்திய அரசாங்கத்தினால் 2022 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளபடட்ட ரூபா 10 மில்லியன் செலவும் 2024 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 11.9 மில்லியன் செலவும் முறையே 2022 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் நடைமுறை	இந்திய அரசாங்கத்தினால் ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை செய்து இந்திய உயர் ஸ்தானிகராலயத்தினால் ஒப்பந்தக்காரருக்கு நேரடியாக கொடுப்பனவு செய்யப்படும். 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவு முற்பண கொடுப்பனவாகும். அதில் 2022 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் செய்யப்படவில்லை. 2022 மற்றும் 2024 இறுதியில் செலுத்தப்பட்ட தொகையும் அமைச்சிற்கு அறிக்கையிடப்பட்டது 2025 ஆம் ஆண்டிலாகும். இந்த ஆண்டின் போது உரிய செலவுளை கணக்கீடு	கணக்கு காலப்பகுதிக்கு தொடர்புபட்ட அனைத்து செலவுகளையும் அறிக்கையிடக்கூடிய ஒரு நடைமுறையினை ஸ்தாபித்து ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்குக்குரிய செலவுகளை நிர்ணயிக்கப்பட்டவாறு அக்காலப் பகுதிக்கான நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் வேண்டும். ரூபா 21.9 மில்லியனான மூலதனச் செலவுகளை கணக்கீடு செய்வது தொடர்பாக

	வேலைக் கணக்கின் மீதி ரூபா 21.9 மில்லியனால் குறைத்து கணக்கீடு செய்யப்படிருந்தது.	செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிறைசேரியின் அறிவுறுத்தலினைப் பெற்று அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(v)	மீளாய்வாண்டு வரை அமைச்சின் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகள் சம்பந்தமாக பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு கணனி மென் பொருள், கணனி நிகழ்ச்சித்திட்டம், கணனி தரவு முறைமை என்பவற்றை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்ளில் கட்புலனாக சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை	செயற்பாடுகள் சம்பந்தமாக பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு கணனி மென் பொருள், கணனி நிகழ்ச்சித்திட்டம், கணனி தரவு முறைமை என்பவற்றை மதிப்பீடு செய்து 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்ளில் கட்புலனாக சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கு காலப்பகுதிக்கு உறுதியான அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களின் மூலம் உருவாகின்ற செலவுகள் வருமானங்களைப் போல சொத்துக்களும் பெறுப்புக்களும் அறிக்கையிடப்படும் வகையில் அந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் அனைத்து பிரிவுகளின் மூலம் தகவல்களைப் பெற்று மீளாய்வுக் காலப்பகுதிக்குரிய சொத்துக்களை கணக்கீடு செய்யக் கூடிய சிறந்த கட்டுப்பாட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(vi)	கொரியா வொன் 2.15 மில்லியன் மதிப்பீட்டு செலவின் கீழ் 2023 மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட நியாகம தொழிற் பயிற்சி நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்திட்டம் 2025 மே மாதத்தில் முடிவு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் ரூபா 478 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட இந்த இறுதிக் கட்டத்தில் காணப்படும் செயற்திட்டத்திற்காக காலப்பகுதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை அடையாளம் காண்பதற்கு முடியாததன் அடிப்படையில் ஆண்டிற்கான செலவுகள் ரூபா 17.5 மில்லியன் மாத்திரம் திறன் அபிவிருத்தி தொழிற கல்வி பிரிவினால் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	உரிய மாணியத்தை வழங்கிய கொரியாவின் மனித வளங்கள் நிறுவனத்தினால் செயல் முன்னேற்ற அறிக்கையினை வழங்குவதிலுள்ள தாமத்த்தின் காரணமாக அந்த ஆண்டிற்கான செலவுகள் ரூபா 17.48 மில்லியனாக அறிகையிடப்பட்டுள்ளது. உரிய பௌதீக மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றங்களை உள்ளடக்கிய அறிக்கையினை அமைச்சிற்கு அனுப்பிவைத்ததன் பின்னர் அச்செயற்றிட்டத்தின் செலவுகள் ரூபா 421.74 மில்லியனாக இருக்க வேண்டும்	செயற்திட்டம் தொடர்பான அமைச்சின் கண்காணிப்பு பொருண்மையான மட்டத்தில் காணப்பட வேண்டியதுடன் நிதி செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் தகவல்கள் தொடர்பாக நாளதுவரையாக்கி கணக்கு காலப்பகுதிக்குரியதான அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் மூலம் உருவாகின்ற செலவுகள் வருமானங்களைப் போல சொத்துக்களும் பொறுப்புக்களும் அறிக்கையிடப்படும் வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் அனைத்து பிரிவுகளின் மூலம் தகவல்களை பெற்று மீளாய்வு காலப்பகுதிக்குரிய

			சொத்துக்களை கணக்கீடு செய்யக் கூடிய சிறந்த கட்டுப்பாட்டினை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான கணக்கிணக்க கூற்றுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்ளின் முற்பணங்கள் பீ கணக்கின் மீதி ரூபா 3,049.18 மில்லியனாக இருந்த போதிலும் தனித்தனி மீதிகளை வகைபப்படுத்தும் பொழிப்புக்கு இணங்க மீதி ரூபா 3,043.66 மில்லியனாக இருந்ததனால் ரூபா 5.5 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.	மீதியை தீர்த்து வைப்பதற்காக பல சந்தர்ப்பங்களில் மாகாண கல்வி அலுவலகங்கள் மற்றும் வலய கல்வி அலுவலகங்களின் பிரதான கணக்காளர்கள், காணக்காளர்கள் மற்றும் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் ஆகியோரை இந்த அமைச்சிற்கு அழைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், ஆலோசணைகளை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன் உரிய செயலமர்வுகளின் போது ஆலோசனைகள் வழங்கியவாறு இந்த மீதிகளை அடையாளங்கண்டு சரி செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.	முற்பணங்கள் பீ கணக்கின் மீதிக்கும் தனித்தனி மீதிகளின வகைப்படுத்தல் பொழிப்பின் மீதிக்குமிடையே வித்தியாசத்தினை அடையாளங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	திறைசேரி ஏடுகளின் பிரகாரம் முற்பணங்கள் பீ கணக்கின் மீதி ரூபா 3,104.62 மில்லியனாக இருந்த போதிலும் சரிசெய்யப்பட்ட முற்பணக் கட்டுப்பாட்டு பீ கணக்கின் மீதி ரூபா 3,049.18 மில்லியனாக இருந்ததனால் இந்த இரண்டு மீதிகளுக்குமிடையே ரூபா 55.44 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.	அமைச்சினால் 09 மாகாணங்கள் 100 வலயங்கள் 20 கல்விக் கல்லூரிகள், உயர் கல்வி, திறன் மற்றும் பிரிவேனாக்கள் ஆகிய அனைத்து பிரிவுகளையும் ஒன்றிணைத்து கணக்கு தயாரிக்கபடுவதனால் மேற்கூறிய வித்தியாசம் ஏற்பட்டது எந்த பிரிவில் என்பதனை ஆராய்ந்து பார்க்கும் நடவடிக்கை தற்பொழுது இடம்பெற்று வருவதுடன் இந்த வித்தியாசத்தினை எதிர்வரும் காலங்களில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஒவ்வொரு பிரிவு அல்லது அலகுக்கு இணங்க ஏதாவது நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்கு ஒரு தடவை ஒப்பீடு செய்தலினை மேற்கொள்ளும் வகையில் ஒரு நடைமுறையினை ஸ்தாபித்து காலரீதியாக மீதிகளின் வித்தியாசத்தை அடையாளங்கண்டு சரி செய்தல் வேண்டும்.

(iii)	முற்பணங்கள் பீ கட்டுப்பாட்டுக் கணக்கின் திருத்திய மீதி ரூபா 3,104.62 மில்லியன் ஆனதுடன் திருத்திய தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தம் ரூபா 3,079 மில்லியனாக இருந்தனால் இந்த இரண்டு மீதிகளுக்குமிடையே ரூபா 25.53 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீனாய்வாண்டில் அந்த வித்தியாசம் ரூபா 595,886 ஆல் அதிகரித்திருந்தது.	தற்பொழுது அரசாங்க உத்தியோகத்தர்களின் பீ கணக்கின் கணக்காய்வு ஐய வினாவில் காட்டப்பட்டுள்ள வித்தியாசத்திற்கான காரணம் 1983 மற்றும் 1990 காலங்களில் இடம்பெற்ற புத்தகங்கள் அழிவடைந்தமை விடயமும் தாக்கமளித்துள்ளது. அவ்வாறே கடந்த 04 ஆண்டுகளின் முற்பணங்கள் கணக்கின் பிரகாரம் மீதிகள் ஒன்றுக்கொண்று வித்தியாசமான பெறுமதி காணப்பட்டது என ஏற்றுக்கொள்கிறேன். இந்த வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்ப்பதற்காக கல்வி அமைச்சசுடன் தொடர்புபட்ட அனைத்து பிரிவுகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தகவல்களை கோரும் படிவத்தினை மீண்டும் மீளாய்வு செய்து திருத்தம் செய்து புதிய ஆலோசனைக் கோவை மற்றும் புதிய படிவத்தினை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கை ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது.	கடன் மீதிகளின் முன்னைய காலப்பகுத்தியில் காணப்பட்ட வித்தியாசங்களை தீர்த்துவைத்துக் கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுவதுடன் நிகழ்காலக் கணக்கு காலப் பகுதியில் அவ்வாறான வித்தியாசங்கள் இடம் பெறாமல் இருப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் கவனித்துக்கொள்ள வேண்டியதுடன் அனைத்து வித்தியாசங்களையும் அடையாளங்கண்டு சரிசெய்தல் வேண்டும்.

(ஈ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	திறைசேரி ஏடுகளின் ACA 6/SA 82) பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்ளின் மீதி ரூபா 180,717.73 மில்லியனாக இருந்தது. 2024 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த மீதி ரூபா 182,425.25 மில்லியனாக இருந்தனால் ரூபா 1,707.5 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.	2023 திசெம்பர் 31 மற்றும் 2024 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்கள் கணக்கின் மீதிகளுக்கிடையேயான வித்தியாசங்களுக்கான காரணமாக இருந்ததானது 2023 ஆம் ஆண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள் கணக்கினை தயாரிக்கும் போது உப அலுவலகங்கள் அனைத்தினதும் நிதியற்ற சொத்துக்கள் கோவைகள்	ஆரம்ப மீதியும் இறுதி மீதியும் சமனாகும் வகையில் சரியாக கணக்குகள் தயாரிப்படுதல் வேண்டும். வித்தியாசத்திற்கான காரணமாக வெளிப்படுத்தப்பட்ட நிலைமைகளை சரி செய்யும் போது நிர்ணயிக்கப்பட்ட சான்றுகளுடன் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களின்

		தலைமை அலுவலகத்திற்கு உரிய முறைமையில் கிடைக்காததன் அடிப்படையில் அந்த ஆண்டிற்கான நிதியற்ற சொத்துக்கள் கணக்கிற்கு உப அலுவலகங்களின் மீதி உள்ளடக்கப்படாமையாகும்.	சான்றுபடுத்தலுக்கு இணங்க சரிசெய்தலினை பரீட்சிக்கக் கூடிய வகையில் பதிவுகள் இடப்பட்டு சிகாஸ் கணனி முறைமைக்குச் சேர்த்தல் மற்றும் கழித்தலாக பதிவுகளை இடும் போது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகள் கவனித்துக் கொள்ள வேண்டும் வித்தியாசங்களை அடையாளங்கண்டு சரிசெய்தல் வேண்டும்.
(ii)	திறைசேரி SA 82 திரண்ட நடைமுறையற்ற சொத்துக்கள் படிவத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டிற்கான மூலதனச் சொத்துக்களை பெற்றுக் கொள்ளும் பெறுமதி ரூபா 11,382.87 மில்லியன் ஆனதுடன் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 2102, 2103, 2104, 2106 விடயங்களின் கீழ் மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 28,242.88 மில்லியனாக இருந்ததனால் ரூபா 16,860 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அதற்கிணங்க மூலதனமாக்கப்படாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 16,860 மில்லியனாக இருந்தது. அவ்வாறே திறைசேறி SA 82 அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஆண்டு இறுதியில் உள்ள தேறிய சொத்துக்கள் மீதியின் மூலம் மற்றும் நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்ட தேறிய சொத்துக்கள் மீதியின் மூலம் கல்வி அமைச்சின் உள்ளபடியான சொத்துக்களின் அளவு வெளிப்படுத்தப்படவில்லை.	இப்பிரச்சினையை தவிர்த்துக் கொள்ளுவதற்காக 2025 ஆம் ஆண்டிலிருந்து CIGAS மென்பொருளின் மூலம் நிதியற்ற சொத்துக்களை கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது.	மூலதனச் சொத்துக்களை காலரீதியாக மூலதன மாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து நிதி நிலைமை கூற்றில் சொத்துக்களின் பெறுமானத் தேய்வினை சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	கல்வி அமைச்சிற்குரிய 396 தேசிய பாடசாலைகளில் 13 மாவட்டங்களுக்குரிய 39 பாடசாலைகளின் காணிகளின் பெறுமதி 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இன்னும் மதிப்பீடு செய்யப்பட்டாது மிகுதியாக உள்ளதானது காணியை பொறுப்பேற்றல் சம்பந்தமான பிரச்சினைகளை தீர்த்து வைக்காது காணப்படும் தேசிய பாடசாலைகள் மாத்திரமாகும். காணிகளை பொறுப்பேற்றலினை முடிவு	காணிகளை மதிப்பீடு செய்து சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		செய்கின்ற பாடசாலைகளின் காணிகளை மதிப்பீடு செய்தல் அவ்வப்போது மேற்கொள்ளப்படும்.	
(iv)	2024 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய அமைப24/1473/630/009-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின் நிதி உதவியின் கீழ் பாடசாலைகளில் பொருத்துவதற்காக 1,000 ஸ்மாட் பலகைகளை கொள்வனவு செய்வதற்கு 2024 யூலை 03 ஆந் திகதியிலிருந்து அமைச்சினால் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2024 ஒக்டோபர் 07 ஆந் திகதி பத்தலகெதர களஞ்சியத்திற்கு 1000 ஸ்மாட் பலகைகள் கிடைத்திருந்தன. ஆமைச்சினால் ரூபா 1,493.31 மில்லியனுக்கு கேள்வி வழங்கி 2024 ஒக்டோபர் 07 ஆந் திகதி பொறுப்பேற்கப்பட்ட 1000 ஸ்மார்ட் பலகைகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களை தலைப்பு 126 இன் கீழ் கணக்கீடு செய்வதற்கு தேவையான செலவு விடயத்திற்கு 2024 ஆம் ஆண்டிற்கு திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்துதல் ஆணைக் குழுவிற்கு உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் உரிய பெறுகை நடவடிக்கைகள் மாத்திரம் இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஸ்மாட் பலகைகளை இறக்குமதி செய்வதற்கு தேவையான கிரயமான CIF கிரயம் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவினால் அரசாங்க வணிக நாணாவித கூட்டுத்தாபணத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இதுவரை உரிய பாடசாலைகளில் இந்த உபகரணம் ஸ்தாபிக்கப்பட்ருக்கவில்லை. உரிய உபகரணங்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவினூடாக உரிய பெறுமதி (பொருட்கள்) கல்வி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் உரிய கணக்கீடு செய்தலினை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.	உள்நாட்டு ரீதியாக அல்லது வெளிநாட்டு ரீதியாக கிடைக்கின்ற பணம், பொருட்கள் அல்லது தொழில்நுட்ப உதவிகளை நிதிப் பிரமாணம் 610 இற்கு இணங்க கணக்குவைப்பதற்கு உரிய செலவு விடயங்களின் கீழ் திறைசேரியிடமிருந்து நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியின் போது கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ) ஏடுகளிலிருந்து பதிவழிப்பது தொடர்பான கூற்று

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 742,500 தொகையான நட்டங்கள் மற்றும் சேதங்கள் நிதிக்கூற்றில் நட்டங்கள்	2024 நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காத அவற்றினை 2025 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி சரிசெய்வதற்கு	நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்களை நிதிக் கூற்றுக்களில் சரியாக உள்ளடக்குதல் வேண்டும்.

மற்றும் விட்டு விடுதல் தொடர்பான கூற்றில் மற்றும் ஏடுகளிலிருந்து பதிவழிக்கும் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்துக்கொள்ளப்பட்டது.

(ஊ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்படாமை

அமைச்சினால் கீழே தரப்படுகின்ற சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்படவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதாணிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i) **நிலையான சொத்துக்கள் பதிவேடு**		
2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய 06/2024 ஆம் இலக்க அரகாங்க கணக்குகள் வழிக்காட்டிக் கோவையின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் அல்லது நிலையான சொத்துக்கள் மொடியூலின் மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.	சிகாஸ் மென்பொருளின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட சொத்துக்கள் கோவைகளில் இருந்து பெற்றுக் கொள்வதற்காக வசதிகள் வழங்கப்படவில்லை. அமைச்சின் கீழுள்ள உப கணக்கீட்டு அலகுகளில் இருந்து தனித்தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேடு (BOS report) பேணப்படுகின்றது. அமைச்சின் நிலையான சொத்துக்கள் பதிவேடானது Online சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டு வரையும் பேணப்பட்டதுடன் 2025 ஆம் ஆண்டின் போது Offline முறைமைக்கு மாற்றப்பட்டதோடு அது அமைச்சின் கொடுப்பனவு பிரிவில் சிகாஸ் மென்பொருளில் பேணப்படுகின்றது.	நிறைவேறி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து சிகாஸ் நிகழ்ச்சி திட்டத்தில் அல்லது நிலையான சொத்துக்கள் மொடியூலின் மூலம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii) **சேதங்கள் தொடர்பான பதிவேடு**		
நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படவில்லை	தவறுதலாக சில சம்பவங்களை நாளது வரையாக்குதல் தவிர்க்கப்பட்டுள்ளது. தற்பொழுது நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்திற்கு இணங்க சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணப்படுதல் வேண்டும்.

(iii) **வாகன சம்பவகுறிப்பு புத்தகம்**

நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பு புத்தகம் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.	வாகன சம்பவ குறிப்பு புத்தகம் தற்பொழுது நாளது வரையாக்கப்பட்டு வருகின்றது.	நிதிப்பிரமாணம் 1645(அ) இல் காட்டப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் பொது 267 படிவகத்திற்கு இணங்க வாகன சம்பவ குறிப்பு புத்தகம் ஒவ்வொரு வாகனம் சம்பந்தமாகவும் நாளதுவரையாக பேணப்படுதல் வேண்டும்.

(iv) **ஓப்பந்த பதிவேடு**

நிதிப்பிரமாணம் 127, 128, 133, 137 என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க ஒப்பந்தம் சம்பந்தமாக சிறந்த உள்ளகக் கட்டுபாட்டினைப் பேணும் ஒரு கட்டுபாட்டு கருவியாக மென்பொருள் பிரதியாக அல்லது ஒரு பதிவேடாக ஒப்பந்த பதிவேட்டினை அனைத்து நிபந்தனைகளுடன் நாளதுவரையாக பேண வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அமைச்சின் பொறியியல் பிரிவின் மூலம் ஒப்பந்தங்களை பெறுப்பேற்கும் செயற்பாடுகள் சம்பந்தமாக ஒரு பதிவேடு அப்பிரிவில் பேணப்படுகின்றது.	கல்வி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து ஒப்பந்தங்கள் சம்பந்தமாகவும் ஒப்பந்த செயற்பாடுகளை பொறுப்பேற்பதிலிருந்து நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பது வரையான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கி ஒரு ஒப்பந்த பதிவேடு பேணப்படுதல் வேண்டும்.

(எ) **கணக்காய்வு சான்றுகள் இல்லாமை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

	கணக்காய்வு அவதாணிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 2021-2023 காலப்பகுதியின் போது வழங்கப்பட்ட பதில் வழங்கும் தாமத காலம் ஆகக் குறைந்தது 16 மாதங்கள் மற்றும் உச்ச அளவு 42 மாதங்களான 15 கணக்காய்வு ஐய வினாக்களும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட பதில் வழங்கும் தாமத காலம் 16 மாதங்களான 66 கணக்காய்வு ஐய வினாக்களும் 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட பதில் வழங்கும் தாமத காலம் 18 மாதங்களான ‘‘ஆயிரம் தேசிய பாடசாலைகள் வரை அதிகரிக்கும் விசேட கணக்காய்வு வரைபு	கணக்காய்வு ஐய வினாக்களை சமர்ப்பித்து பதிலை பெற்றுக் கொள்ளுதலானது அமைச்சிற்கு உள்ளே காணப்படுகின்ற ஏனைய கிளைகளின் மூலமும் அமைச்சுடன் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் மூலமும் அமைச்சின் கீழே காணப்படுகின்ற தேசிய பாடசாலைகள் மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது. இந்த நடைமுறைக்கு நீண்ட காலம் எடுப்பதுடன் இதற்காக தற்பொழுது இருக்கின்ற ஆளனியினர் போதியதாக இல்லாமை	நிதிப்பிரமாணம் 155 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிதிப்பிரமானம் 452(1) இல் குறிப்பிட்ட கணக்காய்வு ஐய வினாப் பதிவேட்டினை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு இணங்க பரீட்சித்துப் பார்த்து கிடைத்துள்ள கணக்காய்வு ஐய வினாவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அந்த கயக்காய்வு ஐய வினாக்களுக்கு உடனடியாக பதில் வழங்குதல் வேண்டும்.

	அறிக்கை'' இற்கும் ஆக 82 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தாமதத்திற்கு காரணமாக உள்ளது. அதற்கிணங்க எதிர்வரும் காலங்களில் இப்பிரச்சினையை தவிர்த்துக் கொள்வதற்காக என்னால் ஆளனித் தேவைப்பாட்டினை சுட்டிக்காட்டி பதவி அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக பணிப்பாளர் நாயகம் முகாமைத்துவ சேவைகள் தினைக்களத்திற்கு ED/12/01/14/2024-12 ஆம் இலக்க 2025 மார்ச் 28 ஆம் திகதிய கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது	அவ்வாறு பதில் வழங்குதல் தாமதிக்க கூடிய கணக்காய்வு ஐய வினாக்கள் இருக்குமாயின் அவற்றிற்காக உப அறிக்கையை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை முறைமையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	ஓருங்கிணைந்த கணக்கிணக்க கூற்றில் உள்ளடக்கப்பட்ட தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தத்தினை கட்டுபாட்டு கணக்கின் ஆண்டு இறுதி மீதியுடன் ஒப்பீடு செய்யும் கூற்றில் கழித்துள்ள ரூபா 22.42 மில்லியன் மற்றும் கிழக்கு மாகாணத்தின் 1990 காலப்பகுதிக்குரிய மாகாண சபை கடன் மீதியினை தீர்த்து வைத்தல் மற்றும் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 48.9 மில்லியனாக திறைசேரி 7004 கணக்கினூடாக மாகாண சபைகள் கடன் மீதியினை தீர்த்து வைத்தலாக காட்டப்பட்டுள்ள அந்த இரண்டு விடயங்களையும் தயாரித்துள்ள முறைமை தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இது சம்பந்தமாக தற்பொழுது சான்றுகள் வேண்டப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் ஆவணங்கள் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளதனால் இன்னும் பழைய கணக்குகளின் மூலம் தகவல்களை தேடிப்பார்த்து அறிக்கையிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.	கணக்காய்விற்கு தேவைப்படும் மீதிகளின் உறுதிப்படுத்தல்களை சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
(iii)	திறைசேரி ஏடுகளிலுள்ள பதிவுகளின் பிரகாரம் திரண்ட நிலையான சொத்துக்கள் அறிக்கைக்கு (SA 82 படிவம்) 2024 ஆம் ஆண்டின் போது புதிதாக மதீப்பீடு செய்யப்பட்ட மூலதனமாக்கப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீதி ரூபா 7,564.72 மில்லியனானதுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மீதி ரூபா 4,717.3 மில்லியன் பெறுமதியாக இருந்ததனால் ரூபா 2,847.45 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் இந்த	அமைச்சின் SA 82 இன் மூலம் வெளிப்படுத்தப்படுவதாவது அமைச்சு, தேசிய கல்விக் கல்லூரிகள், 09 மாகாணங்களுக்குரிய தலைமை அலுவலகம் மற்றும் வலய அலுவலகத்தினைப் போல கல்வி அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்கள் மற்றும் அதன் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்கள் அனைத்தினதும் நிதியற்ற சொத்துக்களின் பெறுமதியாகும். அதற்கிணங்க அவ்வாறான 135	திரண்ட நிலையான சொத்துக்கள் அறிக்கைக்கு (SA 82) ஈடுபடுத்தப்படுகின்ற ஒவ்வொரு கணக்கீட்டு பதிவுகளுக்குமாக நிரந்தரமான சான்றுகளுடன் பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்ட ஒவ்வொரு உறுதிப்படுத்தலின் அனைத்து பதிவுகளும் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பித்து அந்த முறைமைக்கு மேற்கொள்ளப்படுகின்ற

	வித்தியாசத்திற்கான சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்வில்லை. அவ்வாறே திரண்ட நிலையான சொத்துக்கள் அறிக்கை (SA 82 படிவம்) 2024 ஆம் ஆண்டின் போது புதிதாக மதிப்பீடு செய்யப்பட்ட மூலதனமாக்கப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்கள் மீதிக்குள் ஏனைய நிறுவனங்களினால் கணக்கீடு செய்யப்பட்ட ஆண்டின் போது கொள்வனவு செய்த ரூபா 2975.38 மில்லியனான நிலையான சொத்துக்கள் மீதியும் உள்ளடங்கியுள்ளது. என பதிலின் பிரகாரம் அவதானிக்கப்பட்ட போதிலும் அது தொடர்பான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.	கணக்கீட்டு அலகுகளின் மூலம் ஒன்றினைக்கப்பட்ட சொத்துக்கள் கணக்கு SA 82 இன் மூலம் வெளிப்படுத்துவதாகும். எனினும், மதிப்பீடு செய்யப்பட்ட காணிகளுடன் மற்றும் கட்டிடங்களின் பெறுமதிகள் அமைச்சு கணக்கு பிரிவில் (வங்கி இலக்கம் 001) மாத்திரம் உள்ளடக்கப்படுகிறது எனவும் CIGAS இல் OPENING BALANCE ADDITION களில் மாத்திரம் இந்த மதிப்பீட்டு பெறுமதி வெளிப்படுத்தப் படுகின்றது எனவும் சுட்டிக்காட்டுகின்றேன். ஏனைய நிறுவனங்களின் இந்த OPENING BALANCE ADDITIONS களில் ஆண்டின் கொள்வளவுகளும் உள்ளடக்கப்பட்டதனால் SA 82 இல் காட்டப்படுகின்ற பெறுமதியானது மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையிலான காணிகள் கட்டிடங்களின் பெறுமதி அல்ல எனவும் அமைச்சின் (வங்கி இலக்கம் 001) பெறுமதி மாத்திரம் தொடர்புபட்டதாகும்.	செம்மையாக்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தக்கூடியவாறு ஒவ்வொரு பதிவும் ஈடுபடுத்தப்படுகின்ற தொடர் இலக்கத்திற்கு இணங்க சான்றுகளைப் பேணி அப்பிரிவுகளின் சரியான தன்மையையும் வெளிப்படைத் தன்மையையும் பேணுவதற்கு உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
(iv)	நிலையான சொத்துக்களை நாளாந்தம் வழக்கமாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது கணக்கீடு செய்யும் நடைமுறைக்கு இணங்க கணக்கீடு செய்யப்படாத சந்தர்ப்ங்களில் நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்யும் போது அதாவது நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக பிழைகளை சரி செய்யும் போது மீதிகளை ஒப்பீடு செய்யும் போது என்பனவான சிகாஸ் முறைமையில் காணப்படுகின்ற திறைசேரி ஏடுகளின் பிரகாரம் திரண்ட நிலையான சொத்துக்கள் அறிக்கைக்கு (SA 82 படிவம்) ஈடுபடுத்தப்படுகின்ற ஒவ்வொரு கணக்கீட்டு பதிவுகளுக்குமாக நிரந்தரமான சான்றுகளுடன் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட்ட ஓவ்வொரு உறுதிப்படுத்தலின் அனைத்து	மேலே சேர்த்தல்களாக காட்டப்பட்டிருந்ததானது 2023 ஆம் ஆண்டின் போது இறுதிக் கணக்குகளை தயாரித்த சந்தர்ப்பத்தின் போது தலைமை அலுவலகத்தினால் பிரதான கணக்கிற்கு உள்ளடக்கப்படாமையின் அடிப்படையில் தவிர்க்கப்பட்டிருந்த உப அலுவலகங்களின் நிதியற்ற சொத்துக்கள் கணக்கின் மீதியானதுடன் 2024 ஆம் ஆண்டின் போது அனைத்து உப அலுவலகங்களின் கணக்குகளையும் ஒருங்கிணைத்து இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளதனால் அதில் உள்ளடக்கப்பட்ட அந்த மீதியாகும்.	- மேற்படி -

பதிவுகளையும் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டின் போது திரண்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு (SA 82 படிவம்) செம்மையாக்கப்பட்ட ரூபா 4,751.9 மில்லியன் மற்றும் குறைக்கப்பட்ட ரூபா 14 மில்லியனை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிபடுத்துகிறேன்

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டதாகும்.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்படுத்தப் பட்டிருக்கவில்லை.

முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்திக்கான தொடர்பு	அமுல்ப்படுத்தப்படாத சிபாரிசு	இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு
1.6.1 (ஆ) (i)	இறுதி மீதியும் ஆரம்ப மீதியும் சமமாகும் வகையில் சரியான கணக்குகள் தயாரிக்கப்படுதல் வேண்டும்.	1.6.2 (ஈ) (i)
1.6.1 (ஆ) (ii)	பெற்றுக்கொள்ளப்பட்ட மூலதனச் சொத்துக்கள் ஆண்டின் போது மூலதனமாக்கப்படுதல் வேண்டும்.	1.6.2 (ஈ) (ii)
1.6.1 (அ) (i) (iii)	ஒருங்கிணைந்த கணக்கிணக்க கூற்றின் கட்டுப்பாட்டு கணக்கு மீதிக்கும் தனித்தனி கணக்கு மீதியின் வகைப்படுத்தல் பொழிப்பு மீதிக்குமிடையேயான வித்தியாசத்தினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கடன் மீதிகளில் காணப்படுகின்ற வித்தியாசங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	1.6.2 (இ) (i) ,(iii)
1.6.1 (இ) (iii)	மீதிகளை உறுதிபடுத்துவதற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.	1.6.2 (எ) (ii)

3. நிதி மீளாய்வு

3.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

கணக்காய்வு அவதாணிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக நிர்மாணிக்கப்படுகின்ற 17 மாடிக் கட்டிட செயற்திட்டம் தொடர்பாக சான்றுபடுத்தப்பட்ட இறுதி விலைப்பட்டியல் மற்றும் அதனை தீர்த்து வைப்பதற்காக எழுத்துமூல வேண்டுதல் சமர்ப்பிக்கப்படாதிருந்தும் செலவுத்தலைப்பு 126-2-10-28-2104(ii) இன் கீழ் உயர் கல்வித் துறையினால் கட்டுநிதி பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 703.4 மில்லியன் 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி கொழும்பு பல்கலைகழகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்கூரிய பணத்தில் ஆண்டின் போது மொத்தமாக ரூபா 544 மில்லியன் பயன்படுத்தப்படாது பல்ககைக்கழகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டு இருந்ததுடன் அப்பணத்தை திறைசேரிக்கு அனுப்புவதற்கு அல்லது கட்டுநிதியை தீர்த்துவைப்பதற்கு முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது உயர் கல்விப் பிரிவினால் செலவு செய்யப்பட்டிருந்தது. மீளத்திருப்பி அனுப்பாத ரூபா 159.4 மில்லியன் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு உயர் கல்வித்துறையிலுள்ள அரசாங்க நிதி சம்பந்தமாக பொறுப்பு வகிக்கும் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்கிணங்க நிதி முகாமைத்துவம் சம்பந்தமாக கவனயீனமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	நிதிப்பிரமாணம் 135, 139 156 என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க கவனமாக அரசாங்க நிதி தொடர்பாக முறையான பொறுப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகார சட்டத்திற்கு இணங்கி இருத்தல் வேண்டும்.

3.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

	கணக்காய்வு அவதாணிப்புகள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருததுரைகள்	சிபாரிசுகள்
(அ)	அமைச்சிற்கு 2024 ஆம் ஆண்டின் போது மூலதனச் செலவுக்கான முழுத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 50,758.13 மில்லியன் மற்றும் மீண்டுவரும் செலவுக்காக முழு தேறிய நிதி ஏற்பாடு ரூபா 121,153.68 மில்லியன் கிடைத்திருந்ததுடன் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு ரூபா 34,371.23 மில்லியன் மற்றும் மீண்டுவரும் செலவு ரூபா 102,369.36 மில்லியனாக இருந்தது. அதற்கிணங்க மூலதனச் செலவுகளுக்கான நிதி ஏற்பாட்டில் 32 சதவீதமான ரூபா 16,386.9 மில்லியனும் மீண்டுவரும் செலவுக்கான நிதி ஏற்பாட்டில் 15 சதவீதமான ரூபா 18,784.32 மில்லியனும் ஆக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.	தேசிய நிதியின் கீழான பாதீட்டு பிரேரனையின் அடிப்படையில் கல்விப் பீடத்தினை பல்கலைக்கழகமாக ஸ்தாபிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்குரிய சட்டம் அங்கீகரிக்கப்படாமையின் அடிப்படையில் நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படாததுடன் 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணங்க புதிய கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்படாததுடன் அத்தியாவசியமான நிர்மாண செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் நிர்மாணத்துறை தொடர்பான விலை முரண்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்தினை இடைநடுவில் நிறுத்த வேண்டி ஏற்பட்டது. அவ்வாறே மாகாண கல்வி அலுவலகத்தின் கீழான நிர்மாணங்கள் சம்பந்தமாக காணப்பட்ட பிரச்சினைகளை தீர்த்துவைத்து மீண்டும் பெறுகைச் செயற்பாடுகளை ஆண்டின் போது முடிவு செய்வதற்கு காலம் போதியதாக இல்லாததன் அடிப்படையில் நிதி ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்படவில்லை	தேவைப்பாட்டினை சரியாக அடையாளங்கண்டு பாதீடு செய்யப்பட்ட செயற்பாடுகளை திட்டங்கள் மற்றும் பெறுகைத் திட்டங்களுக்கு இணங்க மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும் நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட செயற்பாடுகளுக்குரிய நிதி ஏற்பாட்டினை மீளாய்வாண்டின் போதே நிறைவேற்றி நிர்ணயிக்கப்பட்ட செயலாற்றல் மட்டத்திற்கு அடைந்து கொள்வதற்கு உரிய அதிகாரிகள் கவனித்துக் கொள்ள வேண்டும். அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	முறையான முன்னறிதல் இல்லாமலும் எந்த நடைமுறைச் சாத்தியமும் இன்றியும் மதிப்பீட்டினைத் தயாரித்து நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டதன் காரணமாக அமைச்சின் 36 செலவு விடயங்களின் ரூபா 3,741.4 மில்லியனான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் மீளாய்வாண்டின் இறுதியில்	உள்நாட்டு நிதியின் கீழ் நிர்மாண பிரிவு தொடர்பாக 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணங்க புதிய கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்படாததுடன் அத்தியாவசியமான நிர்மாணங்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதுடன் இறுதி	- மேற்படி -

	மிகுதியாக காணப்பட்டதுடன் அவற்றில் 32 செலவு விடயங்கள் மூலதன செலவு விடயங்களாக இருந்தது.	விலைப்பட்டியல்கள் கிடைக்காமை, இறுதி விலைப் பட்டியல்கள் அங்கீகரிக்கப்படாமை, பாதீட்டு பிரேரனைகளுக்கு இணங்க கல்வி பீடத்தினை பல்கலைக்கழகமாக ஸ்தாபிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிற்குரிய சட்டம் அங்கீகரிக்கப்படாமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் உள்நாட்டு நிதியின் கீழான செலவு விடயங்களிற்கான நிதி ஏற்பாட்டின் சேமிப்பு நூறு சதவீதமாகும்.	-
(இ)	2023 நவம்பர் 24 ஆம் திகதி உள்ளக கொடுப்பனவு சான்றிதழின் (IPC) 55 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு அமைச்சின் அலுவலக கட்டிடத்தின் 6 மற்றும் 7 ஆம் மாடியின் நிர்மாணத்திற்காக அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு உரிய நிர்மாணத்திற்காக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 6.8 மில்லியன் மிகையாக செலுத்தப்பட்டிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை இன்னும் அந்த செயற்பாட்டிற்கான 126-01-02-000-2104 செலவு விடயத்தின் கீழ் தேவைப்பாட்டினை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது வருடாந்த பாதீட்டு நிதி ஏற்பாடாக ரூபா 50 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது இதில் ரூபா 17.3 மில்லியன் பணம் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் இன்னும் ரூபா 32.7 மில்லியன் மிகுதியாக காணப்பட்டது.	2024 ஆம் ஆண்டின் போது அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்காக இறுதி விலைப்பட்டியலினைத் தீர்த்து வைப்பதற்காக ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் இதில் குறிப்பிட்டவாறு இறுதி விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டி இருந்ததானது நிரந்தர விலைக்குழுவின் மூலம் ஒப்பந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டதன் பின்னராகும்.	தேவைப்பாட்டினை சரியாக அடையாளம்கண்டு பாதீடு செய்யப்பட்ட செயற்பாட்டுத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டத்திற்கு இணங்க மதிப்பீடுகள் தயாரிக்கப்படுதல் வேண்டும் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்ட செயற்பாடுகளுக்குரிய நிதி ஏற்பாடானது மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட செயற்பாட்டு மட்டத்தினை அடைந்து கொள்வதற்கு உரிய அதிகாரிகள் கவனித்துக் கொள்ள வேண்டும் அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவ அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முரண்கள் இடம் பெறக் கூடியதான முறையான அதிகாரம் மற்றும் முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னராகும். அதற்கிணங்க நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுதல் வேண்டும். மிகைக் கொடுப்பனவு சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கல்வி மறுசீரமைப்பு நடைமுறையானது கல்வி முறைமைக்குள் இதுவரை ஆரம்பித்து வைக்கப்படவில்லை என்பதற்கான விடயம் சம்பந்தமாக இணங்கிகொள்கிறேன். 2026 ஆம் ஆண்டின் போது பாடசாலைகளில் 1 மற்றும் 6 ஆம் தரங்களுக்கான பாடத்திட்ட மறுசீரமைப்பினை அமுல்படுத்துவதற்காக தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்குதல் மற்றும் ஆயத்தபடுத்துதல் இடம்பெற்று வருகின்றமை, கல்வி மறுசீரமைப்பு நடைமுறை வெற்றியளிப்பதற்கு அத்தியாவசியமான பிரதான தூண்களை (Pillars) அடையாளம் கண்டு அதனூடாக தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் திட்டங்களை தயாரித்தல், பொறுப்புவாய்ந்த தரம்பினர்களால் மேற்கொள்ளப்படுகின்ற கண்காணிப்பு மற்றும் செயல்முன்னேற்ற மீளாய்வு பல்வேறு குழுக்கள்/சபைகளினூடாக சிபாரிசுகள்/ தீர்மான அங்கீகாரங்களை தயாரித்தல் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.

ஏற்படக்கூடிய அனைத்து ஆபத்துக்ளையும் முகாமைத்துவம் செய்து நாட்டிலுள்ள பிள்ளைகளை அனைத்து அம்சங்களிலும் உயர்த்தி சர்வதேசத்துக்கு இணைந்ததாக முன்னெடுத்து செல்லகூடிய வகையில் தயாரிக்கப்பட்ட புதிய மறுசீரமைப்பு தொடர்பான வேலைதிட்டத்தினை (Rodmap) அங்கீகரித்துக் கொண்டு புதிய கல்வி மறுசீரமைப்பினை அமுல்படுத்தும் குறுங்கால மத்தியகால மற்றும் நீண்ட காலதிட்டங்கள் மற்றும் கால அட்டவனைகளுக்கு இணங்க அது தொடர்பான செலவுகளை புதிய கல்வி மறுசீரமைப்பு நிகழ்சிதிட்டத்தினை அங்கீகரித்து அதற்கிணங்க நோக்கத்துடன் சிக்கனமாக பொருளாதார ரீதியாக பயன்படுத்தி நாட்டிலுள்ள பிள்ளைகளின் சமமான கல்வி உரிமையினை உறுதிபடுத்துவதற்கு கல்வி அமைச்சு செயலாளர் உள்ளடங்கலாக அனைத்து பெறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் அதனுடன் தொடர்புப்பட்ட நிறுவன தலைவர்கள் உள்ளடங்கலாக உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வகையில் தயாரித்த புதிய கல்வி மறுசீரமைப்பு வேலைதிட்டங்களை (Roadmap) அங்கீகரித்து புதிய கல்வி மறுசீரமைப்பு வேலைதிட்டம் முறைப்படியாக அமுல்படுத்தப்படுகின்றது என கணக்காய்வில் அடையாளங் காணமுடியாதுள்ளது.		
(இ)	கல்வி அமைச்சில் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரை தீர்த்துவைக்கப்படாதுள்ள ஒழுக்காற்று விசாரணைகளின் எண்ணிக்கை 39 ஆக இருந்தது. இது சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுப்பதற்கு கல்வி அமைச்சு தவறி இருந்ததன் மூலம் உருவாகிய விளைவுகளானது பாடசாலை முறைமையிலுள்ள மாணவர்களின் வாழ்வு பாதுகாப்பற்ற நிலைமைக்கு மாறுவது வரை பரவுதல் மற்றும் உரிய காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இடம்பெறும் ஒழுங்கீனங்களை தவிர்த்தல் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.	தீர்க்கப்படாதுள்ள ஒழுக்காற்று விசாரணைகள் இருப்பது தொடர்பாக இணங்கி கொள்கின்றேன்.	தீர்க்கப்படாதுள்ள ஒழுக்காற்று விசாரணைகளை துரிதமாக முடிவு செய்வதன் மூலம் பாடசாலை முறைமையிலுள்ள மாணவர்களின் வாழ்வு பாதுகாப்பற்ற நிலைமைக்கு மாறுவதனை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் வலைத்தள அறிக்கைக்கு இணங்க 2025 மார்ச் மாதம் வரை மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்த 3916 பயிற்சி நிறுவனங்களுக்கு மத்தியில் 1722 நிறுவனங்கள் மாத்திரம் செயற்படும் மட்டத்தில் காணப்பட்டுள்ளது. 1,304 நிறுவனங்களின் பதிவு செய்தல் காலம் காலாவதியாகியிருந்ததுடன் 844 நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. அவ்வாறே 2024 ஆம் ஆண்டின் போது அவ்வாறு பதிவு செய்த காலம் காலாவதியாகியுள்ள நிறுவனங்களுக்கு மத்தியில் 601 நிறுவனங்கள் மாத்திரம் மீண்டும் பதிவினை புதுப்பித்துள்ளன. மேலும் மீளாய்வாண்டில் ஆணைக்குழுவினால் 50 தேசிய திறன் தர நிலைமைகள் மற்றும் 30 கற்கை நெறிகளை நாளது வரையாக்குவதற்கும் இலக்கிடப்பட்டிருந்தும் 26 தேசிய திறன் தரநிலைமைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் 22 தர	பதிவுசெய்தல் காலம் காலாவதியாகியுள்ள நிறுவனங்களின் பதிவுகளை புதுப்பிப்பதற்கு வேண்டிக்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு வேண்டிக் கொள்ளப்பட்ட நிறுவனங்களின் பதிவினை புதுப்பிப்பதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்ககப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் போது இச்செயற்பாட்டிற்காக திறைசேரி நிதி ஏற்பாடாக ரூபா 05 மில்லியன் கிடைத்திருந்தது. ஒரு தரநிலையினை தயாரிப்பதற்கு அல்லது நாளதுவரையாக்குவதற்கு ரூபா 08 இலட்சம் ஆகக் குறைந்ததாக செலவு செய்யப்படும். அதற்கிணங்க அந்த நிதி ஏற்பாட்டிலிருந்து செய்யக்கூடியதாக உள்ள உச்ச அளவு தர நிலைமைகள் அந்த ஆண்டின் போது முடிவு செய்யப்பட்டுள்ளது.	தொடர்ச்சியாக முகங்கொடுத்து காணப்படுகின்ற சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு தேவையான நிரந்தரமான மற்றும் நெகிழ்வான குறுங்கால, மத்திய கால மற்றும் நீண்டகால உப திட்டங்கள் மற்றும் கால அட்டவணைகளுடனான நீண்டகால திட்டத்தினை தயாரித்து செயல் முன்னேற்றத்தினை காலரீதியாக மீளாய்வு செய்து திறமையான ஆராச்சி சார்ந்த நபர்களை உருவாக்கி தேசிய மற்றும் சர்வதேச மட்டம் வரை கொண்டு வந்து வெளியீட்டிற்கு (Output) அப்பால் நிலை பேறான பெறுபேற்று (Sustainable Outcome) மட்டம் வரை கொண்டுவரக் கூடிய ஒரு சமூகத்தை உருவாக்குவதற்காக அமைச்சில் பொறுப்பு

	நிலைமைகளை நாளதுவரையாக்குதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2025 மார்ச் மாதமளவில் இன்னும் 100 திறன் தர நிலைமைகள் நாளதுவரையாக்கப்படாது மிகுதியாகக் காணப்பட்டதுடன் இது தொடர்பாக திறன் பிரிவினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.		வாய்ந்த உத்தியோகத்தர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.
(உ)	கட்டுநாயக்கா பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தில் தொழில்நுட்ப பயிற்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பாக ஒஸ்றியா செயற்திட்டத்தின் கீழ் 02 புதிய கட்டிடங்கள் மற்றும் திருத்தம் செய்யப்பட்ட 03 கட்டிடங்களின் ரூபா 428.07 மில்லியனான வேலைகள் 2021 ஆம் ஆண்டின் போது முடிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அக்கட்டிடங்கள் சம்பந்தமாக 2021, 2022 ஆம் ஆண்டுகளின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்க மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 130 மில்லியனாக இருந்ததன் காரணமாக 1 ½ ஆண்டு போன்ற குறுகிய காலத்திற்குள் அரசாங்க மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 298.07 மில்லியனால் குறைவடைந்திருந்தது. அதற்கிணங்க இச்செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் புதுபித்தல் நடவடிக்கைகள் சிக்கனமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	இச்செயற்றிட்டத்தின் மூலம் வழங்கிய GRN விநியோகிக்கப்பட்ட சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கும் கட்டிடங்களின் பெறுமதி சம்பந்தமாக வழங்கிய விபரங்களின் பிரகாரம் NAITA நிறுவனத்தின் கணக்குகளை தயாரிக்கும் போது உரிய பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.	இது சம்பந்தமாக தகமையுள்ள நபர்களை உள்ளடக்கிய ஒரு குழுவின் மூலம் முறையான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஊ)	மேற்கூறிய செயற்திட்டத்தின் கீழ் கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலம் அதுவரை கிடைத்திருக்காத பயிற்சி உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கு உட்பட்டு செயற்திட்டங்களை பூரணப்படுத்தும் கடிதம் வழங்கப்பட்டிருந்தும். 2025 மார்ச் 12 ஆம் திகதி வரை ரூபா 13.73 மில்லியன் பெறுமதியான பயிற்சி உபகரணங்கள் கட்டுநாயக்கா பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. ரூபா 13.73 மில்லியனான இந்த உபகரணங்களின் பெறுமதியும் செயற்திட்ட பெறுமதிக்கு உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் 03 ஆண்டுகளை மிகைத்திருத்தும் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக இப்பிரிவினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இணங்கி கொள்ளப்படுகின்றது. இச் செயற்றிட்டம் Unsolicited Propsal ஆக ஆரம்பிக்கப்பட்டதாகும்.	இது சம்பந்தமாக தகமை பெற்ற ஒரு குழுவின் மூலம் இடம் பெற்றுள்ள நிலைமையை பரீட்சித்து உபகரண உதவியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	2024 ஆம் ஆண்டில் எதிர்பார்த்தவாறு திறன் பிரிவின் கீழ் உள்ள தொழில்சார் பயிற்சி நிறுவனத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளலானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிட தக்க அளவால் குறைவடைந்திருந்தது. அதாவது 2023 ஆம் ஆண்டில் 120,255 ஆகவும் மீளாய்வாண்டில் அது 105,258 ஆகவும் இருந்தது.	பதில் சமர்பிக்கப்படவில்லை.	திறன் பிரிவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழில் பயிற்சி நிறுவனங்களில் காணப்பட்ட கற்கைநெறிகளை தொழிற்சந்தையின் தேவைப்பாட்டிற்கு பொருத்தும் வகையில் காலரீதியாக திருத்தம் செய்து அக்கற்கை நெறிகளுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் உச்ச இயலளவின் பிரகாரம் வருடாந்தம் சேர்த்துக்கொள்ளக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையை அடையாளம் கண்டு அதற்கிணங்க வருடாந்தம் சேர்த்துக்கொள்ளும் வகையில் முறையான ஒரு பொறிமுறையினை அறிமுகப்படுத்தி தொழில்சார் நிறுவனங்களை ஸ்தாபிக்கும் குறிக்கோளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(ஏ)	2024 ஆம் ஆண்டு தொடர்பாக தொழிற் கல்வி பிரிவின் கீழுள்ள 13 நிறுவனங்களுக்கு 496 செயற்திட்டங்களுக்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 368 செயற்திட்டங்கள் மாத்திரம் பூரணப்படுத்தப்பட்டிருந்தது. பூரணப்படுத்தப்படாத 128 செயற்திட்டங்களும் திட்டமிடல் கட்டணத்திலிருந்து பூரணப்படுத்துதல வரையான பல்வேறு கட்டங்களில் காணப்பட்டன.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	-மேற்படி-
(ஐ)	474 பிரதேச செயலகங்களுக்கு 317 திறன் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களும் மாவட்ட செயலகங்களுக்கு அந்த உத்தியோகத்தர்களில் 58 நபர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். எனினும், அந்த உத்தியோகத்தர்களின் 2023 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் சம்பந்தமாக பரீட்சித்த போது அந்த உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 22 பிரதான செயற்பாடுகளில் 18 செயற்பாடுகள் தொடர்பாக ஆண்டிற்கான செயல்முன்னேற்றம் 0 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரையான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் 2024 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.	2024 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரத்தினை பூர்த்தி செய்த மாணவர்களை இலக்காகக் கொண்டு தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் நாட்டிலுள்ள 215 பாடசாலைகளில் நாடு முழுவதிலும் பரவலாக நடாத்தப்பட்டதுடன் (மார்ச் மாதத்திலிருந்து மே மாதம் வரை) இதற்காக 7,355 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதுடன் இதற்காக தொழில்சார் வழிகாட்டிக் கோவை மாத்திரமன்றி தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில மொழி தொடர்பான பயிற்சி வெளிக்கள நிகழ்ச்சித் திட்டங்கள் முதலிய நிகழ்ச்சித் திட்டங்கள் இந்த உத்தியோகத்தர்களினால் நடாத்தப்படுகின்றது.	திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் நிரந்தர செயற்பாடுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு காலரீதியாக மீளாய்வு செய்து செயலாற்றலினை நாளதுவரையாக்கி மதிப்பீட்டிற்கு உட்படுத்தி நிர்ணயப்பட்ட செயலாற்றலினை அடைந்து கொள்ளுதல் வேண்டும்.

(ஓ)	சுயதொழிலை உருவாக்குவதற்கான தொடக்க உப கடனின் (SEPI) கீழ் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2027 ஆம் ஆண்டு வரை ரூபா 950 மில்லியன் கடன் வழங்குதல் இலக்காக கொள்ளப்பட்ருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் இறுதிவரை 1,193 நலன்பெறுனர்களுக்கு ரூபா 571 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. 2024 ஆம் ஆண்டிற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லை என அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 70 மில்லியன் நிதி ஏற்பாடு 82 நலன் பெறுனர்களுக்கு மாத்திரம் போதியதாக இருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் மே மாதம் நடுப் பகுதியளவில் வழங்கி முடிவடைந்திருந்தது. அவ்வாறு மீளாய்வாண்டில் கடன் வழங்கும் போது அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் தொழில் முயற்சியாளர்களை இலக்காக கொள்ள வேண்டியிருந்த போதிலும் மன்னார், நுவரெலியா யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களுக்கு கடன் வழங்குதல் இடம் பெற்றிருக்கவில்லை.	2024 ஆம் ஆண்டில் பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து SEPI கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்குவதற்கு ரூபா 100 மில்லியன் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் 2024 பாதீட்டின் மூலம் ரூபா 70 மில்லியன் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அப்பணம் 82 நலன் பெறுனர்களுக்கு 2024 மே மாதம் அளவில் வழங்கி முடிவடைந்திருந்ததனால் இன்னும் 2024 ஆம் ஆண்டிற்கான நலன் பெறுனர்களைப் பதிவு செய்தலினை நிறுத்துவதற்கு மத்திய வங்கிக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. எனவே சில மாவட்டங்களில் கடனை வேண்டிக் கொண்டவர்களுக்கு அந்த ஆண்டின் போது கடன் வழங்குவதற்கு முடியாதிருந்தது.	இக் கடன் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் கடன் பெறுபவர்களின் அளவினை அதிகரிப்பதற்கு சரியான தகவல்களின் அடிப்படையில் மதிப்பீட்டினை தயாரித்து நிதி ஏற்பாட்டினை அங்கீகரித்துக் கொள்வதற்கு மற்றும் அது தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ள வேண்டும்.

(ஓ)	**ருருணு பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்திற்கு 12 மாடிகள் கொண்ட ஒரு கட்டிடத்தினை நிர்மாணித்தல்.**		
	கராபிடிய மருத்துவ பீடத்திற்கு சேர்க்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் ஆராயச்சி இயலளவை (Researeh Capabilities) அதிகரிக்கும் குறிக்கோளில் 12 மாடிகள் கொண்ட ஒரு கட்டிடத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் 2020 யூன் 01 ஆம் திகதி மத்திய பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான ஆலோசனைப் பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் வேலைகளைப் பூர்த்தி செய்து 2021 செப்தெம்பர் 06 ஆம் திகதியளவில் பல்கலைகழகத்திற்கு ஒப்படைக்க வேண்டிய போதிலும்	இச் செயற்றிட்டம் ஆரம்பத்தில் ஒப்படைக்கப்பட்ட அந்த நிறுவனத்தின் பலவீனமான செயலாற்றலின் காரணமாக 2017 நவம்பர் 13 ஆந் திகதி ஒப்பந்த உடன்படிக்கையினை முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் இடை நடுவில் நிறுத்தப்பட்ட நிர்மாண நடவடிக்கைகள் 2020 யூன் 02 ஆம் திகதி Central Engineering Cansultancy Bureau நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. எனினும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டில்	செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணிப்பினை மேற்கொண்டு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்றிட்டத்தின் நடவடிக்கைகளை முடிவு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.

கணக்காண்டு முடிவடையும் வரை 06 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இச்செயற்றிட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 60 சதவீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

காணப்பட்ட கோவிட் தொற்று நோயின் காரணமாக நிர்மாணச் செயற்பாடுகள் தாமதமடைந்திருந்தது. அதன் காரணமாக அவ்வப்போது ஒப்பந்த காலத்தை நீடிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இச்செயற்றிட்டம் 2023 ஆம் ஆண்டின் பின்னர் 2024 ஆம் ஆண்டிலிருந்து தேவையான மேற்பார்வை செயற்பாடுகளின் பின்னர் முறைப்படியாக நிறைவேற்றுவதற்கு தேவையான நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஔ) கராபிடிய வைத்தியசாலையில் பேராசிரியர் பிரிவினை தோற்றுவிக்கும் செயற்திட்டம்

2018 பாதீட்டு பிரேரணையின் அடிப்படையில் மருத்துவ பட்டப்படிப்பினை கற்பவர்களின் எண்ணிக்கையை 300 ஆல் அதிகரித்தல், தேசிய சுகாதார சேவை மருத்துவ மற்றும் தாதியர் தொழிலினை மேம்படுத்துதல், மருத்தவ பட்ட பின்படிப்பு பயிலுனர்களை சேர்த்துக் கொள்வதனை மேம்படுத்துதல், சிகிச்சை பயிற்சி தொடர்பாக பயில்வதன் தரத்தை மேம்படுத்துதல் ஆகிய இலக்குகளை அடைந்து கொள்ளும் குறிக்கோளின் அடிப்படையில் 2019 யூன் 24 ஆம் திகதி ரூபா 1,138.5 மில்லியன் பெறுமதிக்கு மத்திய பொறியியல் சேவை தனியார் கம்பனிக்கு இப்பிரிவினை தோற்றுவிக்கும் செயற்றிட்டம் வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2022 யூன் 16 ஆம் திகதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. பல 2025 யூன் மாதம் 13 ஆம் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2025 மே மாதம் வரை இச் செயற்திட்டத்தில் இயந்திரம், மின்சாரம் மற்றும் வாயு சீராக்கி முறைமையை ஸ்தாபிப்பது தொடர்பான பிரச்சினை காணப்பட்டதுடன் செயற்றிட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 87 சதவீதம் ஆகும்.

2025 ஆம் ஆண்டின் 13 ஆம் திகதி வரை நியாயமான காரணத்தின் அடிப்படையில் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது செயற்திட்டம் 87 சதவீத செயல் முன்னேற்றத்தினை வழங்கியிருந்ததுடன் இன்னும் 06 மாதங்கள் போன்ற குறுகிய காலத்திற்குள் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்ய இயலுமை காணப்படும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. விலைத் தளம்பல்களின் காரணமாக ரூபா 427 மில்லியன் ஊக்குவிப்பு கிரயத்திற்கு (Induced cost) அமைச்சரவை பத்திரத்தினை தயாரிப்பதற்கு அறிவுறுத்தல் கிடைத்துள்ளதுடன் அந்த அங்கீகாரத்தினை மிகவும் விரைவாக பெற்றுக் கொள்ளும் இயலுமையின் அடிப்படையில் மிகுதிச் செயல் முன்னேற்றம் தங்கியுள்ளது.

-மேற்படி -

(ஐ) **இலங்கை கிழக்கு பல்கலைக் கழகத்தின் சுகாதார கண்காணிப்பு விச்சான பீடத்திற்கான கட்டிட தொகுதியினை நிர்மாணிக்கும் செயற்றிட்டம்**

இலங்கை கிழக்கு பல்கலை கழகத்தின் சுகாதார கண்காணிப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்றிட்டம் இலங்கை அரசாங்கத்திற்கும் அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்திற்கும் (KFAED) இடையே 2016 மார்ச் மாதம் 24 ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட 940 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் அமுல்படுத்துவதுடன் அதில் குவைட், தினார் 10 மில்லியன் கடன் இச்செயற்திட்டத்திற்காக வழங்குவதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்தது. பீடத்தின் கட்டிட தொகுதியை நிர்மாணித்தல் முடிவு செய்யப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் மிகுதி வேலைகளானது ஒப்பந்தம் செயற்பாடற்று இருந்ததனால் அதன் பௌதீக செயல்முன்னேற்றம் 10 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட வேண்டிய கற்பித்தல் உபகரணங்களை கொள்வனவு செய்யும் செயல் முன்னேற்றம் 40 சதவீத மட்டத்தில் காணப்பட்டதுடன் 2022 யூன் 08 ஆந் திகதியிலிருந்து கடன் பணத்தை வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்ததனால் செயற்திட்ட நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது.

இச்செயற்திட்டம் இறுதிக் கட்டத்தில் காணப்படுவதும் குவைட் தீனார் 6.5 மில்லியன் செலவு செய்து நிறைவேற்றிய செயற்திட்டத்தின் பெறுபேற்றினை மருத்துவ மாணவர்களுக்கு தாமதமின்றி வழங்குமாறு பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொண்ட வேண்டுதலின் பிரகாரம் 2025 சனவரி 06 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க செயற்திட்டத்தினை உள்நாட்டு நிதியின் (GOSL) மூலம் அமுல்படுத்துவதற்கும் கடன் உடன்படிக்கை செயற்படுத்தப்பட்டதன் பின்னர் அச் செலவு செய்யப்பட்ட பணத்தை மீளளிப்பு செய்து கொள்ளுமாறும் வழங்கிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க மீண்டும் இச் செயற்திட்டம் 2025 பெப்ரவரி 10 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

- மேற்படி -

4.5 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
	உயர்தர மாணவர்கள் இரண்டு கல்வி ஆண்டுகள் முழுவதும் பாடசாலை கல்வியை பயில்வதற்கு தவறுகின்றமை		
(அ)	பல ஆண்டுகளாக உயர்தர வகுப்பு மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கின்ற சதவீதம் ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு வரையும் இப் பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு கல்வி அமைச்சிற்கு முடியாதிருப்பதுடன் 2016 ஆம் ஆண்டின் பின்னர் உயர்தர பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தராமை சம்பந்தமாக ஆய்வுகளை மேற்கொண்டு தேவையான மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது சம்பந்தமாக 2006 ஒக்தோபர் 06 ஆந் திகதிய 2006/45 ஆம் இலக்க சுற்றறிக்கை வழங்குதல் மற்றும் அவ்வப்போது வழங்கப்பட்ட அறிவுறுத்தல் கடிதத்தின் மூலம் பாடசாலைகளின் அதிபர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	உரிய தரப்பினர்களை தொடர்புகொண்டு பாடசாலைக்குள் மாணவர்களை கவரச்செய்யக்கூடிய மட்டத்திற்கு வினைத்திறனாக கல்வியை வழங்கும் செயற்பாட்டு வேலைத்திட்டத்தினை கல்வி அமைச்சினால் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச சார்பற்ற பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தாமை

(அ)	2022 மார்ச் 02 ஆந் திகதிய ‘‘அரசாங்கத்திற்குரியதல்லாத பாடசாலைகள் சம்பந்தமான ஒழுங்குபடுத்தல் நடைமுறை’’ என்ற தலைப்பிலான செயலாற்றல் கணக்காய்வு தொடர்பாக 18 சிபாரிசுகள் வழங்கப்பட்டு 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் அச்சிபாரிசுகளை அமுல்படுத்துவதற்கு தேவையான துரித நடவடிக்கைகள் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்துதல் அமைச்சின் பிரதான செயற்பாடாக குறிப்பிடப்பட்டிருந்தும் சர்வதேச பாடசாலைகள் இலங்கை	சர்வதேச பாடசாலைகள் இலங்கை முதலீட்டு சபையில் மற்றும் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதனால் கல்வி அமைச்சின் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுவதில்லை.	அரசாங்கத்திற்குரியதல்லாத பாடசாலைகளை நிருவதிகத்தல் தொடர்பாக முறையான கண்காணிப்பு கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படாமையின் மூலம் கல்வி முறைமையில் இடம்பெறுகின்ற தடங்கல்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒழுங்குபடுத்தல்களுக்காக முறையான வேலைத்திட்டம் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

	முதலீட்டு சபையில் மற்றும் கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதனால் கல்வி அமைச்சின் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுவதில்லை என 2025 யூன் 06 ஆந் திகதிய செயலாற்றல் அறிக்கைக்கு வழங்கிய பதிலில் தரப்பட்டிருந்தது.		

2024 / 2025 காலப்பகுதியில் சிசு சுரக்ஸா காப்புறுதியினை வழங்குதல்

(அ)	சிசு சுரக்ஸா காப்புறுதிக்காக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் ரூபா 2,292.7 மில்லியன் வரியுடனான பெறுமதிக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2025 மார்ச் 28 ஆந் திகதி வரை 09 மாத காலம் தொடர்பாக உரிமை கோரப்பட்ட 18,552 விண்ணப்ப பத்திரங்கள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 9,315 விண்ணப்பப்பத்திரங்களுக்காக ரூபா 330 மில்லியன் பணம் பிரதிபலனாகச் செலுத்தப்பட்டிருந்தது. அக் கொடுப்பனவு 2024/2025 ஆம் ஆண்டிற்குரிய தவணைப் பணமான ரூபா 1,777.79 மில்லியனில் 19 சதவீதம் அளவிலான குறைந்த சதவீத்தினைக் கொண்டிருந்தது.	உரிமை கோரி விண்ணப்பபத்திரங்களை சமர்ப்பித்தல் குறைவடைந்தமை தொடர்பாக பல்வேறு காரணங்கள் தாக்கமளித்துள்ளது. சுரக்ஸா சிசு காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் 2022 திசெம்பர் 02 ஆந் திகதியிலிருந்து 2024 யூன் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் அமுல்படுத்தப்படாமை, தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படாமையின் காரணமாக மக்களிடம் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக நம்பிக்கை இல்லாமை, அராசாங்க ஊழியர்கள், தனியார் துறையிலுள்ள ஊழியர்கள் முப்படைகள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பிரதிபலன்கள் வழங்கக்கூடிய பல்வேறு காப்புறுதிகள் காணப்படல்.	மாணவர் விண்ணப்ப பத்திரங்களைச் சமர்ப்பித்தல், கொடுப்பனவுகள் நிராகரிக்கப்படுதல், மேன்முறையீடுகள் சமர்ப்பித்தல் முதலியவையாக போதியளவான தரவுகளுடனான ஒரு தகவல் முறைமை அமைச்சினால் பேணப்படுதல் வேண்டும். தற்பொழுது காணபப்படுகின்ற முறைமையை மீண்டும் மீளாய்வு செய்து காப்புறுதி வழங்கக்கூடிய மாணவர்கள் தொடர்பாக ஒரு கொள்கை உருவாக்கப்படுதல் வேண்டும்.
(ஆ)	உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை காப்புறுதி கூட்டுத்தானத்தினால் கேட்டல், பார்த்தல் மற்றும் ஏனைய ஊடகங்களைப் பயன்படுத்தி சுரக்ஸா காப்புறுதி தொடர்பாக பிரசித்தப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதற்காக 2024/2025 ஆண்டு தொடர்பாக ரூபா 60 மில்லியன் பணம் காப்புறுதிக் கூட்டுத்தானத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. காப்புறுதி செல்லுபடியாகும் திகதியிலிருந்து	இந் நிழச்சித்திட்டம் தொடர்பாக பாடசாலை சமூகத்தை உள்ளடக்கி ஏனைய அனைத்து பிள்ளைகளுக்கும் தெரியப்படுத்துவதற்காகத் தேவையான பிரசித்தப்படுத்தல் நடவடிக்கை முறைப்படியாக நிறைவேற்றப்பட்டுள்ளது.	- மேற்படி -

02 மாதங்களுக்குள் பிரசித்தப்படுத்தலுக்காக வழங்கிய பணத்திலிருந்து 50 சதவீதமான பணம் உடன்படிக்கையின் பிரகாரம் செலவு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 1.83 மில்லியன் செலவு மாத்திரம் காப்புறுதி கூட்டுத்தானம் பிரசித்தப்படுத்தலுக்காக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக மாணவர்களின் உரிமை கோரல்கள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

2018 – 2020 காலப்பகுதியில் சிசு சுரக்ஸா காப்புறுதியினை வழங்குதல்

சிசு சுரக்ஸா காப்புறுதி வழங்கப்பட்ட 2021/2022 காலப்பகுதி தொடர்பாக உடன்படிக்கை செய்யப்பட்டவாறு உரிமை கோரல்களுக்காக பிரதிபலன்கள் செலுத்தப்படுகின்றது என்பதனை கவனித்துப்பார்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தலானது பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் போதியளவு கவனத்துடன் நடவடிக்கை எடுத்திருக்காமையின் அடிப்படையில் அக் காலப்பகுதி தொடர்பாக மாணவர்களுக்கு செலுத்தப்படாத 8,000 காப்புறுதி உரிமை கோரல் விண்ணப்பப்பத்திரங்களுக்காக ரூபா 67.8 மில்லியன் பெறுமதியான உரிமை பிரதிபலனாக செலுத்தப்படாது கையில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

2024 யூலை 15 ஆந் திகதிக்கு முன்னர் காப்புறுதி செய்தவர்களுக்கு செலுத்த முடியாது மிகுதியான உரிமைப்பணம் காப்புறுதியாளர்களுக்கு செலுத்தி பூர்த்தி செய்ததன் பின்னர் அந்த உரிமைப் பணத்தை மீண்டும் இலங்கை இன்சூரன்ஸ் ஜெனரல் கோப்பரேஸன் லிமிடட் நிறுவனத்திற்கு மீளளிப்புச் செய்வதற்கு உள்ள இயலுமை தொடர்பாக விசாரிக்கப்பட்டுள்ளது. இப்பணத்தை மீளளிப்புச் செய்தல் தொடர்பான சிபாரிசினை பெற்றுக்கொள்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த சிபாரிசு பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.

உடன்படிக்கை செய்யப்பட்டவாறு உரிமை கோரல்களுக்காக பிரதிபலன்கள் செலுத்தப்படுகின்றது என்பதனை கவனித்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.6 செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	சிபாரிசுகள்
(அ)	2021 சனவரி 04 ஆந் திகதிய 2209/14 ஆம் இலக்க வர்த்தமானியில் விசேட முன்னுரிமையின் கீழ் அடையாளம் காணப்பட்ட 05 நகர பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கும் செயற்திட்டத்திற்காக 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 100 மில்லியன், ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 200 மில்லியன் திறன் பிரிவின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் கேகாலை பிரதேசத்தில் ஒரு கட்டிட தொகுதி தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக நீர்ப்பட்டியல், மின்சார பட்டியல், பாதுகாப்பு செலவுகள் என்பவற்றிற்காக ரூபா 16.74 மில்லியன் மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது மேற்கூறிய செலவுகளுக்காக ரூபா 1.2 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இன்றுவரை செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போழுது அமைச்சின் கீழ் காணப்படுகின்ற ஒரு நிறுவத்திற்கு இக்கட்டிடத்தினை வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டதுடன் அதன் பின்னர் 2025 சனவரி 10 ஆந் திகதி நடைபெற்ற நகர பல்கலைக்கழக கட்டிட அவதானிப்பு சுற்றுப் பயணத்தின் பின்னர் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் மூலம் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஒரு பல்கலைக்கழக கல்வி நிறுவனம் என இந்த நகர பல்கலைக்கழக கட்டிடத்தினை மாற்றுவதற்கு விருப்பத்தினை தெரிவித்து 2025 பெப்ரவரி 20 ஆந் திகதி ஒரு கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டதுடன் அதற்காக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	குறிக்கோளுடன் காணப்படுகின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2016 பெப்ரவரி 11 ஆந் திகதிய அமைப/16/0167/716/008 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் மூலம் ஒரு தேசிய கல்வி நிலையத்தினை ஸ்தாபிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் தேவையான காணியை ரொபாறுப்பேற்பதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு திறன் பிரிவினால் ரூபா 280 மில்லியன செலுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அதன் உரிமை அமைச்சின் தொழில்சார் கல்வி பிரிவிற்கு பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை	இக்காணியை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சினால் பொறுப்பேற்பதற்காக ரூபா 280 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது எனினும் காணி தொடர்பாக அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கை இன்றுவரை கிடைத்திருக்கவில்லை. காணியை சுவீகரிப்பதற்குரிய இழப்பீட்டு கொடுப்பனவு முடிவடைந்தரிருக்காமை மற்றும் காணியை சுவீகரிக்கும் நடவடிக்கை தற்போது இடம்பெற்றுவருவதனால் அந்த	இலக்கினை குறிக்கோளாகக் கொண்டு நிர்மாணத்திற்காக நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தலினை காணி தீர்த்துவைக்கப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்படும் வகையில் ஒரு நடைமுறை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்.

எடுக்கப்பட்டிருக்கவிலை. 2022 ஆம் ஆண்டிலும் விபரமான இலக்கின் (Descriptive Target) கீழ் 07 சந்தர்ப்பங்களை இலக்காகக் கொண்டு ரூபா 60 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிலையத்தின் நிர்மாண நடவடிக்கையை 24 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் எந்த மேலதிக நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் அமைச்சிற்கு காணி ஒப்படைக்கப்படம் என தெரிவித்து UDA இனால் 2023 யூலை 19 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	

4.7 காலதாமதத்தின் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	**இடை நிலை கல்விக்கான தகவல் தொழில்நுட்ப நிலையத்தினை ஸ்தாபித்தல்**		
	கல்வி அமைச்சினால் 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் சாதாரண கல்வி முறைமையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினை அமுல்படுத்துவதற்கான விபரமான பிரேரணையின் பெறுபேறாக தகவல் தொழில்நுட்ப நிலையத்தினை (ICT Hub) நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அமெரிக்க டொலர் 35 மில்லியன் கடன் உதவியின் கீழ் தகவல் தொழில்நுட்ப நிலையத்தினை நிர்மாணிப்பதற்குரிய பிரோரணை காணி தொழில்நுட்ப விடயத்தின் அடிப்படையில் அவ்வப்போது மாற்றம் செய்யப்பட்டிருந்ததனால் செயற்திட்டத்திற்குரிய கடன் உடன்படிக்கை 2019 ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்டிருந்தும் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. 2024 செப்தெம்பர் 18 ஆந் திகதி இச் செயற்திட்டம் மீண்டும்	கடன் உடன்படிக்கை கையொப்பமிடப்படாததன் அடிப்படையில் செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. உரிய கடன் உடன்படிக்கை 2024 செப்தெம்பர் 18 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டது. ஆதன் பின்னர் ஆலோசனை பெறுகை செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. எனினும் 2024 நவம்பர் மாதம் நடைபெற்ற சனாதிபதி தேர்தலின் பின்னர் அரசாங்கத்தின் புதிய கொள்கையுடன் இணங்கும் வகையில் செயற்திட்டத்தினை திருத்தம் செய்வதற்காக பெரிய அளவிலான செயற்திட்டங்களை மீளாய்வு செய்வதன் கீழ் இச் செயற்திட்டத்தினையும் மீளாய்வு செய்தல் ஆரம்பிக்கப்பட்டது. National Level ICT Hub செயற்திட்டம் தொடர்பான கடன் உடன்படிக்கையை திருத்தம் செய்தல் கொரிய EXIM வங்கியினால்	இச் செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டு 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்துள்ளதனாலும் தற்பொழுது தொழில்நுட்பம் மேம்பட்ட நிலையில் காணப்படுவதனாலும் இவ்வாறான செயற்திட்டத்தின் தேவைப்பாடு காணப்படுகின்றதா என்பது தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்து செயற்திட்டத்தினை முன்னெடுத்து செல்ல வேண்டுமா என்பது தொடர்பாக தீர்மானம் எடுத்தல் வேண்டும்.

செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட கால எல்லையை 2026 மே 10 ஆந் திகதி வரை நீடிப்பு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுகளை தோற்றுவித்தல், ஆலோசனை நிறுவுனத்தை தெரிவு செய்தல் போன்ற செயற்திட்டத்தின் தொடர் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையாலும் இச் செயற்திடடம் முன்மொழியப்பட்டு 11 ஆண்டுகள் மற்றும் உடன்படிக்கை செய்யப்பட்டு 07 ஆண்டுகள் தாமதமாகி காணப்படுவதனாலும் ஒரு வெளிநாட்டு கடன் செயற்திட்டமாக இன்னும் செயற்திட்டத்தை முன்கொண்டு செல்ல வேண்டுமா என்பது தொடர்பாக போதியளவு மீளாய்வு செய்ததன் பின்னர் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடு என்பதனாலும் இலங்கை அரசாங்கத்தின் கடனைம மீள் கட்டமைப்புச் செய்யும் நடைமுறையின் காரணமாகவும் இக் கடன் உடன்படிக்கையின் திருத்தம் தாமதித்தல் கொரிய EXIM வங்கி தரப்பினர் மேற்கொண்டதனால் அவ்வப்போது இது சம்பந்தமாக ஞாபகப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டது.	

(ஆ) இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் தோட்ட பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள்**	**சிபாரிசுகள்**
இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் மத்திய, ஊவா, சப்ரகமுவ தெற்கு ஆகிய மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட 09 தோட்ட பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 300 மில்லியனான இச் செயற்திட்டத்திற்கு 2019 யூன் 19 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தபோதிலும் மேற்கூறிய செயற்பாடகளுக்கு ரூபா 300 உதவி போதியதாக இல்லாமை மற்றும் விலைகள் அதிகரித்தலினை காரணமாக காட்டி 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரை மூன்று சந்தர்ப்பங்களின் போது ரூபா 632.77 மில்லியன் வரை மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருந்தும் மற்றும் மீளாய்வாண்டிற்கு ரூபா 2.35 மில்லியன் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்து 06 ஆண்டுகள் தாமதித்திருந்தும் மீளாய்வாடின் போது	2019 ஆம் ஆண்டில் கொவிட் தொற்றுநோய் வந்திருந்ததன் காரணமாக இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தாமதமடைதல், 2021 ஆம் ஆண்டில் பொருளாதார பிரச்சினை வந்திருந்ததனால் விலைகள் அதிகரித்தன் காரணமாக இலங்கை ரூபா 300 மில்லியன் இந்திய உதவி போதியதாக இல்லாததனால் இந்திய குடியரசு இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் மூலம் இலங்கை ரூபா 600 மில்லியனுக்கு மானிய நிதியை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது. அதற்கிணங்க இது தொடர்பான அமைச்சரவை அங்கீகாரம் 2024 யூலை 29	செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வு செய்து ஆக்கபூர்வமாக முடிவு செய்து பிரதிபலன்களை உரிய காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

செயற்திட்டம் தொடர்பாக எந்த செயல்முன்னேற்றமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2025 மார்ச் 31 ஆந் திகதி வரையும் பெறுகைகளின் தொடக்க பகுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் இந்த இந்திய உதவி செயற்திட்டத்தினை ஆக்கபூர்வமாக நிறைவேற்றி ஒரு நாடாக பிரதிபலன்களை உரிய காலத்தில் அடைந்து கொள்வதற்கு தவறியிருந்தது.	ஆந் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க ரூபா 600 மில்லியன் மானியத்தை பெற்றுக்கொள்ளல் சம்பந்தமான பரிமாற்றல் கடிதத்திற்கு மற்றும் ஏற்றுக்கொள்ளல் கடிதத்திற்கு 2024 ஒக்தோபர் 18 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டது. தற்போழுது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் பெறுகை ஆவணங்கள் இந்திய தூதரகத்திற்கு மீளாய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	

4.8 வெளிநாட்டு உதவி செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	**இரண்டாம் நிலைக் கல்வித் துறையினை மேம்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக (SESIP) கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை**		
(i)	இரண்டாம் நிலை கல்வித்துறையை அபிவிருத்தி செய்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் 07 வெளிப்படுத்தல் இணைப்பு குறிகாட்டிகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் கட்டமைப்பானது 65 பிரதான செயலாற்றல் குறிகாட்டிகளை (KPTS) உள்ளடக்கியிருந்ததுடன் அது தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்காக 09 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் கல்வி அமைச்சில் ஒரு தரவு முறைமை உருவாக்க வேண்டி காணப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதி வரையும் உரிய செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.	NEMIS முறைமையை தயாரித்து தரவுகளை உள்ளடக்கி தரவு அறிக்கையின் மூலம் ஒழுங்குபடுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் கட்டமைப்பிற்கு தேவையான தரவுகளை சேகரிப்பதற்கு முடியுமான வகையில் அந்த முறைமை பூரணமாகும் வரை தற்போது DH152 மென்பொருளின் மூலம் ஒழுங்குபடுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் கட்டமைப்பின் தரவுகளை சேரிக்கும் முறைமையை தயாரித்து 2024 ஏப்ரல் 08 ஆந் திகதி உரிய பிரிவிற்கு அவதானிப்புக்கள் மற்றும் சிபாரிசுகளை வழங்குவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அந்த சிபாரிசுகள் கிடைக்கும் வரை அதற்காக பதில் பெற்றுக்கொள்ளப்படாததனால் தரவு முகாமைத்துவ கிளையினால் அடையாளங்	எதிர்பார்த்த இலக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். கல்வி பிரிவு தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு முக்கியத்துவமான கல்வி அமைச்சில் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையை ஸ்தாபித்தல் வேண்டும்.

		காணப்பட்ட மற்றும் பின்னர் இடம்பெற்ற கலந்துமைரயாடலின் போது அடையாளம் காணப்பட்ட புதுப்பித்தல்களையும் உள்ளடக்கி அபிவிருத்தி செயற்பாடுகள் முடிவு செய்யப்பட்ட முறைமையை செயற்பாடானதாக பேணுதல் மற்றும் உரிய நிறுவனங்களில் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ii)	தரவு முகாமைத்துவ முறைமையில் உள்ள முக்கியத்துவத்தினை கவனத்திற்கு எடுத்து தரவு அடிப்படையினை தயாரிப்பதற்காக கல்வி அமைச்சின் தகைமைபெற்ற மென்பொருள் பொறியிலாளர் இல்லாமையின் காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக ஆலோசனை முகாமைத்துவ முறைமையின் மூலம் 04 ஆலோசகர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தடுன் உரிய ஆலோசகர்களினால் 06 மாதகால எல்லைக்குள் தரவு அடிப்படை உருவாக்கப்பட வேண்டியதுடன் அதற்கான செலவு ஆசியா அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்படும் என காட்டப்பட்டிருந்தது. உரிய ஆலாசகர்களை ஈடுபடுத்தி தரவு அடிப்படையினை உருவாக்கி வெளிப்படுத்துதுதல் இணைப்பு குறிகாட்டியை நிறைவேற்றுதல் மிகவும் முக்கியத்துவமான போதிலும் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தவறியிருந்தார்கள்.	04 ஆலோசகர்கள் 06 மாதகாலப்பகுதிக்காக சேர்த்துக் கொள்வாதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆலோசனைகள் சம்பந்தமாக முழுமையான தகவல் இதுவரை தரவு முகாமைத்துவ கிளை தெரியப்படுத்தியிருக்கவில்லை. மேலும் 2022 ஆம் ஆண்டில் 18 – 32 மாத காலம் தேவைப்படும் என எதிர்பார்க்கப்பட்ட இச் செயற்பாடு 06 மாத எல்லைக்குள் பூரணப்படுத்த முடியும் என்பது கலந்துரையாடப்படவில்லை. மேலும் ஆலோசகர்களை சேர்த்துக்கொண்டு 06 மாதங்களை மிகைத்ததன் பின்னர் மேலதிக நடைமுறை தொடர்பாகவும் இதுவரை தெரியப்படுத்தப்படவில்லை.	எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொளள்ப்படுதல் வேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கி மானியமாக கிடைக்கின்ற ஆலோசகர்களின் மூலம் வெளிப்படுத்தல் இணைப்பு குறிக்காட்டிகளுக்குரிய தரவு அடிப்படையினை உருவாக்குதல் வேண்டும்.

(ஆ) பொலனறுவை மாவட்டத்தில் பல்லின மற்றும் மும்மொழி கல்வியுடன் ஒரு புதிய தேசிய பாடசாலையை நிர்மாணித்தல்

இந்திய குடியரசின் உதவியின் கீழ் பொலனறுவை மாவட்டத்தில் பல்லின மற்றும் மும்மொழி கல்வியுடன் ஒரு புதிய தேசிய பாடசாலையை நிர்மாணிப்பதற்காக 2016 திசெம்பர் 07 ஆந் திகதிய அமைப/16/24/66/742/039 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் கிடைத்துள்ளதுடன் இச் செயற்திட்டத்தின் கீழ் இரண்டு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க கட்டம் 01 கட்டிடங்களை நிர்மாணித்தல் இந்திய உதவியின் கீழ் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த ஒப்பந்தத்திற்குரிய பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் ஆலோசனைக் கட்டணம் மாத்திரம் உள்நாட்டு நிதியிலிருந்தும் அவ்வாறே கட்டம் 02 கட்டிடங்களின் முழுமையான செலவு உள்நாட்டு நிதியிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

செயற்திட்டம் தாமதமடைந்ததன் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம்

(i) பாடசாலையின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக ரூபா 297.84 மில்லியனான ஒப்பந்தம் தொடர்பாக 2018 ஆம் ஆண்டில் ஆரம்ப முற்பணமாக ரூபா 59.57 மில்லியன் மற்றும் அது தொடர்பான பெறுமதிசேர் வரிப் பணமாக ரூபா 09 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. பெறுமதி சேர் வரிப்பணத்திற்குரிய முற்பணங்கள் பிணையை பெற்றுக்கொள்வதன் மூலம் அல்லது இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்துடன் பெறுமதி சேர் வரிப்பணத்திற்குரிய முற்பண பிணை தொடர்பாக உறுதிப்பத்திக் கொள்ளாது அமைச்சினால் பெறுமதி சேர் 2018 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட முற்பணத்திற்குரிய வெட் வரிப் பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் ஒப்பந்தாரரிடமிருந்து அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு செயற்பாடாகும். இது பற்றி உறுதிப்படுத்தலானது அரசாங்க நிதி திணைக்களத்தின் 2017 மே 25 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றது. இதற்கிணங்க அந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்திய முடியரசின் உதவியின் கீழ் இடம்பெறுகின்ற நிர்மாண செயற்திட்டத்தின் கொடுப்பனவுகளுக்குரிய வெட் வரிப் பணம் கல்வி அமைச்சின் மூலம் இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்து ஒப்பந்தகாரருக்கு கொடுப்பனவு செய்வதன் காரணமாக ஒப்பந்தகாரரினால் முற்பணத்திற்குரிய வெட் வரிப் பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதா

	வரிப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. நிர்மாண நடவடிக்கைகளின் தாமதத்தின் காரணமாக 2020 சனவரி 22 ஆந் திகதிய உடன்படிக்கை முடிவுசெய்யப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக முற்பணத்துடன் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிப்பணத்தின் ரூபா 6.13 மில்லியன் நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களங்களிடமிருந்து உரிய வெட் வரிப் பணம் அரசாங்கத்திற்கு கிடைப்பதனை உறுதிப்படுத்துதல் அல்லது அவ்வாறு இல்லையாயின் அரசாங்கதிற்கு ஏற்பட்ட நட்டத்தை ஒப்பந்தகாரரிடமிருந்து அறவீடு செய்வதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பணத்தை மீண்டும் அறவீடு செய்யும் இயலுமை இந்த அமைச்சிற்கு இல்லாததுடன் இந்த ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையும் இந்த அமைச்சுடன் இல்லை என உறுதிப்படுத்துவதுடன் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு அமைச்சுடன் ஒரு உடன்படிக்கை இல்லாத ஒப்பந்தகாரருக்கு நடவடிக்கை எடுக்க முடியாது எனக் குறிப்பிடுகின்றேன்.	என்பதனை கல்வி அமைச்சினால் உறுதிப்படுத்தி அதற்கிணங்க ஏற்பட்டுள்ள நட்டத்தை ஒப்பந்தகாரரிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும்.
(ii)	2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கட்டம் 01 கட்டிடங்களுக்காக ரூபா 227.22 மில்லியன் (வெட் வரியுடன்) பணம் செலவு செய்து நோக்கெல்லையை மட்டுப்படுத்துலுடன் 100 சதவீத பௌதீக செயல் முன்னேற்றமும் கட்டம் 02 கட்டிடங்களுக்காக ரூபா 111.43 தொகையும் (வெட் வரியுடன்) செலவு செய்து 42 சதவீதமான பௌதீக செயல்முன்னேற்றமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு செயற்திட்டத்தின் கட்டம் 01 கட்டடிடங்களின் கூரை மற்றும் முதலாவது மாடியினை மாத்திரம் முடிவு செய்து உரிய ஒப்பந்தகாரரினால் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் கட்டம் 02 கட்டிடங்களின் ஒப்பந்தம் பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் இரத்துச் செய்வதற்காக 2025 ஏப்ரல் 03 ஆம் திகதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 535.7 மில்லியன் செலவு செய்யப்பட்டு மும்மொழி தேசிய பாடசாலையினை ஆரம்பிப்பதற்காக திட்டமிடப்பட்ட	தற்போது இக்கட்டிடம் பயன்படுத்தப்படுவது எந்த செயற்பாடு சம்பந்தமாக என்பது உறுதியாக இல்லாததுடன் தற்போது பிரதேசத்தின் தேவைப்பாடு சம்பந்தமாக பொலன்னறுவை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் பிரேரணைகளைப் பெற்று சமர்ப்பிக்குமாறு பொலனறுவை மாவட்ட செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த பிரேரணையை கவனத்திற்கு எடுத்துக்கொண்டு கல்வி அமைச்சினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.	திட்டமிட்டவாறு நிர்மாண நடவடிக்கைகளை முடிவு செய்து செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கட்டிடம் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததன் காரணமாக 2018 ஆம் ஆண்டிலிருந்து 07 ஆண்டுகள் தாமதித்து காணப்பட்டிருந்தும் செயற்திட்டத்தின் குறிக்கோள் இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உரிய தரப்பினர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டு உதவி செயற்திட்டத்தினை அமுல்படுத்த வேண்டிய போதிலும் இச் செயற்திட்டத்திற்காக இந்திய அரசாங்கத்திற்கும் கல்வி அமைச்சிற்குமிடையே உருவாக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படவில்லை.

(இ) **இந்திய அரசாங்கத்தின் உதவியின் கீழ் புஸல்லாவை மத்திய மகா வித்தியாலயத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டம்**

(இ) இச் செயற்திட்டம் ரூபா 74.91 மில்லியன் செலவில் 2024 ஆம் ஆண்டின் போது நிர்மாண நடவடிக்கைகள் முடிவடைந்திருந்ததுடன் அந்த உதவியின் கீழ் மிகுதி பணத்தின் மீளாய்வாண்டின் போது ரூபா 3.77 மில்லியன் பெறுமதியான தகவல் தொழில்நுட்ப உபகரணங்களையும் ரூபா 2.9 மில்லியன் பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்களையும் கொள்வனவு செய்வதற்கு இந்திய அரசாங்கம் அங்கீகரித்திருந்தது. இந்த 02 செயற்பாடுகளின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்ணயிக்கப்பட்டவாறு திட்டங்களுக்குள் அந்த 02 செயற்பாடுகளையும் உள்ளடக்கி 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான புதிய செலவு விடயங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்திய அரசாங்கம் 2019 ஆம் ஆண்டின் போது கொள்வனவு

2023 ஆம் ஆண்டின் போது இந்திய உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் மூலம் இந்த மிகுதி பணத்திற்கான பொருட்களை கொள்வனவு செய்வது சம்பந்தமான பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும், இச் செயற்திட்டத்திற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பணத்திற்கும் விலை மறுவிற்கும் (Price bids) இடையே அதிக அளவிளான வித்தியாசம் காணப்பட்டதன் காரணமாக 2024 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் முன்னாள் கல்வி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலுககு இணங்க இச் செயற்திட்டத்தின் பெறுகை நடவடிக்கை இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. அதற்கிணங்க ஆண்டின் நடுப்பகுதியில் உரிய செலவு விடயங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. 2025 ஆம்

இச் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக செலவு செய்வதற்கு தேவையான புதிய செலவு விடயத்தை உருவாக்குதல். மற்றும் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வற்கு துரித நடவடிக்கை எடுத்து செயற்திட்டத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு பொறுப்பு கூற வேண்டிய உத்திகேயாகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். உள்நாட்டு ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் கிடைகின்ற பணம் மற்றும் பொருட்களை கணக்கீடு செய்தல் மற்றும் அதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் 1994 ஏப்ரல் 20 ஆம் திகதி 30/94 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள்

செய்வதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்த ரூபா 3.77 மில்லியன் (வெட் இல்லாது) பெறுமதியான தகவல் தொழில் நுட்ப உபகரணங்கள் 06 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் 2025 ஜனவரி 22 ஆம் திகதி சரஸ்வதி மத்திய மகா வித்தியாலயத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய பெறுகை நடவடிக்கையானது செலவு விடயம் அங்கீகரிக்கப்படாதிருந்தும். 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மேலும் ரூபா 2.9 மில்லியனான (வெட் இல்லாது) ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்யும் பெறுகை நடவடிக்கை 2025 மே 31 ஆம் திகதி வரையும் ஆரம்பிக்கப்படவில்லை.	ஆண்டின் போது அதற்குரிய செலவு விடயமும் நிதி ஏற்பாடும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய காலத்தில் மேற்கொள்வதற்கும் நிதி ஏற்பாடு அங்கீகாரத்தின் பின்னர் பெறுகை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பாதீடு மற்றும் பெறுகை நடவடிக்கைகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.9 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை	சிபாரிசுகள்
(அ) கோட்ஜென் நிறுவனத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள EDU Net மென் பொருளும் அதன் செயலாற்றலும்.		
(i) Codegen எனும் பெயருள்ள நிறுவனத்தின் ஒரு செயற்திட்டமாக இலங்கையிலுள்ள அரசாங்கத்தின் மற்றும் தனியார் துறையின் 18 பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற Cloud Smart School மென் பொருளை அமைச்சின் தரவுத் தேவைப்பாட்டிற்கு பொருந்தும் வகையில் அபிவிருத்தி செய்வதற்கும் அதற்கிணங்க தயாரித்த EDUNET மென் பொருளை 05 ஆண்டுகள் காலத்திற்கு ஒரு சமூக சேவை செயற்திட்டமாக (CSR) வழங்குவதற்கும் ஒரு பிரேரனை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அப் பிரேரனை சம்பந்தமாக சாத்திய வள ஆய்வினை மேற்கொண்டு	கணக்காய்வு ஐய வினாக்களில் சமர்பிக்கப்படுகின்ற உடன்படிக்கையானது சேவை உடன்படிக்கை அல்ல அந்த உடன்படிக்கையானது சேவை உடன்படிக்கை மேற்கொள்வதற்கு முன்னர் எதிர்பார்த்த விடயத்தின் சாத்திய வளத்தினை கவனித்துப் பார்ப்பதற்காக முன்னோடி செயற்பாட்டின் இடைக்காலத்தின் போது இரு தரப்பினர்களும் தரவுகளை ஏனைய தரப்பினர்களுக்கு வெளிப்படுத்தாமைக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடாகிய தரவு வெளிபடுத்தப்படாமை உடன்படிக்கையாகும். தரவு முறைமையின் சாத்திய	முறையான அங்கீகாரமின்றி தாபன விதிக் கோவையின் 47 ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவிற்கு முரணாக ஒரு வெளி நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்த தரப்பினர்கள் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சிபாரிசினை வழங்குவதற்கு 2024 பெப்ரவரி 09 ஆம் திகதி நியமித்த குழுவின் சிபாரிசு 2024 ஏப்ரல் 19 ஆம் திகதி கிடைத்திருந்ததுடன் Godegen நிறுவனத்தினால் சமர்பித்த பிரேரணைகள் அமைச்சரவையின் அங்கீகாரத்தினை உள்ளடக்கிய சட்ட ஏற்பாடுகள் எடுக்கப்பட வேண்டும் என குழு சிபாரிசுகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் குழு சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்கு முன்னர் தனியார் கம்பனியுடன் வெளிப்படுத்தாதிருத்தல் இணக்கப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சரவை அங்கீகாரம் இல்லாது தாபன வதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவிற்கு முரணாக அந்த நிறுவனத்துடன் வெளிப்படுத்தாமை பரஸ்பர இணக்கப்பாட்டிற்கு முறையான அங்கீகாரம் இல்லாது 2024 பெப்ரவரி 01 ஆம் திகதி மேலதிக செயலாளரினால் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கல்வி) அவரின் அதிகாரத்தினை முறையற்ற வகையில் பயன்படுத்தி தனி அப்பிராயத்திற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.	வளத்தினை ஆய்வு செய்வதற்கான ஒரு முன்னோடி செயற்திட்டமாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஸ்தாபிப்பதற்கு மேலதிக செயலாளரின் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கல்வி) தலைமையில் 2024 ஏப்பரல் 08 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க இத்தகவல் முறைமையின் ஆரம்ப செயல்முன்னேற்றத்தினை கவனித்துப் பார்த்து உரிய அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான தொடக்க நடவடிக்கைகள் அப்போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க உரிய உத்தியோகத்தர்கள் உங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முறையில் தாபன விதித்கோவைக்கு முரணாக நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என அவதானிக்கப்படவில்லை.	
(ii)	2016 பெப்ரவரி 12 ஆம் திகதிய அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் பணிப்புரை இலக்கம் 09 இற்கு இணங்க பாடசாலை மாணவர்களின் மற்றும் ஆசிரியர்களின் தகவல்களை உள்ளடக்கிய ஒழுங்கமைக்கப்பட்ட கணனி முறைமையை தயாரித்து அமுல்படுத்துமாறு பணிப்புரை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2025 ஒக்டோபர் 10 ஆம் திகதி வரை ஒழுங்கு அமைக்கப்பட்ட தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை உருவாக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்கால கல்வியை திட்டமிடும் போதும் கொள்கையை தயாரிக்கும் போதும் ஒட்டுமொத்த கல்வி முறைமையை டிஜிடல் மயப்படுத்துவதற்கு உட்படுத்தலானது	தற்போது கல்வி அமைச்சு ஆசிரியர் தகவல் முறைமையை பேணிவருகின்றது.	தேசிய கல்வி முகாமைத்துவ முறைமையை ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கண்டிப்பானதுடன் அதற்காக கல்வி துறையின் நோக்கெல்லைக்குரிய நானாவித முகாமைத்துவ தீர்மானங்கள் எடுப்பதற்கு தேவையான தரவுகள் காணப்பட வேண்டிய பிரதான மொடியூலின் பிரகாரம் தயாரித்து நாளதுவரையாக்கிய மற்றும் சரியான தரவுகளை உள்ளடக்கிய ஒரு தகவல் முறைமையை தயாரிப்பதற்கு கல்வி அமைச்சு தவறியிருந்தது.		
(iii)	கல்வித் துறையிலுள்ள பெறுமதியான தரவுகளை முறையான அங்கீகாரமின்றி வெளிதரப்பினர்களுக்கு கிடைக்கும் வகையில் தமது அதிகாரத்தினை மீறி ஒரு தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை செய்த மேலதிக செயலாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிடல் கல்வி) சம்பந்தமாக 2023 திசெம்பர் 29 ஆம் திகதிய 54/2023 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையிலுள்ள வழிக்காட்டி கையோட்டின் CEX 6 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது. 18 தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் Codegen நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட Cloud Smart School மென் பொருளினை பாடசாலையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமை சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.	இது எந்த வகையிலும் ஒரு சேவை உடன்படிக்கை அல்லாததுடன் முன்னோடி செயற்படுத்தலின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் பரிமாற்றம் செய்யப்படுகின்ற தகவல்கள், எதிர்விளைவுள்ள தரவுகளை வெளிப்படுத்தாமல் இருப்பதற்காக நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடாகும். தகவல் முறைமையின் சாத்தியவள ஆய்வுக்கான ஒரு முன்னோடி செயற்திட்டமாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஸ்தாபிப்பதற்கு மேலதிக செயலாளரின் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிடல் கல்வி) தலைமையில் 2024 ஏப்ரல் 08 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. அதற்கிணங்க இத்தகவல் முறைமையின் ஆரம்ப செயல்முன்னேற்றத்தினை கவனித்துப்பார்த்து உரிய அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் அப்போது ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க உரிய உத்தியோகத்தர்கள் உங்களால் சுட்டிக்காட்டியுள்ள முறைமையின் தாபன விதிக்கோவைக்கு முரணாக நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என அவதானிக்கப்படவில்லை	54/2023 ஆம் இலக்க 2023 திசெம்பர் 29 ஆம் திகதி சுற்றறிக்கைக்குரிய வழிகாட்டிக் கையேட்டின் CEX 6 ஆம் பிரிவின் பிரகாரம் கல்வித் துறையிலுள்ள தரவுகளை முறையான அங்கீகாரமின்றி வெளித்தரப்பினர்கள் பயன்படுத்துவதற்கு இடமளித்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினர்கள் சம்பந்தமாக தேவையான மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

(ஆ) **புத்துருவாக்கல் ஆய்வுகூடத்திற்கு அதிக தொழில்நுட்பம் வாய்ந்த உபகரணங்களை கொள்வனவு செய்தல்.**

(i) இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக வழங்கப்பட்ட 2021 திசெம்பர் 23 ஆம் திகதிய 20/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு புத்துருவாக்கல் ஆய்வுகூடத்திற்கு வேவையான உபகரணங்களுக்கு மத்தியில் உயர்ந்த நியம தரமுள்ள மற்றும் உத்தரவாதத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய அதிக தொழில்நுட்பமிக்க உபகரணத்தை கல்வி அமைச்சின் மூலம் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க 45 பாடசாலைகளுக்கு ஒரு முன்னோடி செயற்திட்டமாக ரூபா 79.96 மில்லியன் செலவு செய்து முப்பரிமான அச்சு இயந்திரங்கள் உள்ளடங்கலாக அதிக தொழில்நுட்பம் வாய்ந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய பந்திக்கு இணங்க 750 பாடசாலைகளில் புத்துருவாக்கல் ஆய்வுகூடம் சிறப்பாக செயற்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த உயர் மட்டத்திலான பொருள் விபரக் குறிப்பினை தயாரித்து அதிக தொழில்நுட்பமிக்க உபகரணங்களை கொள்வனவு செய்யும் போதும் பயன்படுத்தும் போதும் பராமரிப்பு கிரயம் முப்பொருள் கிரயமும் தொடர்பாக செலவு செய்ய வேண்டும். என்பதனை பொருட்படுத்தாது நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இதற்காக நீண்ட கால நிதி மற்றும் செயற்பாட்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

தற்பொழுது 45 பாடசாலைகளில் 39 பாடசாலைகளுக்கு இந்த உபகரணங்கள் ஸ்தாபிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதுடன் மிகுதியான 06 பாடசாலைகளில் ஸ்தாபிக்கும் நடவடிக்கையானது 2025.05.31 ஆம் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்படும் என Metropolitan நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த உபகரணங்கள் குறைந்த பயன்பாட்டிற்கு உட்படாமல் இருப்பதற்காக இந்த 45 பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் Metropolitan நிறுவனத்திலிருந்து பொருத்தமான உத்தியோகத்தர்களை அழைத்து தேவையான தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு நிகழ்ச்சிதிட்டம் 2025 செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க உரிய உபகரணங்களை ஸ்தாபிக்கும் நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் அந்த நிகழிச்சி திட்டத்தினை நடாத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கிணங்க புத்துருவாக்கல் ஆய்வுகூடங்களை துரிதமாக அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் அமுல்படுத்தப்படுகின்ற கல்வி மறுசீரமைப்பின் கீழ் புத்துருவாக்கலை உருவாக்குவதற்காக இந்த ஆய்வுகூடங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்த அதிக தொழில்நுட்ப உபகரணங்களை பயன்படுத்தாமல் எனவும் தெரிவிக்கின்றேன். புத்துருவாக்கல் ஆய்வுகூடங்களுக்கு தேவையான ஆகக்குறைந்த நியமதரங்களை தயாரிப்பதங்காகவும் 2025 ஆம்

அமுல்படுத்தும் செயற்பாட்டுதிட்டத்தினை காலப்பகுதியுடன் தயாரித்து செயற்திட்டத்தினை வெற்றி பெறச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.	
(ii)	தொழில்நுட்ப புத்துருவாக்கல் ஆய்வுகூடத்திற்கு உபகரணங்களை பெறுகைசெய்யும் (வழங்குதல், கொண்டுவந்து ஒப்படைத்தல் மற்றும் ஸ்தாபித்தல்) செயற்பாட்டிற்காக கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் கேள்வி ஆவணங்களின் vii இன் CC 15.1 ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ள சேவைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவும் உறுதிப்படுத்தியதன் பின்னர் 30 நாட்களுக்குள் ஒப்பந்தத்தின் விலையின் நூற்றுக்கு நூறு சதவீதம் வழங்குனருக்கு செலுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அதற்கு முறனாக லெப்டொப் கணணி மற்றும் முப்பரிமான அச்சு இயந்திரம் என்பவற்றை பெற்றுக்கொள்வதனை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு மற்றும் உரிய பாடசாலைகளுக்கு ஒப்படைத்தல் ஸ்தாபித்தல் ஆகிய செயறபாடுகள் நிறைவேற்றப்படாதிருந்தும் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 50.55 மில்லியன் பணம் வழங்கல் நிறுவனத்திற்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	2024.12.27 ஆம் திகதி வழங்குனரின் களஞ்சியத்தில் தரப்பரிசோதனை குழுவினால் லெப்டொப் கணணி மற்றும் முப்பரிமான அச்சு இயந்திரங்களின் போதியளவான மாதிரியினைப் பரீட்சித்து பத்தலகெதர களஞ்சியத்திற்கு ஒப்படைத்தல் பொருத்தமானது என சிபாரிசு செய்யப்பட்டிருந்ததுடன் அப் பொருட்கள் 2024.12.28 ஆம் திகதி பத்தலகெதர களச்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. வழங்குனரினால் 2024.12.16 ஆம் திகதி ஒரு கடிதத்தினை சமர்பித்து 2024.12.28 ஆம் திகதியளவில் மிகுதி இரண்டு வகையான பொருட்கள் துறைமுகத்திற்கு வந்துள்ளதனால் அப் பொருட்களை விடுவிப்பதற்கு எடுக்கும் காலத்தை கருத்தில் கொண்டு 2025.01.15 ஆம் திகதியளவில் பொருட்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 2024.12.31 ஆம் திகதியில் ஆண்டிற்கான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாடு முடிவடைந்ததனால் மற்றும் 2025 தொடக்க காலாண்டிற்கு வாக்கு கணக்கு தீர்மானத்தின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுவதனால் 2025 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் உருவாக்கப்படாதிருக்க வேண்டும் என அறிவுத்தல் வழங்கப்பட்டுள்ளதனால் நடைமுறை நிலைமைக்கு இணங்க களச்சியத்திற்கு வழங்கப்பட்ட பொருட்களுக்காக செலுத்த வேண்டிய பெறுமதிக்கு சமமாக வங்கிப்பினையை பெற்று உரிய பணம் வழங்குனருக்கு செலுத்தப்பட்டது. மிகுதிப்	உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளவாறு கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். உடன்படிக்கை நிபந்தனைகள் பின்னர் மாற்றப்படுவதனால் கேள்விதாருக்கு கணிசனான அளவில் பதிலலிக்கும் சந்தர்ப்பம் மட்டுப்படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் அதனட மூலம் முதலாவது சந்தர்பத்திலேயே கணிசமான அளவில் பதிலளித்த ஆகக் குறைந்த கேள்விதாரரினை தெரிவுசெய்யும் சந்தர்ப்பம் இழக்கப்படுவதனால் அரசாங்கத்திற்கு பாதகமான நிலைமை உருவாகுவதனால் உடன்படிக்கை நிபந்தனைகளை பின்னர் மாற்றம் செய்த உத்தியோகத்தர்கள் பொறுப்புக்கு உள்ளாகுவார்கள்.

		பொருட்களும் 2025.01.31 ஆம் திகதியளவில் பத்தல கெதர களச்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது அனைத்து பகிர்ந்தளித்தள்களும் முடிவுசெய்யப்பட்டுள்ளது. மிகுதி கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு மிகுதியாக உள்ளது.	
(iii)	பெறுகை வழிக்காட்டி கோவையின் 5.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் சாத்தியமான கேள்விதாரர்களுக்கு தெரிப்யபடுத்துதல் மற்றும் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதனை போல வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களினால் எதிர்பார்த்த தேவைப்பாடுகள் பற்றி இரு தரப்பினர்களும் தெரிந்துகொள்வதற்காக அனைத்து பெறுகைகளுக்காகவும் கேள்வி கோரல் ஆவனங்களை தயாரித்தலானது. பெறுகை குழுவிடம் எதிர்பார்க்கபடுகின்றது என குறிப்பிடப்படுகின்றது. அதற்கிணங்க இந்த கேள்வி வழங்குதல் ஆண்டின் இறுதியில் அமுல்ப்படுத்தப்படுவதினால் ஏற்படக்கூடிய நிச்சயமற்றவைகளுக்கு பொருந்தும் வகையில் கேள்விக்கான கொடுப்பனவுகள் சம்பந்தமான நிபந்தனைகளைத் தயாரித்து கேள்வி ஆவணங்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருந்தும் இவ்வாறு உடன்படிக்கைக்கு முரணாக ரூபா 50.55 மில்லியன் கொடுப்பனவு செய்தல் சம்பந்தமாக கொடுப்பனவுகளை சிபாரிசு செய்த பிரதான கணக்காளர் (பெறுகைகள்) கொடுப்பனவுகளை அங்கீகரித்த மேலதிக செயலாளர் (பெறுகைகள்) மற்றும் கொடுப்பனவுகளை சான்றுபடுத்திய உத்தியோகத்தர்கள் பொறுப்பு கூற வேண்டி இருந்தது.	இப்பெறுகை 2024.03.07 ஆம் திகதி ஆரம்பிக்கப்கட்டுள்ளதுடன் கேள்வி கோரல் 2024.05.14 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. 4.3.2(அ) பிரிவில் விளக்கமளிக்கப்பட்டுள்ளவாறு. பெறுகைகள் மேற்கொள்ள படுகின்ற வேளையில் இடம்பெறுகின்ற எதிர்பாராத நிலைமைகளின் அடிப்படையில் மீண்டும் நிதி ஏற்பாடு நி.பி 66 இன் கீழ் மாற்றம் செய்ய வேண்டி ஏற்படுவதனால் பெறுகை வழங்குதல் தாமதமடைந்துள்ளது. நீங்கள் சுட்டிகாட்டியுள்ளவாறு கேள்வி ஆவணங்களை தயாரிக்கும் போது அவ்விடயம் உருவாகியிருக்காததுடன் நிச்சயமற்ற நிலைமைகளுக்காக பிரிவினை உள்ளடக்குவதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை காணப்பட்ட நடைமுறை நிலைமையின் அடிப்படையில் ஒப்பந்த நிருவாகத்தின் கீழ் 2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துவதற்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக எனது அங்கீகாரத்தின் கீழ் பொருட்கள் பத்தலகெதர களச்சியத்தினால் பொறுப்பேற்கப்பட்டு தரப்பரிசோதனையின் பின்னர் பொருட்களின் பெறுமதியில் 80% இனை கொடுப்பனவு செய்வதற்கும் மிகுதி 20% இனை பொது வைப்பு கணக்கில் வைத்திருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் 2025 தொடக்க காலாண்டிற்கான உப கணக்கு தீர்மானத்தின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு	- மேற்படி -

செய்யப்படுவதனால் 2025 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஏற்படுத்திகொள்ளாதிருக்க வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதனால் நடைமுறை நிலைமைக்கு ஏற்ப களஞ்சியத்திற்கு வழங்கப்பட்ட பொருட்களுக்காக பொருட்களை பொறுப்பேற்கும் குழுவின் சிபாரிசினை பெற்றுக்கொண்டதன் பின்னர் செலுத்த வேண்டிய பெறுமதிக்கு சமமாக நிபந்தனையற்ற ஒரு வங்கி பிணையை பெற்று உரிய பணம் வழங்குனருக்கு செலுத்தப்பட்டது.

(இ) சீனா உதவியின் கீழ் 500 ஸ்மார்ட் பலகைகளைப் பெற்று முன்னோடி செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்

(i) சாதாரண கல்வியை டிஜிட்டல் முறைமைக்கு பரிமாற்றத்திற்கு உட்படுத்துவதற்கான செயற்திட்ட பிரேரனையின் உத்தேச எதிர்கால கல்வி மறுசீரமைப்பின் கீழ் முன்னணி பாடசாலையாக அடையாளம் காணப்பட்ட 1,500 பாடசாலைகளுக்கு மத்தியில் 500 பாடசாலைகளுக்கு அமெரிக்க டொலர் 20 மில்லியன் சீன உதவி செயற்திட்டத்தின் கீழ் கிடைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்தின் கீழ் 500 பாடசாலைகளுக்கு வெளிப்படுத்தல் ஸ்மார்ட் பலகைகளுடன் 450 வகுப்பறைகள் (Delivering Class room) பெறுதல் ஸ்மார்ட் பலகைகளுடன் 50 வகுப்பறைகள் (Receiving Class room) மற்றும் அந்த நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்காக கல்வி அமைச்சில் வலைத்தள செயற்பாடுகள் அலகு (Data Centre), ஸ்டுடியோ (Studio room), கருத்தரங்கு அறை (Conference room) என்பவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும்

இச்செயற்திட்டத்தின் கால அட்டவணைக்காக சீன அரசாங்கம் பிரதானமாக நடவடிக்கை எடுப்பதுடன் அதற்கு இணங்கியதாக செயற்திட்ட நடவடிக்கைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். சீன அரசாங்க தரப்பினர்களுக்கு செயற்திட்டத்திற்குரிய நடவடிக்கைகளுக்காகவும் உடன்படிக்கையை தயாரித்து அங்கீகரிப்பதற்குரிய நடவடிக்கைகளுக்காகவும் எடுத்துள்ள காலம் அமைச்சின் நோக்கெல்கைக்கு புறம்பானதாகும். 1000 ஸ்மார்ட் பலகைகள் கொள்வனவு செய்தலானது அமைப24/0978/630/009 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

சீன உதவியின் கீழ் 500 ஸ்மார்ட் பலகைகளைப் பெற்று அதற்கிணங்க முன்னோடி செயற்திட்டத்தினை அமுல்படுத்தாமைக்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளம் காணுதல் வேண்டும் சீன உதவியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அந்த சீன உதவி கிடைத்திருந்தும் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் செலவில் ரூபா 1,762.11 மில்லியன் பெறுமதியான 1,000 ஸ்மார்ட் பலகைகள் மற்றும் அது தொடர்பான ஏனைய உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய சேவைகள் அரசாங்க வணிக (நானாவித) கூட்டுதாபனத்தினூடாக மேற்கொள்வதற்குரிய பெறுகைகள் 2024 பெப்ரவரி 23, 2024 மே 14 மற்றும் 2024 யூன் 23 ஆகிய திகதிகளில் சமர்பிக்கப்பட்ட 03 ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு 2024 மார்ச் 12, 2024 மே 28 மற்றும் 2024 ஆகஸ்ட் 06 ஆகிய திகதிகளின் போது பெற்ற அமைச்சரவை அங்கீகாரத்திற்கு இணங்க கல்வி அமைச்சினால் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது

(ii) **பெறுகைக்குழு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் பெறுகை கால அட்டவணை**

2006 பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.8.2, 4.2.2, 4.2.3 மற்றும் 2.6 ஆகிய பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்திட்டத்தின் செயற்பாட்டு உத்தியோகத்தரான கல்வி அமைச்சின் மேலதிக செயலாளரை (தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கல்வி) தொழிநுட்ப மதிப்பீட்டு குழு அங்கத்தவராக நியமித்தல் திட்டமிட்ட பெறுகை கால அட்டவணைக்கு ஒப்பீடாக ஒரு மாதம் போன்ற மிகவும் குறுகிய காலத்திற்குள் எதுவித காரணமும் இன்றி பெறுகை அட்டவணையை குறுகியதாக்குதல், செயற்திட்டத்துக்கு பொறுப்பான மேலதிக செயலாளர் அலுவலகத்தினால் சமர்ப்பித்த தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பு மற்றும் சீன உற்பத்தியாளரின் பெயர் என்பவற்றை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மீளாய்வின்றி

சீன உதவி செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஸ்மார்ட் பலகைகளுக்கு சமமானதாக இந்த ஸ்மார்ட் பலகைகளையும் கொள்வனவு செய்ய வேண்டியுள்ளதனால் அது சம்பந்தமாக சிறந்த அறிவுடனான ஒரு நபராக அது சம்பந்தமாக செயற்பட்ட மேலதிக செயலாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிடல் கல்வி) தொழில் நுட்ப மதிப்பீட்டு குழூவிற்கு நியமிக்கப்பட்டடுள்ளார். மேலதிக செயலாளரினால் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கல்வி) தபால் மூலம் மற்றும் எழுத்து மூலம் பொருள் விபரக்குறிப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் சமர்பிக்கப்பட்ட பொருள் விபரக்குறிப்பு வரைபாக்கப்பட்ட கேள்வி ஆவணங்களுக்கு உள்ளடக்கப்பட்ட தொழில்நுட்ப

2006 பெறுகை வழிக்காட்டிக்கோவையின் 2.8.2 4.2.2 4.2.3 மற்றும் 2.6 ஆம் பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றி பெறுகை மேற்கொள்வதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்கு முரணாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கேள்வி ஆவணங்களுக்குள் உள்ளடக்குதல் மற்றும் முக்கியமான பெறுகை நடைமுறைகளை மீறி ஸ்மார்ட் பலகைகளை கொள்வனவு செய்தல் இடம் பெற்றிருந்தது

மதிப்பீட்டு குழுவிற்கு வழங்குதல் 2006 பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.3.2(இ) ஆம் பிரிவிற்கு இணங்க பெறுகை நிறுவனத்தின் பொறுப்பானதுடன் உரிய வரைபாக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை மீளாய்வு செய்து அங்கீகரித்தலானது பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.6.1 (அ) II ஆம் பிரிவிற்கு இணங்க தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பொறுப்பாகும். 2024.06.28 ஆம் திகதி நடைபெற்ற தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கூட்டத்தின் போது அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அவை உரிய பொருள் விபரக்குறிப்பினை இசிசெயற்திட்டத்திற்கு பொறுப்பான பிரிவிடமிருந்து எழுத்து மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி ஆவணங்களுக்கு உள்ளடக்கப்பட வேண்டும் என தெரியப்படுத்தியதற்கு இணங்க பொருள் விபரக்குறிப்பு எழுத்து மூலம் கையோப்பத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டு வரையாக்கப்பட்ட கேள்வி ஆவணங்களுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. உரிய பொருள் விபரக்குறிப்பு மற்றும் உள்நாட்டு முகவர் நிறுவனம் உரிய பிரிவில் எழுத்து மூலம் உறுதிப்படுத்தியதன் பின்னர் 2024.07.03 ஆம் திகதி ேள்வி ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உரிய பொருள் விபரக்குறிப்பு எது என்பது அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதனால் தொழில்நுட்ப மதீப்பீட்டு குழுவிற்கு பொருள் விபரக்குறிப்பினை மாற்றம் செய்ய முடியாது.

(iii) **பெறுகை நடைமுறை**

(a)	சீன உதவி செயற்றிட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட ஸ்மார்ட் பலகைகள் மற்றும் உபகரணங்களுக்கு தொழில்நுட்ப ரீதியாக சமமான வகையில் உபகரணங்களை வழங்கும் அடிப்படையில் கல்வி அமைச்சினால் நேரடி பெறுகை முறைமையினைப் பின்பற்றுதல் நியாயப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது பெறுகை வழிக்காட்டி கோவையின் 3.6 ஆம் பிரிவிற்கு கீழுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்கியிருக்கவில்லை. அவ்வாறே தொடர்புபட்ட 3.5 மற்றும் 3.6 ஆம் பிரிவுகளில் மிகவும் தெளிவாக பயன்படுத்தப்பட்டு வருகின்ற உபகரணங்களுக்கு சமமானதாகும் வகையில் மீண்டும் கட்டளையிடுதல் நியாயமான சந்தர்ப்பமாக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் இதனை பயன்படுத்துகின்ற உபகரணங்களுக்கு சமமான பெறுகை அல்ல எனவும் எதிர்காலத்தில் பெற்றுக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட உபகரணங்களுக்கு சமமான வகையான பெறுகையாக இருந்தது.	இப்பெறுகையின் போது நேரடி பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டதானது 2006 பெறுகை வழிக்காட்டி கோவையிலுள்ள 3.5 மற்றும் 3.6 (இ) III பிரிவுகளின் பிரகாரம் தேவையான உபகரணங்கள் உரிமையான்மையுடன் தனி ஒரே வழங்கல் மூலகங்களிலிருந்து மாத்திரம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் நேரடிப்பெறுகை முறைமை பின்பற்றுதல் பொருத்தமானது என குறிப்பிடப்பட்டுள்ளது. 2024.05.14 ஆம் திகதி சமர்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரேரனைகள் சமர்ப்பிக்கப்பட்டதானது சீன உதவி செயற்திட்டத்தின் கீழ் சீன அரசாங்கத்தின் மூலம் உரிய உபகரணங்களை வழங்குகின்ற உற்பத்தியாளர்களிடமிருந்து அரசாங்க வணிக (நானா வித) கூட்டுத்தாபனத்தின் மூலம் உரிய கொள்வனவு மேற்கொள்வதற்காகவாகும். அதற்கிணங்க அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் நோடி பெறுகை நடைமுறை பின்பற்றபட்டு இப்பெறுகை மேற்கொள்ளப்பட்டது.	பெறுகை தத்துவங்களுக்கு சமமானதாகும் வகையில் பெறுகைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தி பெறுகை வழிக்காட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதற்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(b)	இப்பெறுகையானது மிகவும் குறுகிய காலத்தில் மிகவும் அவசரமான முறையில் 2024 ஆகஸ்ட் 06 ஆம் திகதி ஒருங்கிணைந்த அமைச்சரவை தீர்மானம் வழங்குவதற்கு முன்னர் அதற்குரிய விஞ்ஞானத்தை அமைச்சரவை கலந்துரையாடி 3.1 இலிருந்து 3.6 வரையான பிரிவுகளை உத்தேசிக்கப்பட்டவாறு நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என 2024 யூலை 30 ஆம் திகதி ‘‘அவசரமானது - இரகசியமானது’’ என குறிப்பிட்ட கடிதம் ஏனைய தரப்பினர்களுக்காக பிரதியுடன்	இப்பெறுகையை வழங்குவதற்கு முன்னர் இந்த அனைத்து தீர்மானங்களுக்குரிய பிரேரனை சமர்ப்பிக்கப்பட்ட 2024.07.23 ஆம் திகதிய ED/PRO/24/71 இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அங்கீகாரம் 2024.07.29 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது வழங்கப்பட்டது எனவும் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்குமாறும் 2024.07.30 ஆம் திகதிய	பெறுகை தத்துவங்களுக்கு சமமானதாகும் வகையில் பெறுகைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தி பெறுகை வழிக்காட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் இதற்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	கல்வி அமைச்சு செயலாளருக்கு வழங்குவதற்கு அமைச்சரவையின் செயலாளர் பதவி வகிக்கின்ற மேலதிக செயலாளர் நடவடிக்கை எடுத்தல் கணக்காய்வின் போது நடைமுறை சாத்தியமற்ற நிலைமையாக அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க எந்த அவசர நிலைமை இல்லாதிருந்தும் அவசரநிலைமையினை போலியாக உருவாக்கி பெறுகை வழிக்காட்டி கோவையின் 3.8 ஆம் பிரிவின் கீழே குறிப்பிடப்பட்ட அவசர பெறுகை சந்தர்ப்பமாக கருதி இப்பெறுகை செயற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.	கடிதத்தின் மூலம் அமைச்சரவை அலுவலகத்தினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 45) அவ்வாறே உரிய பெறுகையை வழங்குவதற்கு முன்னர் தொடக்க அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழே மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்காகவும் 2024.07.29 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.	
(c)	வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தினால் தொடக்க சந்தர்ப்பத்தின் போது ரூபா 1,658.69 மில்லியன் விலை மதிப்பீட்டினை சமர்ப்பித்ததுடன் விலையை பேறம் பேசியதன் பின்னர் ரூபா 1493.31 மில்லியனாக மதிப்பீட்டு திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க பேரம் பேசியதன் பின்னர் ரூபா 165.38 மில்லியனாக மதிப்பீட்டுப் பெறுமதி குறைவடைந்திருந்ததுடன் அது சதவீதமாக 10 சதவீதமாக இருந்தது. அதற்கிணங்க ஒரு அரசாங்க நிறுவனமாக வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (நானவித) கூட்டுத்தாபனம் தொடக்க சந்தர்ப்பத்திலேயே நியாயமான விலையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இலங்கை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனம் (STC) ஒரு அரசாங்க நிறுவனமாக இலாபம் உழைக்கும் நோக்கத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ள ஒரு அரசாங்க தொழில் முயற்சியானதுடன் அவர்களினால் இலாபத்துடன் விலை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுக்கு இணங்க SCAPC இனால் விலைகளை குறைப்பதற்கு கலந்துரையாடியதன் பின்னர் அவர்களினால் உரிய உற்பத்தி நிறுவனத்துடன் கலந்துரையாடி ரூபா 165.38 மில்லியனால் விலை குறைத்தல் மேற்கொள்ளப்பட்டது.	பெறுகை வழிக்காட்டிக் கோவைக்கு முரணாக நேரடி பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும்.
(d)	கேள்வி ஆவணங்களின் 14.1 மற்றும் 14.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 03 ஆண்டுகள் நிலைய விரிவான உத்தரவாதம் மற்றும் தேவையான சேவை செய்தல்களும் பராமரிப்பு நடவடிக்கைகளும் உற்பத்தியாளர் மற்றும் நாடு முழவதிலுள்ள உற்பத்தியாளரின் அதிகாரம் பெற்ற முகவர்களினால் வழங்கப்பட வேண்டும். எனவும்	வழங்குனரினால் வழங்கப்பட்டது சாதாரண வியாபார சட்டத்தின் பிரகாரம் ஒரு ஆண்டு உத்தரவாத காலம் ஆனதுடன் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்கான உத்தரவாதம் தேவை என்பதனால் மிகுதி 02 ஆண்டுகளுக்கான US $ 293,732 அல்லது ரூபா 91 மில்லியன் மேலதிக	அமைச்சரவை விஞ்ஞாபனமானது சரியான தகவல்களுடன் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உத்தரவாதத்திற்கு பின்னையு உதிரிபாகங்களை வழங்குதல். (Post – warranty – spare – supply) 05 ஆண்டுகள் காலத்திற்கு சான்றுபடுத்தப்பட வேண்டும். எனவும் குறிப்பிடப்பட்டிருந்தும் உத்தரவாத காலத்திற்கு உள்ளே இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக US $ 293,732 அல்லது ரூபா 91 மில்லியன் உயர்வான விலை மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் கேள்வி ஆவணங்களில் குறிப்பிட்ட 03 ஆண்டுகள் உத்தரவாத காலத்திற்கு வழங்குனர் இணங்கி கொள்ளாததனால் வழங்குனர் வழங்குகின்ற ஒரு ஆண்டு உத்தரவாத காலத்திற்கு மேலதிகமாக கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டவாறு 03 ஆண்டுகள் உத்தரவாத காலத்தை பெற்றுக்கொள்வதற்கு வழங்குனருக்கு ரூபா 91 மில்லியன் மேலதிக கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் என்பதான நிதித்தகவலை அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் தனித்தனியாக சமர்ப்பிக்காது பெறுகையின் முழுப்பெறுமதியை மாத்திரம் சமர்பித்து அமைச்சரவையை தவறாக வழிநடத்த சிறிய தகவலை வழங்குவதற்கு மேலதிக செயலாளர் (தகவல் தொழில்நுட்பம்) உள்ளடங்களாக உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

கொடுப்பனவாக குறிப்பிட்ட விலை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. விலையை குறைப்பதற்கு வழங்குனரினால் இணங்கிகொள்ளாததன் அடிப்படையில் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் பெறுகை வழங்கப்பட்டுள்ளது.

(iv) **உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்.**

(a)	2024 திசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் 2024 திசெம்பர் பாடசாலை விடுமுறை காலத்தில் ஒரு பொறியியலாளர் மற்றும் பயிற்சிபெற்ற ஒரு குழுவின் மூலம் 20 பாடசாலைகளில் ஸ்மார்ட் பலகைகளை பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஸ்மார்ட் பலகைகளை ஸ்தாபிப்பது தொடர்பாக நாட்டிற்கு அழைத்துவரப்பட்ட பொறியியலாளர் 06 வார காலத்திற்கு வருகை தந்திருந்தும் நாட்டிற்கு வருகை தந்த பொறியியலாளரின் மூலம் உரிய செயற்பாடுகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் 1000 ஸ்மார்ட் பலகைகள் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் பத்தலகெதர களஞ்சியத்தில் பாடசாலைகளில் ஸ்தாபிக்கப்படாது காணப்பட்டது. 2024 ஒக்தோபர் மாதத்தில் பெற்ற ஸ்மார்ட் பலகைகள் 2024 நவம்பர் மாத பொதுத் தேர்தலுக்கு பின்னரும் 2025 மே 31 ஆம் திகதி வரை 06 மாதங்கள் கடந்திருந்தும் ஸ்தாபிக்கப்படாது காணப்பட்டதன் காரணமாக தேர்தல் நிலைமையின் அடிப்படையில் பாடசாலைகளில் ஸ்மார்ட் பலகைகள் ஸ்தாபிக்கமுடியாதிருந்தது என்ற பதிலை கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ள முடியாது.	தேர்தல் காலப்பகுதியில் இப் பொருட்களை பகிர்ந்தளிக்க வேண்டாம் என தேர்தல் ஆணைக்குழுவினால் தெரியப்படுத்தியிருந்ததனால் ஸ்மார்ட் பலகைகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. பின்னர் உருவாகிய நிலைமையின் கீழ் இது வரை உரிய உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்படவில்லை இப்பெறுகைக்குரிய கொள்வனவுகள் பகிர்ந்தளித்தல், ஸ்தாபித்தல் பயிற்சி, பராமரிப்பு ஆகிய அனைத்து செயற்பாடுகளையும் வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. வரையறுத்த அரசாங்க வணிக (நானாவிதி) கூட்டுத்தாபனத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முறைமை ஒருங்கிணைப்பாளர் (System Integrator) மூலம் அந்த முறைமையை ஸ்தாபிப்பதற்குரிய பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது.	ஏதிர்பார்த்த இலக்குகளை நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதிக்குள் அடைந்து கொள்வதன் மூலம் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(v) **பராமரிப்பு நடவடிக்கைகள்**

(a)	ஸ்மார்ட் பலகைகளை கொள்வனவு செய்யும் போது உயர்வான வாழ்க்கை சுழற்சி கிரயம் என்ற வரையரையின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை இந்த உபகரணங்களின் பராமரிப்புச் செலவுக்காக ரூபா 254 மில்லியன் பணம் வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தினால் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க அச்செயற்திட்டத்தின் பராமரிப்பு சேவை செய்தல் வசதிகளுக்காக	அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் அந்த அனைத்து செயற்பாடுகளுக்குமாக விலை மனுக்கள் கோரப் பட்டுள்ளதுடன் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் உங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு பராமரிப்பு செலவுகளை உள்ளடக்கி ரூபா 1,493.31 மில்லியன் (வெட் இல்லாது) தொகைக்கு இப் பெறுகை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டது. உரிய கட்டளை கடிதத்தினை வழங்குவதற்கு	பெறுகை நடவடிக்கைகளை திட்டமிடும் போது பராமரிப்பு மற்றும் சேவை செய்தல் வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்துவதன் மூலம் செயற்திட்டத்திலிருந்து எதிபார்த்த குறிக்கோள்களை தடைப்படாது தொடர்ச்சியாக மேற்கொள்ளக்கூடிய வகையில் தேவையான நடவடிக்கை எடுத்தல்

	மிகவும் அதிக கிரயத்தினை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டது என அவதானிக்கப்பட்டதுடன் 03 ஆண்டுகள் உத்தரவாத காலத்தின் பின்னர் மேற்கூறிய பராமரிப்பு செலவுகளை மேற்கொள்வது சம்பந்தமாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுழ்குபடுத்துதல் ஆணைக்குழு மேலும் பங்களிப்பினை வழங்குமா என்பது தொடர்பாக நிரந்தர இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை.	முன்னர் இச்செலவு முழுவதையும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவினால் செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் இதன் பின்னர் கட்டளை வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நிரந்தர இணக்கப்பாடு கிடைத்ததன் பின்னர் மாத்திரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.	வேண்டும்.
(b)	இறக்குமதி செய்யப்பட்ட 1000 ஸ்மார்ட் பலகைகள் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு தேவையான 1000 UPS களை வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தின் மூலம் உள்நாட்டில் கொள்வனவு செய்வதற்கு நிலையான அமைச்சரவை பெறுகை குழுவினால் உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 18 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதிக்கு 1000 UPS களை கொள்வனவு செய்வதற்காக வரையறுத்த இலங்கை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திற்கு கேள்வி வழங்கப்பட்டிருந்ததுடன் அது பெறுகை வழிக்காட்டி கோவையின் தொடர்பு 3.5 மற்றும் 3.6 இன் கீழ் உள்ளடக்கப்பட்ட நேரடி பெறுகை தத்துவங்களுக்கு இணங்கியிருக்கவில்லை.	இச்செயற்திட்டக்குறிய பொருள் விபரக்குறிப்புகளில் UPS உள்ளடங்கலாக விலை மனுக்கள் கோரப்பட்ட போதிலும் வெளிநாட்டு முகவர் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட CIF விலையில் UPS விலைகள் உள்ளடக்கப்பட்டிருந்ததனால் அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ரூபா 50 மில்லியனை விட குறைவாக கொள்வனவு செய்வதற்கு நோடி பெறுகை முறைமையினைப் பின்பற்றி இலங்கை அரசாங்க வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்திடமிருந்து (STC) கொள்வனவு செய்வதற்கு தனியான அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 46) மேலும் 2024.05.14 ஆம் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரனை இலக்கம் 3.3 இன் கீழும் அங்கீகாரம் கிடைத்துள்ளது.	பெறுகை வழிக்காட்டிக் கோவையின் தொடர்பு 3.5 மற்றும் 3.6 இன் கீழ் உள்ளடக்கப்பட்ட நேரடி பெறுகை தத்துவங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(vi)	**பாடசாலையில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள்**		
(a)	அமைச்சினால் செயற்திட்டம் சம்பந்தமாக பாடசாலைகளுக்கு தெரியப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பம் வரை ஸ்மார்ட் பலகைகள் இறக்குமதி செய்து முடிவடைந்திருந்தது. அக்கடிதத்தின் பிரகாரம் ஸ்மார்ட் பலககைளை ஸ்தாபிப்பதற்கு பாடசாலையில் காணப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மனித வளங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் வயர்களுடான Fiber வலைத்தள வசதிகள் காணப்பட்ட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தெரிவுசெய்யப்பட்ட 1000 பாடசாலைகளுக்கு மத்தியில் 121 பாடசாலைகளில் Fiber வலைத்தள வசதிகள் இருக்கவில்லை.	உபகரணங்கள் உள்நாட்டிற்கு கிடைப்பதற்கு முன்னர் பாடசாலைகளுக்கு தெரியபடுத்துதல், தேவையான ஆலோசனைகள், வழிகாட்டிகள் என்பன வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க தேர்தல்கள் காலத்தின் போது பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் பலகைகளை வழங்குதலினை தெரியபடுத்துதல் மேற்கொள்ளப்படவில்லை இச்செயற்திட்டத்தின் பிரதான தரப்பினர் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு என்பதனால் இந்த 1000 பாடசாலைகளை முன்னுரிமையாக கருதி தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவுடன் ஒருங்கிணைந்து அமுல்படுத்தப்படுகின்ற பயிபர் Fiber செயற்திட்டத்திற்கு பயிபர் தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்ற பாடசாலைகளின் பதிவேடு தொடக்க சந்தர்பத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. வலைத்தள வசதிகள் பிரச்சினையான நிலைமை காணப்படுகின்ற 26 பாடசாலைகளுக்கு இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக் குழூ இலங்கை டெலிகொம் கம்பனியுடன் தற்பொழுது நடவடிக்கை எடுத்துவருவதுடன் வலைத்தள வசதிகளை வழங்குவதற்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு முன்னர் அமுல்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றுவதற்கு உள்ள இயலுமை தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(vii)	இலக்கிடப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படல்		
	சாதாரண கல்வியை டிஜிட்டல் பரிமாற்றத்திற்கு உட்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 1,493.31 மில்லியன் தொகைக்கு	இச்செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை தயாரித்து மத்தியப்படுத்தப்பட்ட	நீண்டகால செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தலும்

1000 ஸ்மார்ட் பலகைகளை கொள்வனவு செய்யும் போது அந்த ஸ்மார்ட் பலகைகளை நோக்கங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் உள்ளடங்களாக நீண்ட கால செயற்பாட்டுத் திட்டத்தினை தயாரிக்காமையின் காரணமாக கொள்வனவு செய்வதற்கு இணைவாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளடங்களாக செயற்பாடடு நடவடிக்கைகள் பூரணப்படுத்தியிருக்காமையின் மூலம் ஒரு நாடாக அது சம்பந்தமாக சந்தர்ப்பச் செலவு மேற்கொள்ளப்பட்டதுடன் 2024 ஒக்தோபர் 07 ஆம் திகதி களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த ஸ்மார்ட் பலகைகள் 2025 மே 31 ஆம் திகதி வரையும் உபகரணங்கள் கிடைத்து 08 மாதங்கள் பயன்படுத்தப்படாது காணப்பட்டது. 2025 மே 31 ஆம் திகதி வரையும் உபகரணங்கள் கிடைத்து 08 மாதங்கள் காலம் பயன்படுத்தாது காணப்பட்டதன் மூலம் 01 ஆண்டு உத்தரவாதத்தில் 08 மாதங்கள் களஞ்சிலேயே கடந்திருந்தது. மேலே குறிப்பிட்ட அனைத்து ஏற்பாடுகளும் மீறப்பட்டு சீன உதவியின் கீழ் 500 ஸ்மார்ட் பலகைகளை பெற்றுக்கொள்ளபடாமையால் மேற்கொள்ளப்பட்ட ஸ்மார்ட் பலகைகள் கொள்வனவு செய்யும் அவசர பெறுகை சம்பந்தமாக கல்வி அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மேலதிக செயலாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கல்வி) தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர் ஆகியோர் பொறுப்புக்கு உட்படுவதுடன் இச்செயற்திட்டத்தினை நிறைவேற்ற முடியாத நிலைமையில் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நிதிசார் நட்டத்தினை மேற்கூரிய உத்தியோகத்தர்கள் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்

முறைமையினை செயற்படும் நிலைமைக்கு கொண்டு வந்து உரிய மனித வளங்களை பயிற்றுவித்தல் தொடர்பாக ஒரு முறையான திட்டத்தினை தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் கல்விப் பிரிவு அமுல்படுத்தியுள்ளது. இச்செயற்திட்டம் தொடர்பான சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது உரிய அறிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளன. சனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலினை நடாத்தியதன் காரணமாக உரிய ஆட்சேர்ப்புக்கள் செய்ய வேண்டாம் என தேர்தல் ஆணைக்குழுவினால் தெரிவிக்கப்பட்டது. பின்னர் இது சம்பந்தமாக பரீட்சிப்பதற்காக ஒரு விசேட குழு என்னால் நியமிக்கப்பட்டதுடன் உரிய குழுவின் சிபாரிசின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பகிர்ந்தளித்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் இன்னும் இது தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான விடயங்கள் தேடிப் பார்க்கப்படுகின்றது.

உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கி பொருட்களை நிர்ணயிக்கப்பட்டவாறு உடனடியாக பாடசாலைகளில் பொருந்தலும் துரிதமாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும்

(ஈ) NEMIS தரவுமுறைமையை அமுல்படுத்துவதற்காக 328 லெப்டொப் கனணிகளை கொள்வனவு செய்தல்.

NEMIS தரவு முறைமையை அமுல்படுத்துவதற்காக தரவுமுகாமைத்துவ கிளைக்கு தேசிய போட்டி கேள்வி முறைமையின் கீழ் ரூபா 78.4 மில்லியன் பெறுமதியான 328 லெப்டொப் கனணிகள் ஒப்பந்த கப்பனியிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2024 மார்ச் 08 ஆம் திகதியில் உள்ளவாறு பொருட்களை வழங்குதல் இடம்பெற்றிருக்காததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் லெப்டொப் கனணியை வழங்குதல், பகிர்ந்தளித்தல், ஸ்தாபித்தல் ஆகிய அனைத்து செயற்பாடுகளும் வழங்கப்பட்டிருந்தும் பதிலில் குறிப்பிடப்பட்டவாறு பெறுகை செயற்பாடானது கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடலானது கேள்வி ஆவணங்களுக்கு மற்றும் அவை சார்ந்த ஆவணங்களின பிரகாரம் பிழையானதுடன் அமைச்சின் மத்திய களஞ்சியத்திற்கு 2024 மார்ச்13 14 15 ஆகிய திகதிகளில் பொருட்களை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த வழங்கப்பட்டுள்ள லெப்டொப் கனனியானது கேள்வி மதிப்பீட்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரமான பொருள் விபரக் குறப்புக்களுக்கு இணங்கியுள்ளது என ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தும் அமைச்சினால் பொருட்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பொருட்களை வழங்காமை மற்றும் பொருட்களை வழங்குவதற்கு முன்னர் வழங்குனரின் களஞ்சியத்தில் தரப்பரிசோதனை மேற்கொள்ளல் ஆகிய

கேள்வி ஆவணங்களின் பிரகாரம் இப்பெறுகை மேற்கொள்ளப்பட்டாதானது பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மாத்திரம் ஆனதுடன் இதனுள் ஸ்தாபித்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் உள்ளடக்கப்பட்வில்லை. கேள்வி ஆவணங்களின் பிரகாரம் உரிய பொருட்கள் ஒப்படைக்கப்பட வேண்டிய இடம் அமைச்சின் மத்திய களஞ்சியமாக குறிப்பிடப்பட்டுள்ளது. கேள்வி ஆவணங்களின் பிரகாரம் உரிய பொருட்களை மத்திய களஞ்சியத்திற்கு வழங்குவதற்கு முன்னர் வழங்குனரின் களஞ்சியத்தில் பரீட்சிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டிய போதிலும் வழங்குனரினால் அச்சந்தர்ப்பம் வழங்கப்படாது நேரடியாக கட்டளைகள் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட பொருட்களை ஒப்படைக்கும் இடமாக குறிப்பிடப்பட்டுள்ள களஞ்சியத்திற்கு பொருட்களை பரீட்சிக்கும் நிபந்தனைக்கு உட்பட்டு உரிய கனணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனினும் உரிய தொழில்நுட்ப ரீதியான உறுதிப்படுத்தல் கிடைக்கும் வரை இக்கணனிகள் களஞ்சிய ஏடுகளில் உள்ளடக்கப்படவில்லை. இது சம்பந்கமாக உரிய நிறுவனத்தினால் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதனால் வழக்கின் தீர்ப்பு கிடைக்கும் வரை சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு மேலதிக செயலாளருக்கு (பெறுகைகள்) அதிகாரம் இல்லை. எனினும் வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்னர் உரிய பொருட்களை எடுத்துச் செல்லுமாறு உரிய நிறுவனத்திற்கு தெரியபடுத்தியதுடன் கேள்வி

உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் மற்றும் பொருட்கள் பொருள் விபரக்குறிப்புகளுக்கு இணங்கியுள்ளது என ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தும் பொருட்களை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறைப்படியாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

உடன்படிக்கை நிபந்தனைகளை மீறுதல் சம்பந்தமாக ஒப்பந்த கம்பனிக்கு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு மேலதிக செயளாலர் (பெறுகைகள்) உள்ளடங்கலாக உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் உரிய கம்பனி பணம் செலுத்தாமை சம்பந்தமாக வழக்கு தாக்குதல் செய்யாதிருந்தும் 2025 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையும் அந்த வழக்கு நடவடிக்கை முடிவடைந்திருக்காததுடன் ரூபா 78.4 மில்லியன் பெறுமதியான 328 லெப்டொப் கனணிகள் 02 ஆண்டுகள் காலமாக களஞ்சியத்தில் தொழில்நுட்ப ரீதியான தரத்திற்கு அப்பாற்பட்டு காணப்பட்டன..

ஆவணங்களின் பிரகாரம் செயலாற்றல் பிணையை பொறுப்பேற்று பொதுவைப்பு கணக்கில் வைத்திருப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வழக்கு நடவடிக்கைகள் காணப்படுவதனால் அந்த வழக்கின் தீர்ப்பு கிடைக்கும் வரை மேலும் நடவடிக்கை எடுப்பதற்கு சட்டரீதியான இயலுமை அமைச்சிற்கு இல்லை.

(உ) பெறுகை வழிக்காட்டி கோவைகளுடனான இணக்கமின்மைகள்

2006 பொருட்கள் மற்றும் வேலைகள் தொடர்பான பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.3.1 மற்றும் 4.3.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பெறுகைகள் தொடர்பான அனைத்து தொடர்புபட்ட செலவுகளும் உள்ளடங்கலாக பெறுகையின் ஆயத்தப்படுத்தல் நடவடிக்கைகளின் செலவுகள், ஒப்பந்தம் வழங்கியதன் பின்னரான நடவடிக்கைகளின் செலவுகள் நிச்சயமற்ற நிதி ஏற்பாடுகள் உள்ளடங்கலாக உரிய வெட்வரி என்பவற்றை தனியாகக் காட்டி மிகவும் சரியானதாக முழுக்கிரய மதிப்பீட்டினைத் தயாரித்து பெறுகை வழிக்காட்டிக் கோவை கையேட்டில் குறிப்பிட்ட உரிய அதிகாரத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் பெறுகை செயற்பாடுகளுக்காக சரியான முறைமையில் முழுக்கிரய மதிப்பீடு அந்த அந்த பிரிவினால் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் போது அவ்வாறான பொருட்கள் வேலைகள் சேவைகள்

2024 ஆம் ஆண்டிற்கான பெறுகை திட்டத்திற்கு இணங்க பெறுகைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைகளின் எண்ணிக்கை 36 ஆகும். நிர்மாணங்களுக்காக நீங்கள் சுட்டிக்காட்டியுள்ளவாறு அனைத்து செலவுகளையும் உள்ளடக்கிய மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பெறுகை பிரிவினால் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதானது பொருட்களும் சேவைகளும், ஆலோசனை சேவை என்பவற்றின் பெறுகைகள் என்பதனால் அதற்காகவும் அலகுக் கிரயத்தினை உள்ளடக்கி (வரியும் உள்ளடங்கலாக) மொத்த மதிப்பீட்டினைக் தயாரித்து பெறுகை திட்டத்தில் உள்ளடக்கி அங்கீகரித்ததன் பின்னர் உரிய கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறே உரிய பெறுகைகள் வழங்கப்பட்டிருந்ததானது நேரடியாக வழக்குனர்களினால்

பெறுகை வழிக்காட்டி கோவையில் குறிப்பிட்டவாறு சரியாக முழுக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது உரிய அதிகாரியினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். பெறுகை நடைமுறையின் வெளிப்படைத் தன்மையை உறுதிபடுத்தும் வகையில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தியுள்ள e – GP முறைமையினூடாக பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கு கவனம் செலுத்த வேண்டியதுடன் தொடர்புபட்ட சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	தொடர்பான 136 பெறுகை செயற்பாடுகளை அடையாளம் காணக்கூடியதாயிருந்தது. அதன் காரணமாக பெறுகை நடைமுறையானது அதிகார எல்லையை மீறுதல் போன்ற பெறுகையின் முக்கியமான படிமுறைகளில் தடைகள் ஏற்பட்டிருந்தது.	உரிய இடத்திற்கு பகிர்ந்தளிப்பதற்காக என்பதனால் அனைத்து கிரய அலகுகளும் கிரயத்திற்கு உள்ளடக்கப்பட்டு மதிப்பீட்டுக் கிரயம் தயாரிக்கப்பட்டுள்ளது.	
(ஊ)	2023 ஏப்ரல் 19 ஆம் திகதிய PED/ சுற்றறிக்கை 08/2019 (1) இலக்க சுற்றிகையின் பிரகாரம் ரூபா 200 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுகை செயற்பாடுகள் கண்டிப்பாக e – GP முறைமையினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 200 மில்லியனுக்கு மேற்ப்பட்ட 05 பெறுகைச் செயற்பாடுகளுக்காக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எனினும் எதிர்காலத்தில் உங்களால் சுட்டிக்காட்டியுள்ளவாறு பத்திரிகை அறிவித்தல்களை வெளியிடுவதற்கு மேலதிகமாக இலத்திரனியல் முறைமையிலும் வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை தயாரிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	பெறுகை நடைமுறயின் வெளிப்படைத் தன்மையை உறதிப்படுத்தும் வகையில் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தியுள்ள e-GP முறைமையினூடாக பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்துவதற்கு கவனம் செலுத்த வேண்டியதுடன் தொடர்புபட்ட சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	**வெனிவெல்கொல மாணவர் தின நிலையம்**		
	2024 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்கு இணங்க கேட்பு குறைபாடுள்ள பிள்ளைகளின் கேட்பு மட்டத்தினை அளவீடு செய்வதற்காக வெனிவெல் கொல மாணவர் தின நிலையத்திற்கு கொள்வனவு செய்யப்பட்ட கேட்பு மீட்டர் (Audio Meter) பொருள் பதிவேட்டிற்கு கொண்டுவரப்படாதிருந்தும் 2024 யூலை 26 ஆம் திகதி ரூபா 1.75 மில்லியன் செலுத்துவதற்கு பெறுகைப்பிரிவின் கணக்காளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அது 2025 ஏப்ரல் 21 ஆந் திகதி வரை மாணவர் தின நிலையத்திற்கு ஒப்படைக்கப்படாது 09 மாதங்களுக்க மேற்பட்ட காலம் விசேட கல்விப் பிரிவில் வைத்திருக்கப்பட்டு 2025 ஏப்ரல் 22 ஆந் திகதி வெனிவெலகொல மாணவர் தின நிலையத்தின் பொருள் இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் இந்த உபகரணத்தை	கேட்பு மீட்டர் (Audio Meter) மாணவர் தின நிறுவனத்தின் பொருள் பதிவேட்டு புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஆண்டிற்கான திருத்தம் செய்தல் செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டின் மூலம் மாணவர் தின நிறுவனத்தின் கேட்டல் பரீட்சிப்பு அறையில் ஒலியை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான பயிற்சியை வழங்குவதற்கு உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டுள்ளது	தேவைப்பாடு மற்றும் முன்னுரிமைக்கு இணங்க பெறுகை நடைமுறையினைப் பின்பற்றி உச்சஅளவு பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்ள கூடிய வகையில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் மற்றும் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உரிய பிரிவிற்கு கிடைத்துள்ளது எனவும் பொருள் இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்தி பெறுக் கொள்ளுதல் வேண்டும்.

	பயன்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் பொருத்தும் எதிர்கால நடவடிக்கை சம்பந்தமாக உரிய வழங்குனருடன் எழுத்து மூல உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணத்தை பயன்படுத்துவது தொடர்பாக பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஏ)	அவுஸ்திரேலியாவின் Flinders பல்கலைக்கழகத்தில் கல்வி ஆராய்ச்சி மதிப்பாய்வு மற்றும் மதிப்பீட்டிற்கான கல்வி பட்டப்படிப்பினை பயில்வதற்கு உலக வங்கி TSEP செயற்திட்டத்தின் ரூபா 08 மில்லியன் நிதி உதவியின் கீழ் பரீட்சைகள் திணைக்களத்தில் சேவையாற்றிய ஒரு உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டிருந்தும் அமைச்சு பெறுகைக் குழு தீர்மாணத்தின் பிரகாரம் இக்கற்கை நெறியை பயின்றதன் பின்னர் பரீட்சைகள் திணைக்களத்திற்கு தமது சேவை வழங்கப்படும் என்பதற்கு சேவை உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த உத்தியோகத்தர் பரீட்சைகள் திணைக்களத்தில் குறுகிய காலம் சேவையாற்றிய பின்னர் அதிபர் பதவிக்காக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததன் காரணமாக அரசாங்கம் அப்பணத்தை செலவு செய்த குறிக்கோளில் இருந்து எதிர்பார்த்த விளைவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு பரீட்சைகள் திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.	பதில் சமர்பிக்கப்படவில்லை.	பெறுகைக் குழு தீர்மானங்களுக்கு மற்றும் அது தொடர்பான சட்ட விதிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.10 ஒப்பந்தங்களின் நிர்மாண வேலைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	சிபாரிசுகள்
(அ) இசுருபாய கட்டிடத்தொகுதியினை விரிவுபடுத்தும் செயற்திட்டம்		
இசுருபாய கட்டிடத்தொகுதியின் 6 மற்றும் 7 ஆம் மாடிகளை விரிவுபடுத்தும் செயற்திட்டத்திற்காக 2013 ஆகஸ்ட் 22 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நிர்மாணங்கள் சார்ந்த வேலைகள் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2014 ஏப்ரல் 20 ஆம் திகதி வேலைகளை ஆரம்பித்து காலநீடிப்பு செய்தலுடன் 2018 செப்தெம்பர் 15 ஆம் திகதி வேலைகளை முடிவு செய்து 2019 பெப்ரவரி 26 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்தது. நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் முன் அங்கீகாரத்தினை பெற்று முரண்பாடுகளுக்காக ரூபா 65.49 மில்லியன் மற்றும் நிகழ்கால பெறுமதிக்காக (Provisional sum) ரூபா 6.15 மில்லியனாக ரூபா 71.63 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இணங்க உடன்படிக்கைக்கு விலை முரணுக்காக உரிய Input Percentages உள்ளடக்கப்பட்டிருந்தும் ரூபா 6.73 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன் 2023 நவம்பர் 29 ஆம் திகதி 55 கொடுப்பனவு சான்றிதழ்களின் பிரகாரம் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 6.76 மில்லியன் மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.	இசுருபாய கட்டிடத்தினை விரிவுபடுத்தும் செயற்திட்டதின் I ஆவது கட்டம் 2014 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன் 2019 ஆம் ஆண்டிலஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனினும் அந்த நிறுவனத்திற்கு இறுதி விலைப்பட்டியயினை தீர்த்து வைக்கும் நடவடிக்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் நிரந்தர விலைக்குழுவிற்கு வழங்கப்பட வேண்டிய ஆவணங்களை வழங்குவதற்கு ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக நிரந்தர விலைக்குழுவின் விலைகளை அமைச்சிற்கு வழங்குவதிலுள்ள தாமதத்தின் அடிப்படையில் விலைப்பட்டியல்களை தீர்த்துவைப்பதற்கு முடியாதுள்ளது. எவ்வாறாயினும் அக்குழுவின் மூலம் உரிய அறிக்கையினை தயாரிப்பதற்கு செலுத்த வேண்டிய பணம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அக்கொடுப்பனவுவினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்கொடுப்பனவினை மேற்கொண்டதன் பின்னர் உரிய விலை அறிக்கையினை வழங்கியதன் பின்னர் இறுதி விலைப்பட்டியல்களை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	ஒப்பந்த நிருவாகத்தில் மற்றும் முகாமைத்துவத்தில் காணப்பட்ட பலவீனத்தை தவிர்ப்புச் செய்து செலவு செய்யப்பட்ட தொகைக்கு நிகராண வகையில் முழுமையாக பயன்படுத்தக்கூடிய வகையில் நிர்மாண வேலைகளை துரிதமாக முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ) இசுருபாய கட்டிட தொகுதியை விரிவுபடுத்தும் செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்திற்குரிய முரணின் ‘‘விலை விகிதம்’’ இற்காக நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் முன் அங்கீகாரம்	இசுருபாய கட்டிடத்தினை விரிவுபடுத்தும் செயற்திட்டத்தின் கட்டம் II ஆகிய அதன் கட்டம் I இல் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள	ஒப்பந்த முரண்களின் விலை விகிதத்திற்காக முன் அங்கீகாரத்தை பெற்று கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

பெற்றுக்கொள்ளப்படாதிருந்தும் 54 கொடுப்பனவு விலைப்பட்டியல்களுக்கு (IPC) உள்ளேயுள்ள முரண்கள் (Variations) தொடர்பாக ரூபா 65.49 மில்லியன் மற்றும் நிகழ்கால பெறுமதியாக (P.S) ரூபா 6.15 மில்லியனிற்கான சிபாரிசு கல்வி அமைச்சின் பொறியியலாளரினாலும் சான்றுபடுத்தலானது பணிப்பாளரினாலும் (பொறியியலாளர்) அங்கீகரித்தில் மேலதிக செயலாளரினாலும் (பொறியியளாலர்) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் அதிகாரம் இல்லாதிருந்தும் அவ்வாறு செய்திருந்தனர். அவ்வாறே கணக்காய்வு திகதியான 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையும் உரிய விலை விகிதத்திற்காக நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

இரண்டு மாடிகளின் உள்ளக ரீதியாக செய்யப்பட வேண்டிய மேம்படுத்தலாகும். அந்த ஒப்பந்தம் 2018 ஆம் ஆண்டில் வேலையை ஆரம்பித்ததுடன் ஒப்பந்த நடவடிக்கையை முடிவுசெய்வதற்காக 2020 திசெம்பர் 31ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் அக்காலத்தில் காணப்பட்ட கொவிட் 19 நிலைமை மற்றும் கல்வி அமைச்சின் பொறியியல் பிரிவு முழுமையாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்ப கல்வி பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச்சேவை இராஜாங்க அமைச்சிற்கு மாற்றப்பட்டதுடன் அவசரமாக இந்த நடவடிக்கை இடைநடுவில் நிறுத்தப்பட்டது. மேலும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார பிரச்சினையை முன்னிட்டு மூலப்பொருட்களின் விலைகள் வழமைக்கு மாற்றமாக அதிகரித்தலும், ஒப்பந்தத்தின் விலை முரண்களுக்காக கொடுப்பனவு செய்யும் நடைமுறை இல்லா மையும், ஒப்பந்தத்திற்காக ஒரு பொறியியலாளர் இல்லாமையும் ஆகிய விடயங்களின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் மிகுதி வேலைகளை முறைப்படியாக எதிர்வரும் காலங்களில் செய்ய முடியாதிருந்தது. பின்னர் பொறியியல் பிரிவு மீண்டும் இந்த அமைச்சில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த விலைகள் அதிகரித்துச் செல்வதுடன் ஒப்பந்தக்காரரினால் இன்னும் பழைய விலைகளின் கீழ் மிகுதி வேலைகளை செய்வதற்கு இணங்கியிருக்கவில்லை. தற்பொழுது புதிய விலைகளின் கீழ் மிகுதி வேலைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(இ)	2020 திசெம்பர் 28 ஆம் திகதியில் உள்ளவாறு உரிய ஒப்பந்தக்காரரினால் சமர்ப்பிக்கப்பட்ட விலை பட்டியல்களின் பிரகாரம் வேலைத்தளத்தில் காணப்பட்ட மூலப்பொருட்களில் 80 சதவீதமாக ரூபா 21 மில்லியன் கல்வி அமைச்சின் சிவில் பொறியியலாளரின் சிபாரிசின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் இந்த மூலப்பொருட்கள் வேலைத்தளத்தில் உண்மையாகவே காணப்படுகின்றதா என்பதற்கும் அவற்றின் தரம் சம்பந்தமாகவும் மேற்பார்வை பொறியியலாளரின் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் கீழ் ரூபா 08 மில்லியனான Sound system மற்றும் ரூபா 17.55 மில்லியனான 859 Auditorium chairs என்பவற்றிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அந்த உபகரணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் உரிய நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டதால் அந்த உபகரணங்களின் உத்தரவாத காலம் முடிவடைந்திருந்தமை மற்றும் உபகரணங்கள் சேதமடைந்திருத்தலைப் போல தொழில்நுட்ப ரீதியாக வழக்கொழிந்திருந்தது. இதற்காக சிபாரிசு செய்து அங்கீகாரம் வழங்கி கொடுப்பனவு செய்த பொறியியல் மற்றும் கணக்கு பிரிவுகளின் உத்தியோகத்தர்கள் பொறுப்பு கூற வேண்டியவர்களாக காணப்பட்டனர்.	முரண்களுக்குரிய விலைகள் நிரந்தர விலைக்குழுவின் அங்கீகாரத்திற்காக பல தடவைகள் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தொடர்பு படுத்தப்பட்ட பல்வேறு பிரச்சனைகளின் காரணமாக கல்வி அமைச்சிற்குள் இதற்காக ஆளணியினர் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இல்லாமையின் காரணமாக நிரந்தர விலைக்குழுவின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது என்பது உண்மையாகும். எவ்வாறாயினும் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஆலோசனைப் பிரிவின் பொறியியலாளரினால் (இந்த நிர்மாண வேலைக்குரிய நவீன பொறியியலாளர்) இந்த விலைகள் பரீட்சிக்கப்பட்டு எங்களுக்கு அனுப்பி லைக்கப்பட்டிருந்தும் இந்த அமைச்சில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இல்லாததனால் விலைப்பட்டியல்கள் கட்டிட திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு சிபாரிசுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் அவ்வப்போது கொடுப்பனவு வேண்டுதல்களை சமர்ப்பிக்கையில் சரியான முரண்கள் அங்கீகரிக்கப்படாது அவர்களுக்கு கொடுப்பனவு செய்ய முடியாததனால் அப்போதைய தகவல்களிலிருந்து ஆலோசகரின் அங்கீகாரத்தினைப் பெற்று முரண்களில் 80 சதவீதத்தினை கணித்து அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 6.15 மில்லியன் மிகையாக	சரியான அதிகாரத்தின் கீழ் முறையான நடைமுறைகளுக்கு இணங்க கொடுப்பனவு செய்வதற்கு நடடிக்கை எடுத்தல் வேண்டும். உரிய காலத்தில் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்கு 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பூர்த்திசெய்யப்பட்ட உபகரணங்கள் தொழில்நுட்ப ரீதியாக வழக்கொழிவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய பொறியியல் பிரிவு மற்றும் கொடுப்பனவு சம்பந்தமாக கணக்கு பிரிவின் உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		செலுத்தப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.	

4.11 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	கல்வி அமைச்சின் மின்னல் கடத்தி முறைமை சம்பந்தமான ரூபா 07 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுள்ள செப்புத் தகடு மற்றும் ஏனைய துணைக் கருவி முறைமைகள் காணாமல் போனமை 2023 ஏப்ரல் மாதத்திற்கு முன்பே இடம்பெற்றிருந்தது என கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட போதிலும் 2024 நவம்பர் 11 ஆம் திகதியிலிருந்து தாமதமாக நிதிப்பிரயாணத்தின் பிரகாரம் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதிப் பிரமாணம் 103(1) இல் காணாமல் போனமை இடம்பெறுகையில் எடுக்க வேண்டிய நடைமுறை தொடர்பான பொழிப்பின் பிரகாரம் 2025 மார்ச் 28 கணக்காய்வு திகதி வரை இந்த காணாமல் போனமை இடம்பெற்று 03 மாத காலத்தை மிகைத்திருந்தும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அமைச்சின் மின்னல் கடத்தி முறைமையிலுள்ள செம்பு தகடுகளும் ஏனைய துணைக்கருவிகளும் காணாமல் போயுள்ள சந்தர்ப்பம் அளவில் இது தொடர்பாக ஒப்பந்த கம்பனியால் பூர்த்திசெய்து அமைச்சிற்கு முறைப்படியாக ஒப்படைத்திருந்த முறைமையா என்பதுவும் செப்புதகடு காணாமல் போன சந்தர்ப்பம் அளவில் இந்த இடி கடத்தி முறைமை செயற்படும் நிலையில் காணப்பட்டதா என்பதுவும் சம்பந்தமாக உரிய பிரிவுகளிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளது. மற்றும் இது சம்பந்தமாக தலங்கம பொலிசிற்கு GCIB-358/102 ஆம் இலக்கத்தின் கீழ் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. நி.பி 104 இன் கீழ் நட்டம் தொடர்பாக தொடக்க அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தும் அதற்காக தொடக்க விசாரணைகள் மேற்கொள்ளல் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் பொருட்கள் காணாமல் போகையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக செயற்பட்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	கல்வி அமைச்சின் செயலாளரின் பெயருக்கு பதிவு செய்யப்பட்ட 139 வாகனங்கள் அமைச்சிடம் காணப்படவில்லை.	139 வாகனங்களின் தகவல்களை தற்பொழுது தேடிக்கண்டுபிடிப்பதற்கான இயலுமை இல்லை. அந்த 139 வாகனங்களுக்கு மத்தியில் 129 வாகனங்கள் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய வாகனங்களாகும். அக்காலப்பகுதியில் புதிய மாகாண சபை தோற்றுவிக்கப்பட்டதன் காரணமாக வலய அலுவலகத்தின் மூலம் அந்த வாகனங்கள் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு வழங்குதல் மற்றும் அதன் பின்னர் சில வாகனங்களை கைதவிர்ப்பு நடைமுறைக்கு உட்படுத்தல் இடம்	அமைச்சு செயலாளரின் பெயருக்கு பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களை சரியாக அடையாளம் கண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மற்றும் உள்ளகக்கட்டுபாட்டு நடைமுறையை ஸ்தாபித்தல் வேண்டும்.

		பெற்றிருக்கலாம். கல்வி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் செயற்திட்டங்களுக்கு அல்லது ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கும் போது அல்லது தற்காலமாக வழங்கும் போது அது தொடர்பான தகவல்கள் பதியப்பட்ட ஏடுகளை தற்பொழுது தேடிக்கண்டு பிடிக்க முடியாததன் அடிப்படையில் அந்த வாகனங்கள் தொடர்பான தகவல்களை தேடிக்கண்டு பிடிப்பது சிக்கலாகும்.	

4.12 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	பிரிவேனா பிரிவில் பொருத்தப்பட்டிருந்த 02 CCTV கமராக்கள் காணாமல் போயிருந்தும் அது சம்பந்தமாக நிதிப் பிராமாணத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிரிவேனா பிரிவின் CCTV கமரா காணாமல் போயுள்ளமை சம்பந்தமாக நி.பி 103 இன் கீழ் தொடக்க விசாரனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த அறிக்கையின் CCTV கமராவினை கொள்வனவு செய்யவோ அல்லது அரசாங்கத்திற்கு மானியமாக கிடைக்கவோ இல்லை எனவும் ஏனைய நிறுவனங்களினால் அன்பளிப்பு வழங்குவதற்குரிய ஆவணங்கள் உத்தியோகத்தர்களிடம் இல்லை எனவும் சிபாரிசு செய்யப்பட்டது. அதற்கிணங்க அரசாங்கத்திற்கு நிதிரீதியான நட்டம் ஏற்படவில்லை.	நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அன்பளிப்பாக கிடைத்ததன் பின்னர் அச்சொத்து அரசாங்கத்தின் ஒரு சொத்து என்பதனால் அரசாங்கத்தின் சட்டங்கள் மற்றும் பிராமணங்களுக்கு இணங்க முழுமையான பயன்பாட்டுடன் பயன் படுத்தல் வேண்டும்.
(ஆ)	நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட ஏடுகளிலிருந்து பதிவழிக்கும் கூற்றின் ஆரம்ப மீதியாகக் காட்டப்பட்ட ரூபா 16 மில்லியன் பெறுமதியான 07 சேதங்கள் தொடர்பான நட்டத்தை அறவீடு செய்தல் அல்லது மேலதிக நடவடிக்கை எடுத்தல் கணக்காண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அந்த மீதிகளுக்குரிய 05 விடயங்களிலிருந்து 2023 ஆம் ஆண்டின் போது எந்த பணத்தையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்பட்டது.	- மேற்படி -

4.13 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 2021-2023 காலப்பகுதியின் போது வழங்கப்பட்டு பதில் வழங்கும் தாமத காலம் ஆகக்குறைந்தது 16 மாதங்கள் மற்றும் உச்ச அளவு 42 மாதங்களான 15 கணக்காய்வு ஐய வினாக்களும் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டு பதில் வழங்கும் தாமத காலம் 16 மாதங்களான 66 கணக்காய்வு ஐய வினாக்களும் 2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டு பதில் வழங்கும் தாமத காலம் 18 மாதங்களான ''தேசிய பாடசாலைகளை ஆயிரம் வரை அதிகரிக்கும் விசேட கணக்காய்வு வரைபு அறிக்கைக்காகவும்'' ஆக 82 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு ஐயவினாக்கள் சமர்ப்பிக்கப்பட்டு பதிலைப் பெற்றுக்கொள்ளுதல் இந்த அமைச்சில் உள்ளகரீதியாக காணப்படுகின்ற ஏனைய கிளைகளின் மூலமும் அமைச்சு டன் இணைந்துக் கொள்ளப்பட்டுள்ள ஏனைய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் மூலமும் அமைச்சின் கீழுள்ள தேசிய பாடசாலைகளின் மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டிக் காணப்பட்டது. இந்த நடைமுறைக்காக நீண்ட காலம் எடுப்பதுடன் இதற்காக தற்பொழுது இருக்கின்ற ஆளணியினர் போதியளவு இல்லாமை உரிய கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பதில் வழங்கும் தாமதத்திற்கு காரணமாக அமைந்திருந்தது. அதற்கிணங்க எதிர்வரும் காலங்களில் இப்பிரச்சினையை தவிர்த்துக் கொள்வதற்காக என்னால் ஆளணியினர் தேவைப்பாட்டினைக் காட்டி பதவி அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக பனிப்பாளர் நாயகம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ED/12/01/14/2024-12 ஆம் இலக்க 2025 மார்ச் 28 ஆந் திகதி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிராமணத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்து உரிய காலத்தில் பதில் வழங்காமையின் மூலம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்படாமையின் காரணமாக அவ்வாறான குறைபாடுகளை மேற்கொள்வதற்கு ஏனைய உத்தியோகத்தர்களும் முன்வருவதன் மூலம் கல்வி முறைமைக்கு ஏற்படும் பாதகமான தாக்கம் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நோடியாக பொறுப்பு வகிப்பதுடன் அச்செயற்பாட்டினை உரிய காலத்தில் நிறைவேற்றாமை சம்பந்தமான பொறுப்புக்கும் உட்படுவார். கணக்காய்வு ஐய வினா தொடர்பாக தாமதமின்றி செயற்பட்டு அவற்றிற்கு முழுமையான பதில் வழங்குதல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

4.14 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த கணக்கு கூற்றில் பெறவேண்டிய கடன்/ முற்பண மீதி தொடர்பான காலப்பகுப்பாய்வின் பொழிப்பின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணமடைந்த ,ஓய்வு பெற்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 149.63 மில்லியனானதுடன் அதில் ரூபா 3.96 மில்லியன் பணம் 2025 மார்ச் 31 ஆந் திகதியளவில் தீர்த்து வைக்கப்பட்டதன் காரணமாக அம் மீதி ரூபா 145.67 மில்லியனானதுடன் அதில் ரூபா 19.06 மில்லியன் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 26.78 மில்லியன் 10 ஆண்டுகளுக்கும் 20 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 20.96 மில்லியன் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகவும் ரூபா 78.87 மில்லியன் 05 ஆண்டுகளுக்கு குறைந்த காலமாகவும் காணப்பட்டன.	அவதானிப்புடன் இணங்கி கொள்ளப்பட்டது.	சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்று வந்துள்ள ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து மிகைக் கொடுப்பனவாக அறவீடு செய்வதற்கு உள்ள கடன் மீதி ரூபா 28.82 மில்லியனானதுடன் 2025 மார்ச் 31 ஆந் திகதியளவில் ரூபா 20,000 பணம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் மீதி ரூபா 28.8 மில்லியனாகும். அதில் ரூபா 7.61 மில்லியன் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 11.84 மில்லியன் 10 ஆண்டுகளுக்கும் 20 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 1.62 மில்லியன் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் ரூபா 7.72 மில்லியன் 05 ஆண்டுகளுக்கு குறைந்த காலமாகவும் காணப்பட்டன.	2024.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்று வந்துள்ள மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து மிகை கொடுப்பனவாக அறவீடு செய்வதற்கு உள்ள கடன் மீதியில் ரூபா 20,000.00 பணம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் அது 05 ஆண்டுகளுக்கு குறைந்த காலத்திற்குரியதாகும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதியை அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	பாடசாலை பழைய மாணவர் சங்கங்களின் செயற்பாடுகள் சம்பந்தமாக கல்வி அமைச்சு சுற்றறிக்கையினை வழங்கி 30 ஆண்டுகள் கடந்திருந்தும் பழைய மாணவர் சங்கங்கள் சம்பந்தமான பொது அறிவுத்தல்களை உள்ளடக்கி நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் சுற்றறிக்கையினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பழைய மாணவர் சங்க சுற்றறிக்கையானது தேவையான திருத்தங்களுடன் வரை பாக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.	பழைய மாணவர் சங்கங்கள் பாடசாலைகளில் செயற்படுவது சம்பந்தமாக ஒரு வழிக்காட்டிக் கோவையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து அச்சங்கங்களின் செயற்பாட்டினை பாடசாலை முறைமையின் முன்னேற்றத்திற்கு மிகவும் சாதகமான முறைமையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	ருகுனு தேசிய கல்விக் கல்லூரியின் விடுதிக் கணக்கிற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தில் 2013 ஆம் ஆண்டிலிருந்து செலவு செய்யப்படாது முன் கொண்டு வரப்பட்டிருந்த மீதிகளில் சேமிப்பு காணப்பட்டதுடன் 2024 திசெம்பர் 16 கணக்காய்வுத் திகதி வரை ரூபா 6.8 மில்லியன் மீதி காணப்பட்டது. அக்கணக்கின் மிகுதிப்பணத்தை அக்காலப்பகுதியின் போது சரியாக அடையாளங்கண்டு தீர்த்து வைப்பதற்கு அல்லது அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது விளைவற்று விடுதி நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டிருந்தது.	விடுதிக் கணக்கில் ரூபா 04 மில்லியன் மீதி முன்கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டதுடன் அப்பணத்தை செலவு செய்யாது வைத்திருக்குமாறு கல்வி அமைச்சினால் வாய்மொழி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அப்பணத்தை வைத்திருந்து பணம் செலவு செய்யப்பட்டதுடன் கணக்காய்வு திகதி வரை கொள்வனவு செய்த பொருட்களுக்காக உரிய வவுச்சர் சமர்ப்பிக்கப்படாமையின் அடிப்படையில் அத்திகதியில் ரூபா 6.8 மில்லியன் பணம் காணப்பட்டது. விடுதிக் கணக்கிற்கு மாதாந்தம் ஒதுக்கப்படுகின்ற பணத்தை கணித்து உணவுக் குழுவினால் அளவீட்டு பத்திரத்தினை தயாரித்து செலவு செய்யப்படுவதனால் அக்கணக்கில் பணம் மிகுதியாக இருக்கவில்லை.	நலன் பெறுனர்களின் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு அடுத்து வரும் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்தல் வேண்டும் மற்றும் காலங்கடத்த வைப்புக்களை அரசாங்கத்தின் வருமானத்திற்கு நி.பி இன் பிரகாரம் மாற்றுதல் வேண்டும்.

4.15 ஏனைய அவதானிப்புக்கள்

தேசிய பாடசாலைகளின் தெரிவுப்பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	சிபாரிசுகள்
(அ)	நிர்ணயிக்கப்பட்ட படிவங்களில் சரியாகவும் முழுமையாகவும் நிரப்பி தயாரிக்கப்பட்ட அனைத்து வவுச்சர்களும் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கரந்தெனிய மத்திய மகா	கணக்காய்வு ஐய வினாக்களை பெற்றுக்கொண்டதன் பின்னர் நடாத்தப்பட்ட நிறைவேற்றுக் குழு கூட்டத்தின் போது பழைய மாணவர் சங்கத்தின் பணக் கொடுக்கல் வாங்கல்களின் போது	பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் உத்தியோகபூர்வமாக அதிபர் என்பதனால் அதற்கிணங்க அவரினால் நிதிப்பிரமானம் 225, 135-

	வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கத்தின் மூலம் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் காசோலை மூலம் செலுத்திய மொத்தமாக ரூபா 1.74 மில்லியன் செலவுக்காக மற்றும் இரண்டு சேமிப்பு வைப்பு கணக்குகளில் இருந்து மீளப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 2.40 மில்லியன் பணத்தை செலவு செய்தமை சம்பந்தமாக வவுச்சர்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	அதிபரின் கையொப்பம் கண்டிப்பானது என வலியுறுத்தி சான்று படுத்தப்பட்டுள்ளது.	140 என்பவற்றிலுள்ள ஏற்பாடுகள், தாபன விதிக்கோவை மற்றும் ஏனைய அரசாங்கத்தின் சட்டவிதிகள், பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அனைத்து கொடுப்பனவுக்காகவும் வவுச்சர்கள் தயாரிக்கப் படுதல் வேண்டும்.
(ஆ)	கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபரினால் 2023 திசெம்பர் 29 ஆம் திகதிய கல்வி அமைச்சு செயலாளரின் 52/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.3 ஆம் பிரிவின் பிரகாரம் நீச்சல் தடாகத்தின் வருமானத்தை பாடசாலை அபிவிருத்தி கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வருமானத்தில் ரூபா 491,332 பணம் சுற்றறிக்கைக்கு முரணாக செலவு செய்யப்பட்டதுடன் ரூபா 78,190 பழைய மாணவர் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.	மிகவும் வேகமாகவும் வினைத்திறனாகவும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக நீச்சல் தடாக முகாமையாளர் அந்த வருமானத்தில் இருந்து செலவு செய்துள்ளார். அந்த அனைத்து செலவுகளும் கண்காணிப்பிற்கு உட்படுத்தி செலவு செய்யப்பட்டுள்ளதுடன் அதுவும் ஒரு பிழையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அனைத்து செலவுகளும் உண்மையாக சரியான செலவுகள் என சான்றுபடுத்தி அனைத்து செலவு செய்தல்களும் அபிவிருத்தி சங்கத்தின் கணக்கினூடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாடசாலை தலைவராக வெளிப்படைத் தன்மையை பாதுகாத்து நிதிக்கட்டுப்பாட்டினை முறைமை படுத்துவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
(இ)	2015 ஜனவரி 19 ஆம் திகதி கல்வி அமைச்சி செயலாளரின் 52/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி மற்றும் 26/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.4 ஆம் பந்தி மற்றும் 2008/17 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 11 ஆம் பந்திக்கு முரணாக கா/கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கொழும்பு ரோயல் கல்லூரியினால் உயர்ரத வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் போது ரூபா 11.61 மில்லியன் பணமும் கொழும்பு ரோயல் கல்லூரிக்கு 1 ஆம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது ரூபா 2.73 மில்லியன் பணமும் பெற்றோர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	உயர்ரத வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களின் தலையீட்டில் அவர்களின் தலைமையில் புணத்தை வழங்கி ‘‘ப்ரயாம’’ நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது என தெரிவிக்கப்பட்டது. கொழும்பு ரோயல் கல்லூரிக்குரிய பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	பாடசாலை அதிபர்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும்.

(ஈ)	ஒவ்வொரு ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரே பாடசாலையில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தினை பூர்த்திசெய்துள்ள ஆசிரியர்களின் தகவல்களை உள்ளடக்கிய படிவத்தை சரியாக பூர்த்திசெய்து உரிய அதிபர்களினால் கல்வி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பல அதிபர்கள் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்காத போதிலும் கல்வி அமைச்சினால் அது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	வருடாந்த இடமாற்ற கொள்கையை நிர்ணயிக்கப்பட்டவாறு மேற்கொள்வதற்கு முடியுமான வகையில் அமைச்சினால் மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் தெரிவுப் பரீட்சிப்பின் போது பாடசாலைகளில் இடைப்பட்ட தரங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது 2023 ஏப்ரல் 25 ஆம் திகதிய 17/2023 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய புதிய மற்றும் பழைய வசிப்பிடங்களை உறுதிப்படுத்தாது அதிபர் உள்ளடங்களாக நேர்முகப்பரீட்சை குழு அங்கத்தவர்களால் 28 மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	ஆவணங்களின் சரியான தன்மையை உறுதிப் படுத்துவதற்கு முறைப்படியாக ஒரே மாதிரியான நடைமுறையினை அறிமுகப்படுத்தி சுற்றறிக்கையின் பிரகாரம் தகைமைப்பெற்ற மாணவர்களை மாத்திரம் பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	ஒரு ஆசிரியர் ஒரு வாரத்திற்குள் கற்பிக்க வேண்டிய காலப்பகுதிகளின் எண்ணிக்கை 40 ஆக இருந்த போதிலும் அதில் செயற்பாடுகளுக்காக விடுவிக்கப்படுவதனைத் தவிர்த்து ஒரு ஆசிரியர் பாடங்களை கற்கும், கற்பிக்கும் செயற்பாடுகளில் ஆகக் குறைந்தது 30 காலப்பகுதிகள் ஈடுபட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்காது இர/எம்/சனாதிபதி மத்திய மகா வித்தியாலயத்தின் மற்றும் கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயத்தின் 105 ஆசிரியர்கள் எதுவித செயற்பாடுமின்றி இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.	ஆசிரியர் மிகைகளின் காரணமாக ஆகக் குறைந்த காலப்பகுதியையும் வழங்குவதற்கு முடியாதுள்ளது.எ னினும் ஆசிரியர்களுக்கு ஏனைய செயற்ப்பாடுகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.	அதிபர்களால் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆசிரியர்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஆசிரியர் சமப்பாடு இடம்பெறும் வகையில் ஆசிரியர் இடமாற்ற கொள்கையை அமுல்படுத்துதல் வேண்டும்.
(எ)	மக/உயர் பெண்கள் கல்லூரியில் அங்கீகாரத்ததுடன் வெளிநாடு சென்று அங்கீகரித்த காலத்தினை மிகைத்து மீண்டும் பாடசாலைக்கு சமூகமளிக்காத 23 மாணவர்கள் சம்பந்தமாக கல்வி அமைச்சு செயலாளரின் HRD/EQD/2002/26 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2(ii) மற்றும் 2(iv) ஆம் பிரிவுகளின் பிரகாரம்	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	இவ்வாறான நிலைமையை துரிதமாக சிறப்பாக வெளிப்படுத்தும் வகையில் துரித வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தி அதற்கிணங்க அடையாளங்காணப்பட்ட வெற்றிடங்களின்

	வெற்றிடங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சுற்றறிக்கையின் (v) ஆம் பிரிவின் பிரகாரம் எவராவது ஒரு மாணவர் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலத்தில் மீண்டும் நாட்டிற்கு வரவில்லையாயின் உரிய மாணவனுக்காக தொடர்ச்சியாக வெற்றிடத்தினை வைத்திருக்கலாகாது எனக்குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக பின் தொடர் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக 17/2023 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு இணங்க இடைப்பட்ட வகுப்புகளுக்கான வெற்றிடங்களை பிரசித்தப்படுத்தி சேர்த்துக் கொள்வதற்கு அதிபர்களுக்கு முடியாதிருந்தது.		அடிப்படையில் தகைமை பெற்ற மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிலிருந்து செலவு செய்யும் போது பிராமணங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட மொத்தமாக ரூபா 03 மில்லியன் செலவுகள் முறையற்ற செலவுகள் என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் அதாவது பாடசாலையின் அதிபர் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவின் பதவிநிலை அங்கத்தவர்கள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களினால் கல்வி அமைச்சு செயலாளரின் 26/2018 ஆம் இலக்க மற்றும் 2018 யூன் 22 ஆந் திகதி பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட தரமான, அளவுச்சார்ந்த மற்றும் கட்டமைப்பான அபிவிருத்திக்காக திட்டமிடுதல் மற்றும் பெறுகைகள் தொடர்பான வழிக்காட்டிக் கையேட்டின் 16.6 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	தொடர்புபட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நிதிப் பிரமாணம் 135-140, 225, 156 என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	கல்வி அமைச்சு செயலாளரின் 26/2018 ஆம் இலக்க 2018 யூன் 22 ஆம் திகதயி சுற்றறிக்கையின் 7.3 ஆம் பந்தியின் பிரகாரம் பண அன்பளிப்புக்களை பெற்றுக் கொள்ளும் போது அதற்காக பாடசாலை	வலய கல்விப் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ முத்திரை பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் பற்றுச்சீட்டுக்கள் முடிவடைந்ததன் பின்னர் மீண்டும் ஒரு பகுதி பற்றுச்சீட்டுகளுக்கு முத்திரை	தேவைப்பாட்டிற்கு இணங்க பற்றுச்சீட்டுப் புத்தகங்களை அச்சிடுதல் மற்றும் அனைத்து பற்றுச்சீட்டு புத்தகங்களுக்கு

	அபிவிருத்தி கணக்கின் பெயரில் முறைப்படியாக தொடர் இலக்கத்துடன் மற்றும் வலயக்கல்வி பணிப்பாளரின் முத்திரை பொறிக்கப்பட்ட பற்றுச்சீட்டு வழங்கப்பட வேண்டிய போதிலும் மகவ விஜயபா தேசிய பாடசாலை சுற்றறிக்கைக்கு முரணாக நடவடிக்கை எடுத்திருந்ததுடன் இர/எம்/சனாதிபதி மத்திய மகா வித்தியாலயத்தில் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை அன்பளிப்புக்களைப் பெற்றுக்கொண்ட 37 சந்தர்ப்பங்களின் போது அதற்காக பற்றுச் சீட்டுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.	பொறிக்கப்படும் வரை அந்த பற்றுகச்சீட்டு புத்தகங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. எதிர்வரும் காலங்களில் கிடைக்கின்ற அனைத்து அன்பளிப்பு பொருட்களுக்காகவும் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படும்.	கல்விப்பணிப்பாளரின் முத்திரை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் அது சம்பந்தமாக அமைச்சு மட்டத்தில் போதியளவு வேலைத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஒ)	மாத்தளை விஜய தேசிய பாடசாலையில் 2023 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற அன்னதானம் மற்றும் பிரித் பாராயணத்திற்காக 2018 யூன் 18 ஆம் திகதிய 26/2018 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 1.1 மில்லியன் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அச் சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 851,175 இனை செலவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	பாடசாலை அதிபர்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அது சம்பந்தமாக அமைச்சு மட்டத்தில் போதியளவு வேலைத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஓ)	நீச்சல் தடாகத்தில் இருந்து கிடைக்கின்ற அனைத்து வருமானங்களையும் பாடசாலை அபிவிருத்தி கணக்கிற்கு செலவு வைத்து அக கணக்கின் மூலம் உரிய செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயம் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன் முகாமையாளரினால் சேகரிக்கப்படுகின்ற நாளாந்த வருமாணம் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டு அதாவது அவரின் மாதாந்த படி மற்றும் ஏனைய நானாவித செலவுகளுக்கு செலவு செய்ததன் பின்னர் மிகுதிப்பணம் மாத்திரம் பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க கணக்காய்வு தெரிவு பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட காலம் தொடர்பாக மொத்தமாக ரூபா 491,332 கல்வி அமைச்சி செயலாளரின் 52/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணக்கமற்று முறையற்ற வகையில் செலவு செய்தலும் பாடசாலையின் 80 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	52/2023 ஆம் இலக்க 2023 திசெம்பர் 29 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் பாடசாலை அபிவிருத்தி கணக்கிற்கு செலவு வைத்து செலவு செய்தல் வேண்டும்.

	செலவு செய்ததற்காக ரூபா 78,190 தொகை பாடசாலை பழைய மாணவர் சங்கத்திற்கு வழங்குதலும் இடம்பெற்றிருந்தது.		
(ஔ)	கரந்தெனிய மத்திய மகா வித்தியாலயத்தில் 2024 ஒக்தோபர் 08 ஆம் திகதி நீச்சல் தடாக வருமானம் செலவுகள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பரீட்சித்ததற்கு இணங்க முகாமையாளரினால் சேகரிக்கப்பட்ட மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 287,540 வருமானத்தில் ரூபா 70,000 தொகையினை முகாமையாளர் கையில் வைத்திருந்த போதிலும், ரூபா 147,540 காசு பற்றாக்குறை காணப்பட்டது. உரிய காசுப் பற்றாக்குறையின் காரணத்தை அச்சந்தர்ப்பத்திலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்ததுடன் உரிய பணம் பிழையான பயன்பாட்டிற்கு மறுக்க முடியாதுள்ளது.	பதில் சமர்ப்பிக்கப்பட்வில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் பாடசாலை அபிவிருத்தி கணக்கிற்கு பணத்தை செலவு வைத்தல் மற்றும் அக்கணக்கினூடாக செலவு செய்தல் வேண்டும். அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கியிருக்காமை சம்பந்தப்பட்ட அதிபர்கள் தொடர்பாக தாபன விதிக்கோவையின் II ஆம் பகுதியின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகள் மற்றும் நிதிப் பிரமாணத்தின் 119 மற்றும் 156 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(க)	திக்வெல்ல விஜித மத்திய மகா வித்தியாலயத்தில் 2021 நவம்பர் 09 ஆம் திகதி இடம்பெற்றிருந்த கணனி ஆய்வுகூட களவு தொடர்பான நட்டத்தின் பெறுமதி ரூபா 1.34 மில்லியன் எனவும் மேற்கூறிய சம்பவம் இடம்பெற்று தற்பொழுது 03 ஆண்டுகள் கடந்திருந்தும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கையினை வழங்கி நட்டத்தினை அறவிட்டு உரிய பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மாத்தறை வலய கல்விப் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வில் சுட்டிக்காட்டப்படுகின்ற சிபாரிசுகளின் பிரகாரம் நட்டத்தை அறவீடு செய்யும் முறைமை மற்றும் ஏடுகளில் இருந்து நீக்கப்பட வேண்டிய முறைமை தொடர்பாக ஆலோசனைகள் தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளரினால் இதுவரை வழங்கப்படவில்லை. அதற்கிணங்க இச் செயற்பாட்டினை துரிதமாக மேற்கொள்ளுமாறு 2024 ஆகஸ்ட் 12 மற்றும் 2025 மார்ச் 03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தென்மாகாண கல்வி திணைக்களத்தின் பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டது.	நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுத்து பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(கா)	கொ/ரோயல் கல்லூரியின் அபிவிருத்தி சங்க கணக்கில் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான நிதிகூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட காசு மீதிக்கும் காசேட்டின் மீதிக்குமிடையே கணக்கிணக்கம் செய்ய முடியாத ரூபா 3,342 மில்லியனான காசு மீதி வித்தியாசம் சம்பந்தமாக பதிவிழிப்பதற்கு அல்லது குழுவினை நியமிப்பதற்கு நிறைவேற்றுக் குழுவிற்கு அதிகாரம் இல்லாதிருந்தும் பாடசாலை நிறைவேற்றுக் குழுவினால் நியமிக்கப்பட்ட விசேட குழு தீர்மாணத்தின் அடிப்படையில் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பாடசாலையின் நிதிக்கூற்றுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் இது சம்பந்தமாக கல்வி அமைச்சின் தேசிய பாடசாலைக் கிளையின் அறிவுறுத்தல் மற்றும் வழிக்காட்டல் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை	பதில் சமர்ப்பிக்கப்பட்வில்லை.	இது சம்பந்தமாக கல்வி அமைச்சினால் விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் இவ்வாறான நிலைமைகளின் போது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய முறைமை தொடர்பாக பாடசாலைகளுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நல்லாட்சி

5.1 பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
கல்வி அமைச்சின் உள்ளக தொலைபேசி முறைமை (PABX முறைமை) 2023 ஏப்பர் 07 ஆம் திகதியிலிருந்து மின்னல் தாக்கியதன் காரணமாக முழுமையாக செயற்பாடற்று இருந்ததுடன் காணப்படுகின்ற முறைமையும் நன்றாக செயற்படாமையின் காரணமாக ஒரு புதிய முறைமையினை ஸ்தாபிப்பதற்காக 2018 ஆம் ஆண்டிலிருந்து கல்வி அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் 2025 ஆம் ஆண்டு வரை ஒரு புதிய முறைமையினை ஸ்தாபிப்பதற்கு கல்வி அமைச்சு தவறியிருந்தது. உள்ளக தொலைபேசி முறைமை பழுதடைந்தமை	அமைச்சின் உள்ளக தொலைபேசி முறைமை பழுதடைந்தமையானது அமைச்சின் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு பாதகமான தாக்கம் ஏற்பட்டுள்ளது. எனினும் அமைச்சின் 10 நேரடி தொலைபேசிகள் கண்டிப்பாக செயற்பட்டு வருவதுடன் அதன் மூலம் பொது மக்களுக்கு தேவையான சந்தர்ப்பங்களில் தொலைபேசி பரிமாற்று பிரிவினூடாக (Telephone exchange) தேவையான பிரிவுகளுடன் தொடர்பு கொள்ளலாம் மேலும் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு உள்ளக தொலைபேசி இலக்கம் செயற்ப்பட்டு	புதிய உள்ளக தொலைபேசி முறைமையினை துரிதமாக ஸ்தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பொது மக்களுக்கான சேவைகளை சிறப்பான வகையில் நிறைவேற்றுவதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

தொடர்பாக துரிதமாக முயற்சி எடுக்காமையின் காரணமாக 24 மாத காலமாக 2025 ஒக்தோபர் மாதம் வரை தொலைபேசி மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவையை நிறைவேற்றுதலினை சிறப்பாக மேற்கொள்ள முடியாமைக்கு குறிப்பிடத்தக்க அளவான மட்டத்தில் பாதகமான தாக்கம் ஏற்பட்டிருந்தது.	வருகின்றது. மேலும் கல்வி அமைச்சுடன் தொடர்புள்ள வெளி சேவை நாடுனர்களைப் போல உள்ளக உத்தியோகத்தர்களுக்கு தொலைபேசி விபரக்கொத்தின் வாயிலாக 240 நேரடி தொலைபேசிகளின் மூலம் அமைச்சின் தேவையான பிரிவுகளுடன் தொடர்பு கொள்ளலாம்.	

5.2 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோக கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	உள்ளக கணக்காய்வுப் பிரிவின் 2024 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க ஆபத்து மதிப்பீட்டின் அடிப்படையில் உள்ளக கணக்காய்வினால் அடையாளங்காணப்பட்ட 29 கணக்காய்வு துறைகள் மற்றும் கணக்காய்வு செயற்பாடுகள் காட்டப்பட்டிருந்தும் வழங்கப்பட்ட அறிக்கைகளைப் பரீட்சித்த போது திட்டமிட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்காததுடன் பல உள்ளக கணக்காய்வு அறிக்கையானது தேசிய பாடசாலைகளின் நிதிக் கணக்காய்விற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.	2024 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு திட்டத்தில் அடையாளங் காணப்பட்ட கணக்காய்வு செயற்பாடுகளின் 80 சதவீதமானவை 2024 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் கணக்காய்வு திட்டத்தில் உள்ளடக்கப்படாத எனினும் எனது கட்டளையின் அடிப்படையில் மேற்கொண்ட 21 விசேட கணக்காய்வு பரீட்சிப்புக்களும் அந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க பிரிவில் காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியினர் அந்த விசேட பரீட்சிப்பிற்கு ஈடுபடுத்த வேண்டியிருந்தமையின் அடிப்படையில் கணக்காய்வு திட்டத்தினை நூற்றுக்கு நூறு வீதம் பூரணப்படுத்த முடியாதிருந்தது அதனால் 2025 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு திட்டத்தினை முழுமையாக மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.	ஆபத்தினை மதிப்பீடு செய்தலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட விசேட விடயங்களை உள்ளடக்கும் வகையில் ஸ்தாபிக்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை உறுதிப்படுத்தும் வகையிலும் புதிய உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை அறிமுகப்படுத்துதலினையும் உள்ளடக்கி அனைத்து கட்டுப்பாடுகளுடன் உள்ளக கணக்காய்வுத் திட்டத்தினை தயாரித்து உள்ளக கணக்காய்வினை மேற்கொண்டு கல்வி அமைச்சின் நிதி ஒழுங்குகள், செயற்திட்டத்தினை நிறைவேற்றுதல், பெறுகை குறிக்கோள்கள் முதலியவற்றின் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை காலரீதியாக மீளாய்வு செய்து உறுதிபடுத்துதல் வேண்டும்.

(ஆ)	நிதிப்பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளரினால் அமைச்சின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக நடாத்தப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு முறைமைக்கு பங்குபற்றி அந்த நடவடிக்கைகளிலுள்ள பிழைகள் மற்றும் மோசடிகளை தவிர்த்துக் கொள்வதற்கும் வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற உள்ளக பரீட்சிப்புக்கள் முறைப்படியானது மற்றும் போதியளவானது என்பது தொடர்பாக தொடர்ச்சியான மீளாய்வு மற்றும் சுயாதீனமான மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்ததும். பிழைகள் மற்றும் மோசடிகளை தவிர்ப்பதற்கும் வெளிப்படுத்திக் கொள்வதற்கும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினைப் பரீட்சிப்பதற்கு மற்றும் புதிய உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவு போதியளவு காலத்தினை செலவு செய்யவில்லை எனவும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் மற்றும் அறிக்கைகளுக்கு இணங்க அவதானிக்கப்பட்டது.	2024 ஆம் ஆண்டிற்கான உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க அமைச்சின் நோக்கெல்லைக்குரிய தேசிய பாடசாலைகளில் இடம்பெற்றுள்ள பிழைகள் மற்றும் மோசடிகளைத் தவிர்ப்பதற்கு மற்றும் வெளிப்படுத்துவதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை பரீட்சிப்பதற்கும் புதிய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை அறிமுகப்படுத்துவதற்கும் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதுடன் 2025 கணக்காய்வு திட்டத்தின் மூலம் அமைச்சின் நிதி நடவடிக்கைகள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் ஆண்டிற்காக தயாரிக்கப்படும் கணக்காய்வு திட்டத்தின் போது தேசிய பாடசாலைகளை போல அமைச்சின் நடவடிக்கைகளையும் உள்ளடக்கும் வகையில் திட்டங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சிபாரிசுகள் மேற்கூறியவாறாகும்
(இ)	2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் செலவு தலைப்பு தொடர்பாக உள்ளக கணக்காய்வாளரின் தீர்மாணத்தை குறிப்பிட்டு அமைச்சு செயலாளருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை	2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பாக உள்ளகக் கணக்காய்வாளரின் தீர்மாணத்தை குறிப்பிட்டு எனக்கு 2025 ஆம் ஆண்டிலிருந்து ஒரு அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	2024 இன் 44 ஆம் இலக்க அரசாங்க நிதி முகாமைத்துவ அதிகாரச் சட்டத்தின் 33(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் செலவுத் தலைப்பு தொடர்பாக உள்ளகக் கணக்காய்வாளரின் தீர்மாணத்தை குறிப்பிட்டு அமைச்சு செயலாளருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	சிபாரிசுகள்
2019 ஜனவரி 12 ஆம் திகதிய DMA/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழுக் கூட்டங்கள் ஆகக் குறைந்தது ஒரு ஆண்டிற்கு 04 கூட்டங்கள் ஆன வகையில் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2024 ஆம் ஆண்டிற்காக 03 முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன.	இரண்டு தேர்தல்களும் நாட்டில் நடாத்தப்பட்டதுடன் அதற்கிணங்க ஆண்டின் போது 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டன. அடுத்து வரும் ஆண்டுகளின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை காலாண்டிற்குள்ளேயே நடாத்துவதற்கு ந்வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/1-2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 5.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுகூட்டங்களை ஆகக் குறைந்தது ஒருகாலாண்டு ஒரு கூட்டத்தினை நடாத்துதல் வேண்டும்.

6. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	அமைச்சின் கட்டிடங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு அத்தியாவசியமான பதவியான கட்டிட முகாமையாளர் பதவி 2023 திசெம்பர் 30 ஆம் திகதியிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அப்பதவியை நிரப்புவதற்கு 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த அமைச்சிற்கு அங்கீகரித்த இலங்கை தொழில்நுட்ப சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் கட்டிடங்களை நிருவகிக்கும் பதவி அச்சேவையில் விசேட தரத்திலுள்ள ஒரு பதவி என்பதனால் அதற்காக ஆட்சேர்ப்பதற்கு இயலுமை இல்லை. அதற்கிணங்க பதவியிலுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக உள்ளக ரீதியாக பதவியுயர்வு செய்யக் கூடிய தகைமைகளை நிறைவு செய்துள்ள ஒரு உத்தியோகத்தர் அமைச்சில் இல்லாததன் காரணமாக 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பதவிக்குரிய சேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகளின் கீழ் அமைச்சின் கட்டிடங்களை பராமரிப்பதற்காக ஒரு உத்தியோகத்தரினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	**அரசாங்க பாடசாலைகளில் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களைச் சேர்த்துக் கொள்ளல்**		
(i)	விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஆசிரியரின் தேவைப்பாட்டினை முறைப்படியாக அடையாளங் கண்டு கொள்ளாது மற்றும் ஆசிரியர் சேவையில் விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பதவியினை குறைப்புச் செய்து அமைச்சினால் 3,888 விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களை 2019 ஆம் ஆண்டின் போது சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் தேசிய பாடசாலைகளுக்கும் மாகாண சபைகளுக்கும் இணைத்துக்கொள்ளும் போது உருவாகிய பிரச்சனைகளின் காரணமாக மீண்டும் விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஆசிரியர் பதவியை குறைப்புச் செய்யாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் பாடசாலைகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தும் பல பாடசாலைகளினால் செஸ், கிரிக்கெட், கரப்பந்தாட்டம் முதலிய விளையாட்டுகளுக்காக வெளி பயிற்றுவிப்பாளர்களின் சேவையைப் பெற்று அதற்காக பாடசாலை அபிவிருத்தி சங்கங்களால் சம்பளம் செலுத்துவதற்கும் மாணவர்களிடமிருந்து மேலதிக பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது	பதில் சமர்ப்பிக்கப்பட்வில்லை.	சேவைக்குறிப்பின் பிரகாரம் விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது விளையாட்டு மற்றும் உடற்கல்வி ஆசியர்களின் தேவைப்பாட்டினை முறையாக அடையாளங் கண்டு அங்கீகரித்த பதவிகளின் எண்ணிக்கையை மீளாய்வு செய்து வெற்றிடமான எண்ணிக்கைகளை தொகை மதிப்புச் செய்து சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். கல்வி அமைச்சினால் பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களிடமிருந்து பணத்தை சேகரிக்கின்ற முறையற்ற அமைப்புக்களை பாடசாலை முறைமையிலிருந்து அகற்றும் வகையில் முறையான ஒரு வேலைத்திட்டத்தினையம் நடைமுறையினையும் அறிமுகப்படுத்தி அது அமைச்சு மட்டத்தில் கண்காணிப்பு செய்யப்படுதல் வேண்டும்.

(ii) விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களை சேர்த்துக்கொள்ளும் நடைமுறைக்கு இணங்க உரிய பயிற்றுவிப்பாளர்களை தரம் (III) இற்கு நியமித்து 03 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 8.2 ஆம் பிரிவிற்கு இணங்க ஒரு ஆண்டிற்கு இரண்டு தடவைகள் வினைத்திறமை காண் தடைப் பரீட்சை நடாத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டு வரை ஒரு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. தாபன விதிக்கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 15 ஆம் உப பிரிவிற்கு இணங்க நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையினை நடாத்துவதற்கு நியமன அதிகாரி/ நிருவாக அதிகாரி அப்பொறுப்பிற்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டும். என குறிப்பிட்டிருந்த போதிலும் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையினை நிர்ணயிக்கப்பட்ட தடவைகள் நடாத்துவதற்கு மேலதிக செயலாளர் (கல்விசாரா மற்றும் ஒருங்கிணைந்த சேவைகள்) நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதற்கிணங்க விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களுக்கு உரிய வினைத்திறமை காண் தடைப்பரீட்சையினை நடத்தாமையின் அடிப்படையில் நியமனங்களை நிரந்தரமாக்குவதற்கு முடியாதிருந்தது.

2019 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து 2022 ஆம் ஆண்டு வரை கொவிட் தொற்று நோயின் காரணமாகவும் அரசாங்க சேவை ஆணைக் குழு 2022-07-05 ஆம் திகதி வழங்கியுள்ள அங்கீகாரத்திற்கு இணங்கவும் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை சம்பந்தமாக திருத்தங்களை உள்ளடக்கி ஆட்சேர்ப்பு நடைமுறைகளை திருத்தம் செய்தல் மற்றும் ஆட் சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க வினைத்திறமை காண் தடைப்பரீட்சையினை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. வருடாந்தம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையினை நடாத்துவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது.

உரிய நடைமுறையினைப் பின்பற்றி வினைத்திறமை காண் தடைப்பரீட்சையினை நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையினை நடாத்தி அவர்களின் சேவையை சிறப்பாக பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(இ)	அமைச்சின் சிரேஸ்ட மற்றும் மூன்றாம் மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களின் வெற்றிடம் 880 ஆகவும் நாடளாவிய மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள வெற்றிடம் 2,418 ஆகவும் காணப்பட்டது.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	அத்தியாவசியமான பதவிகளை மாத்திரம் அடையாளங்கண்டு அது தொடர்பான மீளாய்வுடன் புதிய நியமனங்களை மேற்கொள்கின்ற விசேட குழுவிற்கு விளக்கமளித்தல்களை வழங்கி ஆட்சேர்ப்பிற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	தேசிய கல்வி கல்லூரிகளில் சிரேஸ்ட மட்டத்திலுள்ள வெற்றிடம் 544 ஆகவும் மூன்றாம் மாவட்டத்திலுள்ள வெற்றிடம் 26 ஆகவும் இரண்டாம் மட்டத்திலுள்ள வெற்றிடம் 262 ஆகவும் ஆரம்ப மட்டத்திலுள்ள வெற்றிடம் 106 ஆகவும் காணப்பட்டதனால் தேசிய கல்வி கல்லூரிகளின் ஒட்டுமொத்த செயலாற்றல் தொடர்பாக அதிக அளவு தாக்கம் ஏற்படுத்தியுள்ளதுடன் மேற்கூறியவாறு வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் கல்வி அமைச்சினால் 2025 ஆம் ஆண்டில் எதிர்பார்த்த ஆட்சேர்ப்பு ஆவணங்களுக்கு அந்த வெற்றிடங்கள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அந்த வெற்றிடமான பதவிகளின் அங்கீகரித்த எண்ணிக்கை தொடர்பான மீளாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	தேசிய கல்விக் கல்லூரிகளின் அங்கீரித்த ஆளணியினர் எண்ணிக்கை தொடர்பாக மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அத்தியாவசியமான பதவிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	தேசிய கல்வி கல்லூரிக்குரிய விபரமான ஆளணித் தகவல்களின் பிரகாரம் இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையில் அங்கீகரித்த விரிவுரையாளர் பதவிகளின் எண்ணிக்கை 1080 எனவும் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதியில் உள்ளவாறு உள்ளபடியான பதவிகள் 539 எனவும் அவதானிக்கப்பட்டதுடன் அதற்கிணங்க வெற்றிடமான விரிவுரையாளர் பதவிகளின் எண்ணிக்கை 541 ஆக இருந்ததுடன் பல கல்விக் கல்லூரிகளில் 63 வயதிற்கும் 70 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய வெளிவுரையாளர்கள் 06 மாதங்களுக்கு 06 மாதம் காலத்தை நீடித்து சேவையில்	பதில் சமர்ப்பிக்கப்படவில்லை.	தேசிய கல்விக் கல்லூரிகளின் அங்கீகரித்த ஆளணியினர் எண்ணிக்கை தொடர்பாக மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அத்தியாவசியமான பதவிகளுக்காக நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் ஆட்சேர்ப்புக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஈடுபட்டிருந்தார்கள் என அவதானிக்கப்பட்டது. அது தேசிய கல்விக் கல்லூரிகளின் மாணவர்களின் கற்றல் நடைமுறை தொடர்பாக அதிக தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தும் கல்வி அமைச்சினால் அது சம்பந்தமாக முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.		
(ஊ)	தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு 73 விடுதி அத்தியட்சகர்கள் (ஆண்கள்/ பெண்கள்) பதவிகளம், 74 உதவி விடுதி அத்தியட்சகர்கள் (ஆண்கள் / பெண்கள்) பதவிகளும் அங்கிகரித்திருந்த போதிலும் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை 58 விடுதி அத்தியட்சகர் (ஆண்கள்/ பெண்கள்) பதவிகளும் 33 உதவி விடுதி அத்தியட்சகர் (ஆண்கள்/ பெண்கள்) பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன.	உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர் பதவிகளுக்கு 80 நபர்களை மட்டுப்படுத்த அடிப்படையில் சேர்த:தக்கொள்வதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதறகான பரீட்சைகளில் 47 நபர்கள் சித்தியடைந்திருந்த போதிலும் தேவையான தகமைகளை பூரணப்படுத்தியதன் அடிப்படையில் 27 நபர்களுக்கு 2025 யூலை மாதம் நிழயமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அரசாங்க சேவையில் ஆட்சேர்க்கும் நடைமுறையை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணியினரை முகாமைத்துவம் செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு புதிய ஆட்சேர்ப்புக்களை சிபாரிசு செய்து 2025 மார்ச் 27 ஆந் தகதி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.	தேசிய கல்விக் கல்லூரிகளின் அங்கீகரித்த ஆளணியினர்களின் எண்ணிக்கை தொடர்பாக மீளாய்வு செய்து அத்தியவசியமான பதவிகளக்காக நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்தின் கீழ் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	தேசிய பாடசாலைகளின் ஆளணியினர் தகவல்களின் பிரகாரம் பாடசாலைகளுக்கு அங்கீகரித்த அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் I, II, III இலுள்ள பதவிகளின் எண்ணிக்கை 1297 ஆனதுடன் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான உள்ளபடியான ஆளணியினர் எண்ணிக்கை 2,313 ஆக இருந்ததனால் 1,016 ஆளணியினர் மிகையாகவும் ஆசிரியர் நிலையங்களுக்கான ஆரம்ப மட்டத்திலுள்ள 111 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான ஆளணியினர் எண்ணிக்கை 123 ஆக	2022 ஆம் ஆண்டில் நிரந்தர நியமனங்கள் வழங்கிய பட்டதாரி பயிலுனர்கள் பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட சேவை நிலையங்களிலேயே நிரந்தர நியமனங்களை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. எனவே அந்த உத்தியோகத்தர்கள் பயிற்சியைப் பெற்ற இடங்களுக்கே இணைத்துக் கொள்ளும் போது தேசிய பாடசாலைகளில் உள்ளபடியான அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அங்கீகரித்த	அமைச்சு மட்டத்திலான மிகைகள் மற்றும் பற்றாக்குறையான பதவிகளுக்கு இணங்க உத்தியோகத்ரதகளை முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் வினைத்திறனாக இணைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இருந்ததனால் 12 மிகை ஊழியர்களும் ஆசிரியர் கல்லூரிகளின் இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டங்களில் மிகைகளின் எண்ணிக்கை 40 ஆக 1,068 உத்தியோகத்தர்கள் மிகையாக கல்வி அமைச்சினால் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். 2022 ஆம் ஆண்டின் போது நியமனம் வழங்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் மிகைகள் ஏற்படாத வகையில் இணைத்துக் கொள்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுத்தல் அமைச்சின் மூலம் இடம்பெற்றிருக்கவில்லை என பதிலின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் அந்த உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளமும் படிகளும் விளைவற்றதாக இருந்தது..

எண்ணிக்கையை மிகைத்துள்ளது. ஆசிரியர் கல்லூரிகளுக்கு இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள பதவிகள் 2019 ஆம் ஆண்டிலேயே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதுவரையும் அந்த நிறுவனங்களில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களும் ஆளணிக்குள் உள்ளடக்கப்படுவார்கள். 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்கள் வருடாந்த இடமாற்றங்களின் போது கவனித்துப் பார்ப்பதற்காக ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். ஆசிரியர் நிலையத்திற்கு 336 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனால் இந்த மிகையான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அந்த நிலையத்திற்கு இணைத்துகக் கொள்ளப்படுவார்கள்.

முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1868 ஆம் இலக்க 2024-03-06 ஆம் திகதி கடிதத்தின் மூலம் ஆசிரியர் அபிவிருத்தி நிலையத்திற்கு 336 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டதற்கு தற்பொழுது நாடு முழுவதிலுள்ள இருக்கின்ற மிகையான அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அண்மையிலுள்ள ஆசிரியர் அபிவிருத்தி நிலையத்திற்கு இணைத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் அடம் பெற்று வருகின்றது. எவ்வாறாயினும் உளர் நிதி மன்றத்திலுள்ள 77-2023, 78-2023, 88-2023 மற்றும் 95-2023 ஆம் இலக்க அடிப்படை உரிமைகள் வழங்குவதற்கு இணங்க இந்த சமப்படுத்தல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

(எ)	தேசிய பாடசாலைகளுக்கு 258 விடுதி மேற்பார்வையாளர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் உள்ள படியான எண்ணிக்கை 80 ஆக இருந்ததனால் 178 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. பாடசாலைகளிலுள்ள விடுதிகளில் இருக்கின்ற பிள்ளைகளின் செயற்பாடுகளை நிறுவகித்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கு தேவையான இப்பதவிகளில் அதிக அளவு வெற்றிடங்கள் இருத்தல் தொடர்பாக கல்வி அமைச்சு கவனம் செலுத்தி இருக்கவில்லை.	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 02/2020 ஆம் இலக்க 2020 ஒக்தோபர் 26 ஆம் திகதிய சுற்றிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்களின் ஓய்வுபெறுதல், சேவையை விட்டுச் செல்லல், ஏனைய பதவிகளுக்கு விடுவித்தல் போன்ற காரணங்களினால் இப்பதவிகளில் வெற்றிடங்கள் உருவாகியுள்ளன. அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளை மீளாய்வு செய்வது சம்பந்தமாக அமைச்சரவையினால் நிமித்த உத்தியோகத்தர் குழுவினால் உதவி உதவி மாணவர் விடுதி அத்தியட்சகர்கள் பதவிகளுக்கு 80 நபர்களை மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. புதிய ஆட்சேர்ப்புக்கள் சிபாரிசு செய்யப்பட்டு 2025 மார்ச் 27 ஆந் திகதியே வேண்டுகோள் விடுக்கப்பட்டதுடன் அதற்காக அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அப்பதவிக்காக புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு இந்த வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.	நிறுவனத்தின் குறிக்கோள்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு முடியுமான வகையில் மனித வளங்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	தேசிய பாடசாலைகளுக்கு 338 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் அனைத்து பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அவ்வாறே 554 ஆய்வுகூட உதவியாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் 390 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டது. அதற்கிணங்க பிள்ளைகளுக்கு செயன்முறை விஞ்ஞான ரீதியான	அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையினை மீளாய்வு செய்தல் மற்றும் ஆளணியினரை முகாமைத்துவம் செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவிற்கு புதிய ஆட்சேர்ப்புக்கள் சிபாரிசு செய்யப்பட்டு 2025-03-27 ஆம் திகதி வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன்	நிறுவனத்தின் குறிக்கோள்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் சுற்றறிக்கையின் மூலம் ஆட்சேர்த்தல் பொதுவாக நிறுத்தப்பட்டிருந்தும் அத்தியாவசியமான பதவிகள் தொடர்பாக மீளாய்வினை

அறிவினை முறைப்படியாக வழங்குதல், பாடசாலை ஆய்வுகூடங்களை நிருவகித்தல், பராமரித்தல், செயற்படுத்தல் என்பவை தொடர்பான பிரச்சினை உருவாகியிருந்தது.	அதற்கான அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அந்த 338 பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. ஆய்வுகூட உதவியாளர் பதவிக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 02/2020 ஆம் இலக்க 2020-10-26 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தின் ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. உத்தியோகத்தர்களின் ஓய்வு பெறுதல், சேவையை விட்டுச் செல்லல், ஏனைய பதவிகளுக்கு விடுவித்தல் ஆகிய காரணங்களால் இப்பதவி வெற்றிடங்கள் உருவாகியுள்ளன	மேற்கொண்டு அதற்கிணங்க அரசாங்க சேவையிலுள்ள அத்தியாவசியமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு இடம் பெறுவதனால் இப்பதவிகள் தொடர்பாகவும் மீளாய்வுடன் விடயங்களைக் காட்டி விசேட குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆட்சேர்ப்பிற்கு நடவடிக்கை எடுத்து விடுதி மாணவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல் வேண்டும்.